REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2020 டிசம்பர் 17 வியாழக்கிழமை
THINAKARAN
வரு. 88 இல. 299 | December 17,Thursday, 2020 | 16பக்கங்கள் | 30/-






## ஜனாதிபதியின் "சுபீட்சத்தின் நோக்கு" திட்டம்; கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்த ஆளுநர் உறுதி

### ஆளுநர் அனுராதா யகம்பத் தலைமையில் நேற்று மாகாண அபிவிருத்தி திட்ட மாநாடு



மட்டக்களப்பு சுழற்சி நிருபர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கமைய நிலைபேறான அபிவிருத்தி திட்டங்களை கிழக்கு மாகாணத்தில் அமுல் நடத்துவதற்கு கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

இம் மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் அடங்குகின்றன. இம்மாவட்டங்களின் சுபீட்சத்திற்காக ஜனாதிபதியின் கொள்கை திட்டத்துக்கமைய அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கும் விசேட மகாநாடு நேற்று (16) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யகம்பத் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் துஷித பீ.வணிகசேகர, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே கருணாகரன், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எஸ் பண்டார உட்பட மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாண திணைக் களங்களின் பணிப்பாளர்கள், மாவட்ட பணிப்பாளர்கள் உட்பட அரச திணைக்களங்களில் உயரதிகாரிகள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த நிகழ்வினை ஆரம்பித்து வைத்து கிழக்கு மாகாண ஆளுநர் கருத்துரை வழங்குகையில், ஜனாதிபதியின் தூர நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டம் இந்நாட்டில் வறுமையை ஒழிக்கவும் பின்தங்கிய பகுதிகளை அபிவிருத்தி செய்யவும் நாட்டுக்கு முன்னேற்றகரமான திட்டங்களை

06

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மூலமாக நிதியுதவி;

## தொற்றாளர் அதிகரிப்பிற்கு ஏற்ப புதிய சிகிச்சை நிலையங்கள்



### சுகாதார அமைச்சு தீவிர கவனம் என்கிறார் அமைச்சர் பவித்ரா

லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் வைரஸ் தொற்று தடுப்புக்கான புதிய சிகிச்சை நிலையங்களை ஸ்தாபிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கவனம் செலுத்தி உள்ளார்.

அதற்கான நிதி உதவிகளை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் நேற்றைய தினம் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் அமைச்சில் நேற்று

06

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர்

## அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைக்கு பாராட்டு

### பேராயர் ரஞ்சித் ஆண்டகை பிரதமருக்கு நன்றி



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரச்சினைகளை தீர்த்து அவர்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தை பாராட்டுவதாக பேராயர் கர்தினால் மெல்கம்

06

## தற்போதுள்ள நிலைமையில் பண்டிகை காலத்தில் முடக்கம் தேவையற்றது

### மேலும் ஒரு வாரம் உள்ளதால் அவசரப்படத் தேவையில்லை



லோரன்ஸ் செல்வநாயகம்

நீண்ட நத்தார் வார இறுதியில் மேற்கு மாகாணத்தில் நுழையவோ அல்லது வெளியேறவோ, மாகாணத்திற்குள் ஊரடங்கு உத்தரவினையோ அல்லது முடக்கலை விதிக்கவோ, பயணக்கட்டுப்பாடுகளைவிதிக்கவோ விரும்பவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. கொரோனா தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின்

06

அதிகரித்துவரும் வீதி விபத்துக்கள்

## சிவிலுடையில் பொலிஸாரை கடமையிலீடுபடுத்தத் திட்டம்



எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் வீதியில் இருப்பார்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார். தற்போது வீதிகளில் ஏற்படும் விபத்துக்களை

06

## மாலைதீவில் இலங்கையரின் உடல்கள் அடக்கம் செய்வதா?



### முன்னாள் ஜனாதிபதி மமூன் அப்துல் கயூம் எதிர்ப்பு

இலங்கையில் கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மமூன் அப்துல் கயூம் தெரிவித்துள்ளார். மதம் மற்றும் அவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதை பொருட்படுத்தாமல் மாலைதீவிற்கு வரும் வெளிநாட்டு விருந்தாளிகளை வரவேற்கின்றோம். அவர்கள் இங்கு மகிழ்ச்சியாகவும்

06

## வன்னி மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண ஜனாதிபதி உறுதி

### திலீபன் எம்.பி நேரடியாக எடுத்துக் கூறியமைக்கு பலன்



வன்னி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை வன்னிப் பராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேரடியாக தெரியப்படுத்தினார்.

ஜனாதிபதி செயலகத்தில் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனை முன்வைத்துள்ளார். இதன் பிரகாரம் அபிவிருத்தி குழுத் தலைவர்கள் செயற்படுத்தும் வேலைத் திட்டங்களுக்கு அரச அதிகாரிகள் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும், இதன் மூலமே மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர வசதியாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். அத்துடன்,

06

## யாழ் மாநகர சபையின் பட்ஜட் 03 வாக்குகளால் தோற்கடிப்பு





### TNA முதல்வர் ஆர்னோல்ட் பதவியிழக்கிறார்

யாழ். விசேட, பருத்தித்துறை நிருபர்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 03 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தனது பதவியை

06

விக்கல் வீராச்சாமி



தலைவரே, சனம் கொரோனாவால் கஷ்டப்படுது, ஏதாவது பார்த்து உதவி செய்யுங்களேன்.....

அதுதான் நான் 134 அறிக்கை பேஸ்புக்ல விட்டுட்டேன், அதுல 92 பத்திரிகையில வந்திருக்கு, டிவியில 32 பேட்டி போயிருக்கு, இதைவிட என்ன செய்ய...?



# 'மீள்பிறப்பாக்க சக்திவளத்தை' மின் கட்டமைப்புடன் இணைப்பது தொடர்பில் ஜனாதிபதி ஆராய்வு

மீள்பிறப்பாக்க சக்திவள மூலங்களான காற்று, சூரிய வெப்பம் மற்றும் இயற்கை வாயு போன்றவற்றை மின் கட்டமைப்புடன் விரைவாக இணைப்பதற்கான சாத்தியம் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஆராய்ந்துள்ளார்.



இன்று உலகின் பல நாடுகள் மின் உற்பத்தியில் மீள்பிறப்பாக்க சக்தி வளத்தைப் பயன்படுத்துவதை நோக்கி நகர்கின்றன.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை திட்டத்தின் படி, 2030 ஆம் ஆண்டாகும் போது மீள்பிறப்பாக்க சக்தி மூலங்களிலிருந்து மொத்த மின்சார தேவையில் 70% ஐ பூர்த்தி செய்ய அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

மீள்பிறப்பாக்க சக்தி உற்பத்தி குறுகிய கால இலக்குகளுடன் முறையாகவும் விரைவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற மின் உற்பத்தி தொடர்பான கலந்துரையாடலின் போது ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்கால அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதில் அதிகரித்து வரும் மின்சக்தி தேவையை மீள்பிறப்பாக்க சக்தி மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்வது அரசாங்கத்தின் நோக்கமாகும். அதன் முதல் கட்டத்தின் கீழ், மன்னார் தீவில் நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையம் பிரதான மின் கட்டமைப்புக்கு 30 மெகாவோட்டினை வழங்குகின்றது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில், அந்த திறன் 100 மெகாவோட்டாக அதிகரிக்கப்படும். சுன்னாகம் மற்றும் பூனகரி பிரதேசங்களை மையப்படுத்தியும் காற்றாலைகள் நிர்மாணிக்கப்படும். சூரிய சக்தி மற்றும் இயற்கை வாயுவைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் மெகாவோட் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டங்களை செயல்படுத்தும் போது தனியார் துறை தொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்படும் தடைகளை நீக்கி அரசு அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார். ஏனைய நிறுவனங்களிடமிருந்து முன் ஒப்புதல் பெற்று முதலீட்டாளர்களுக்கு வழங்கும் பொறுப்பு மின்சக்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டது.

முதலீட்டு சபையும் மின்சக்தி அமைச்சும் கூட்டாக முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் கண்டு, திட்டங்களை விரைவாக செயல்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சூரிய மின் உற்பத்தி பல திட்டங்களின் கீழ் இடம்பெறுகிறது. ஒரு இலட்சம் சமுர்த்தி குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு, வீடுகளின் கூரைகளில் சூரிய தகடுகளை அமைத்து அவர்களுக்கு வருமானம் கிடைக்கும் வகையில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். இந்த நோக்கத்திற்காக ஒரு வீட்டிற்கு ரூ. 800,000 செலவை அரசாங்கம் ஏற்க வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அமைச்சர் டலஸ் அலகப்பெரும, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ ஜயசுந்தர, மின்சக்தி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா மற்றும் சமபந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# ஜம்மு காஷ்மீரிலிருந்து உணவு உற்பத்திகளை வளைகுடாவுக்கு ஏற்றுமதி செய்ய உடன்பாடு



Lulu குழுமத்தின் பேரங்காடிகளை பயன்படுத்தி வளைகுடா பிராந்தியம் முழுவதற்கும் ஜம்மு மற்றும் காஷ்மீரில் இருந்து விவசாய மற்றும் தோட்ட வேளாண்மைப் பொருட்களை ஊக்குவிப்பதற்கு ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசின் விவசாய மற்றும் தோட்ட வேளாண்மைத் துறையின் முதன்மைச் செயலாளர் நவின் சௌத்தரி மற்றும் Lulu குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் யுசுப் அலி தலைமையிலான முன்னணி முகாமைத்துவ அதிகாரிகளிடையே இடம்பெற்ற சந்திப்பில் பல்வேறு முடிவுகளும் எடுக்கப்பட்டன.

இந்த மாநாட்டின் B2B அமர்வில், ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடைய ஜம்மு மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த முன்னணி தொழில் முயற்சியாளர்கள் உணவு மற்றும் விவசாயத் துறையில் தமது ஏற்றுமதி திறனை காட்சிப்படுத்தினர். அதுபோன்று யூனியன் பிரதேசத்தின் விவசாய மற்றும் உணவு உற்பத்திகளும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

பழங்கள், மரக்கறிகள், குங்குமப்பூ, தேன் மற்றும் மீன் போன்ற இந்தியாவின் முக்கிய இறக்குமதிகளுக்காக ஜம்மு மற்றும் காஷ்மீரை ஊக்குவிப்பதற்காக Lulu குழுமத்தின் திட்டம் மற்றும் கடப்பாட்டிற்காக முதன்மை செயலாளர் தமது பாராட்டை தெரிவித்துக் கொண்டார்.

விரைவில் ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு பயணித்து ஶ்ரீநகரில் அலுவலகம் ஒன்றை அமைப்பதோடு களஞ்சியங்கள் மற்றும் பொதியிடும் வசதிகளுக்கான இடங்களை அடையாளம் காணவிருப்பதாக Lulu குழுமத்தின் தலைவர் தெரிவித்தார். இந்த வசதிகளை ஏற்படுத்துவதற்கு உதவியை வழங்குவதாக முதன்மை செயலாளர் உறுதி அளித்தார்.

விரைவில் கெட்டுப்போகக் கூடிய செர்ரி, பிளம் மற்றும் பேரிக்காய் போன்ற உற்பத்திகளை பதிவுசெய்யப்பட்ட சரக்கு விமானங்களில் ஏற்றுமதி செய்வதற்கு முதன்மை செயலாளர் Lulu குழுமத்தின் தலைமை நிர்வாகப் பணிப்பாளரிடம் உறுதி அளித்தார்.

2021 குடியரசு தின நிகழ்வின் போது வளைகுடா எங்கும் இருக்கும் குழுமத்தின் அனைத்து பேரங்காடிகளிலும் இரு வாரங்களுக்கு "ஜம்மு மற்றும் காஷ்மீர் சிறப்பு" அம்சங்களை நடத்துவதற்கு Lulu குழும தலைவர் வாக்குறுதி அளித்தார்.

இந்த இரு வாரக் கொண்டாட்டம் எதிர்வரும் 2021 ஜனவரி 24 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதோடு இதன்போது உணவு மற்றும் கலாசார பாரம்பரியங்கள் போன்ற ஜம்மு மற்றும் காஷ்மீரின் பிரபல உற்பத்திகள் அனைத்தும் காட்சிப்படுத்தப்படும்.

ஜம்மு மற்றும் காஷ்மீரில் இருந்து ஆப்பிள் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு இதன்போது இணக்கம் எட்டப்பட்டது.



அங்கம்பிடிய, 9வது ஒழுங்கை மற்றும் பாடசாலை வீதியை இணைக்கும் வகையில் நிர்மாணிக்கப்படும் மேம்பாலத்தின் கட்டுமானப் பணிகளை (15) பிற்பகல் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ பார்வையிட்டபோது.





மாதிவெல மேற்கு நகர விவசாய மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவினால் (15) பிற்பகல் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டபோது....

# உலகளாவிய தொற்றுக்கு மத்தியிலும் இலங்கை ஏற்றுமதி வருவாயில் வளர்ச்சி

## முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச



உலகளாவிய கொவிட்19 பேரழிவு காரணமாக கடன் வழங்கும் நாடுகள் கூட ஒரு கடுமையான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில், அரச மற்றும் தனியார் துறையின் தலையீட்டுடன் இந்நாட்டின் ஏற்றுமதி வருவாயில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முடிந்துள்ளது என்று பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குளியாபிட்டிய வடமேற்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் (15) நடைபெற்ற 'கிராமத்துடன் கலந்துரையால் ஊடாக வேலைத்திட்டத்துடன் மீண்டும் கிராமத்திற்கு' தேசிய வேலைத்திட்டத்தின் வடமேல் மாகாண குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும், முழு நாடும் உள்ளடங்கும் வகையில் இணைய தொடர்பாடல் வசதியை பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பொருளாதாரத்தை நிலையாக பேணுவதற்கு அந்நிய செலாவணியை முறையாக நிர்வகிப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய பசில் ராஜபக்ஷ, உலகளாவிய தொற்று நிலைமைக்கு மத்தியிலும் இலங்கை செலுத்த வேண்டிய கடன் தவணையை எவ்வித நிலுவையும் இன்றி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஆண்டில் இலங்கையை அனைத்து துறைகளிலும் முன்னேற்றும் பாரிய எழுச்சிக்கு 'கிராமத்துடன் கலந்துரையால் ஊடாக வேலைத்திட்டத்துடன் மீண்டும் கிராமத்திற்கு' வேலைத் திட்டத்துடன் அதிகபட்ச அர்ப்பணிப்புடன் ஒன்றிணையுமாறு பசில் ராஜபக்ஷ இக் கலந்துரையாடலின் போது வடமேல் மாகாண அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

உலக நிதி தரநிலைப்படுத்தல் நிறுவனங்கள் யாவும் எம்மை திவாலான அரசாங்கமாக பெயரிடுவதற்கு காத்திருந்த சந்தர்ப்பத்தில் நாம் எவ்வித நிலுவையும் இன்றி கடனை செலுத்தினோம். அந்நிய செலாவணி கிடைக்கும் பல வழிமுறைகள் காணப்படுகின்றன. கொவிட்19 தொற்று பரவலுடன் மார்ச் மாதம் 15ஆம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகள் வருகை தரவில்லை. கொவிட்19 காரணமாக ஏற்றுமதி மூலம் பெற்ற வருவாய் குறைந்த போதிலும் அரச மற்றும் தனியார் துறையின் தலையீட்டுடன் அதனை மேலும் முன்னேற்ற முடியுமானதாயிற்று.

அனைத்து துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 2021 வரவு செலவுத் திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஏதேனும் கோரிக்கைகள் வைக்கப்பட்டால், அது குறித்து பரிசீலிக்கப்படும். எதிர்காலத்தில் நாம் பிரதேச அபிவிருத்தி குழுக்கள் அனைத்தையும் 2,122 ஆகிய இரு தினங்களில் கூட்டவுள்ளோம்.


இந்த வரவு செலவுத் திட்டத்தில் கிராமப்புற துறை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. முன்பள்ளிகளின் வளர்ச்சி மற்றும் கல்வி சீர்திருத்தங்களுக்காக பெரும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து பாடசாலைகளிலும், குடிநீர், சுகாதார நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கு இக்குழுக் கூட்டங்களில் தீர்மானிக்க முடியும். தொழில்நுட்பத்தின் அடிப்படையில் நம் நாட்டை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கிறோம். முழு இலங்கையையும் உள்ளடக்கும் வகையில் தகவல் தொடர்பாடலுக்கான வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 12 மாதங்களுக்குள் அவ்வசதிகள் பூரணப்படுத்தப்படும். கிராமப்புற சாலைகள் உட்பட ஒரு இலட்சம் கிலோமீட்டர் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மக்களின் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வாக, 'அனைவருக்கும் நீர்' திட்டம் நாடு முழுவதும் செயற்படுத்தப்படும்.

அதற்கமைய வடமேல் மாகாணத்தின் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வசதியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் பெருந்தொகையான நிதி, இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறைக்காக இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. பொது விளையாட்டு மைதானம், பாடசாலை விளையாட்டு மைதானம் ஆகியவற்றுக்காக 8 ஆயிரம் மில்லியன் ரூபாய்க்கும் அதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தின் போதும் சுற்றாடலை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சகல உள்ளூராட்சி நிறுவனங்களும் இதில் இணைந்து செயற்பட வேண்டும். கிராம மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு பல அமைச்சுக்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இது மிக முக்கிய மைல்கல்லாகும்.

### எல்லை தாண்டும் விவகாரத்தில்

# இந்திய தரப்பு நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு!



எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடி விவகாரத்தில் இந்தியத் தரப்பினரே நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடி விவகாரம் தொடர்பாக பத்திரிகையாளர்களின் கேள்விக்கு மேலும் பதில் அளித்த கடற்றொழில் அமைச்சர்,

அண்மைக்காலமாக இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டும் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் இலங்கை கடற்றொழிலாளர்களும் பொறுமை இழந்து போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைத்திருந்தனர். இதனையடுத்து கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தொடர்பு கொண்டுள்ள இந்தியத் தரப்புக்கள், எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ண சமிக்கையாக கைது செய்யப்பட்டிருக்கின்றவர்களை விடுதலை செய்யுமாறு 06

# இலங்கை முஸ்லிம்கள் மாலைதீவில் வந்து வாழ அரசு அழைக்க வேண்டும்



### காலந்தாழ்த்துவது குறித்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கவலை

இலங்கை முஸ்லிம்கள் மாலைதீவுக்கு வந்து, இங்கு அவர்களின் வாழ்வை முன்னெடுப்பதற்கு நாம் அழைப்பு விடுக்க வேண்டும் என்றே கருதுகின்றேன். எனினும் எமது அரசாங்கம் இன்னமும் அதனைச் செய்யாமை குறித்து ஆச்சரியமடைகின்றேன் என்று மாலைதீவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் துன்யா மஹ்மூன் அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருப்பதுடன், இலங்கை முஸ்லிம்கள் மாலைதீவில் வாழ்வதற்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று தான் கருதுவதாகவும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை அரசாங்கம் மாலைதீவிடம் இத்தகைய கோரிக்கையொன்றை விடுத்திருந்ததா என்ற கேள்விக்கு, அமைச்சரவையில் இதுபற்றி ஆராயப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல பதிலளித்திருந்தார். கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் தமது அன்புக்குரியவர்களுக்கான இறுதிக் கிரியைகளை தமது மத நம்பிக்கையின்படி நடத்துவதற்கு விரும்பும் சிறுபான்மையின முஸ்லிம்களின் உரிமைக்கு இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்' என்று துன்யா மஹ்மூன் அந்தப் பதிவில் வலியுறுத்தியிருக்கிறார்.

## கொரோனா தொற்றுக்கு இலக்காகி மேலும் மூவர் உயிரிழப்பு

இலங்கைக்குள் கொரோனா தொற்றுக்கு இலக்காகி மேலும் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து இலங்கையில் கொரோனா தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 157ஆக உயர்ந்துள்ளது.

கொழும்பு – 14யைச் சேர்ந்த 60 வயது பெண்ணும், கொழும்பு –15 யைச் சேர்ந்த 85 வயது ஆணும், கொழும்பு –15 ச்சேர்ந்த 84 வயது ஆணும் கொரோனாவினால் மரணடைந்ததாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதுவரையில் இலங்கையில் கொரோனாவினால் 33478 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு மாவட்ட கொரோனா தொற்று ஆபத்தால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மேல் மாகாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என தொற்று நோயியல் பிரிவின் விசே வைத்திய நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இல்லையேல் தற்போது கொழும்பு மாவட்டத்திலுள்ள கொரோனா ஆபத்தானது பண்டிகை காலத்தின் பின்னர் நாட்டின் ஏனைய மாவட்டங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா மேலும் பல்வேறு முதலீடுகள்

### சபாநாயகருடனான சந்திப்பில் சீனத்தூதுவர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் வகையில் சீன அரசாங்கம் இலங்கையில் பல்வேறு முதலீடுகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக இலங்கைக்கான சீன தூதுவர் ஷு ஜன்ஹொங் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க டயர் கம்பெனிகளையும் வாகனம் பொருத்தும் தொழிற்சாலைகளையும் இலங்கையில் அடுத்த வருடத்தில் நிர்மாணிப்பதற்கு சீன அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சபாநாயகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வை சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிர்மாணப் பணிகள் நடைபெற்றுவரும் கொழும்பு துறைமுக நகரத்தில் வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் பொருத்தமான முறைமை ஒன்றை உருவாக்குவதற்கு சீன அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அதன்மூலம் கொழும்பு துறைமுக நகரத்தில் வெளிநாட்டு முதலீடுகளை முன்னெடுப்பதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் சீன தூதுவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் தெரிவித்துள்ளார். 06



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜகத் விக்ரமசிங்க பணிப்பாளர் நாயகம் சந்திரபால லியனகே ஆகியோரின் அழைப்பின் பேரில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு 95 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு நேற்று வேலைத் திட்டங்கள் பல நடைபெற்றதால் வெகுசன தொடர்பு ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல செயலாளர் ஜகத் பி. விஜேவீர முன்னாள் பணிப்பாளர் சூலாநந்த பெரேரா ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (படம்: சமன் ஸ்ரீ வெதகே)

## கொரோனா தொற்று; குணமடைந்த நோயாளர் எண்ணிக்கை 25,000 ஐ கடந்தது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 121 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை நேற்றுவரை குணமடைந்த வைரஸ் தொற்று நோயாளர்கள் எண்ணிக்கை 25 ஆயிரத்தை கடந்துள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் மேலும் 785 வைரஸ் தொற்று நோயாளிகள் பூரண குணமடைந்து வீட்டுக்கு திரும்பியுள்ள நிலையில் நேற்று வரை 25 ஆயிரத்து 652 பேர் குணமடைந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் 8,312 வைரஸ் தொற்று 06

# விமான நிலையங்கள், துறைமுகங்கள் ஊடாக வைரஸ் தொற்று நாட்டுக்குள் வருவதை தடுக்க முறையான திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

விமான நிலையங்கள் திறக்கப்படும் நிலையில் விமான நிலையங்கள், துறைமுகங்கள் ஊடாகவும் நாட்டுக்குள் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

விமான நிலையம் திறக்கப்பட்டபின் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் சுகாதார அமைச்சு வழிகாட்டி நெறி ஒன்றை தயாரித்துள்ள நிலையில் அதனை விமான நிலைய நிர்வாகத்துக்கு வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதாரம் தொடர்பான பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஹேமந்த ஹேரத் இது தொடர்பில் தெரிவிக்கையில்;

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்பட்டாலும் அது விமான நிலையம் ஊடாகவும் துறைமுகங்கள் ஊடாகவும் நாட்டுக்குள் வருவதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன.

அதனை கட்டுப்படுத்தும் வகையிலேயே சுகாதார அமைச்சு அதற்கான நெறிமுறைகளை உள்ளடக்கிய வழிகாட்டுதல்களை தயாரித்து விமானநிலைய நிர்வாகத்துக்கு வழங்கியுள்ளது.அதேவேளை, விமான நிலையங்களின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்கும் நபர்களின் மூலம் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்குள் வைரஸ் தொற்று ஏற்படுவது தொடர்பில் எமக்கு மிகுந்த அனுபவம் உள்ளது,

இந்த அனுபவங்களை கவனத்தில் கொண்டு உரிய வழிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் எதிர்காலத்தில் விமான நிலையங்கள் மூலம் பெருமளவிலானோர் 06

### நீதிமன்ற அவமதிப்பு சம்பவம்

# ரஞ்சனுக்கு எதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு


நீதிமன்ற அவமதிப்பு சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நேற்று (16) உயர்நீதிமன்றில் அழைக்கப்படவிருந்த நிலையில் குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

குறித்த மனு சிசிர த ஆப்ரு, விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்ணான்டோ ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று (16) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருந்தது.

எனினும், நேற்று முன்தினம் (15) உயர் நீதிமன்ற வளாகத்தில் ஏற்பட்ட தீப்பரவல் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் காரணமாக நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்த அனைத்து வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, முன்னாள் 06

# அப்துல்லா மஹ்ரூப் விளக்கமறியலில்!



முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் உட்பட இருவருக்கு நாளை today வரை விளக்கமறில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2015 – 2019 க்கு இடையில் லங்கா சதோசவின் வாகனங்களை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த இருவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த இருவரையும் நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# உட்கட்டமைப்பு வசதிகளுக்கு தனியார் துறையின் ஒத்துழைப்பு பெற தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கட்டுநாயக்க விமான நிலையம் திறக்கப்பட்டு பெருமளவில் உல்லாசப் பிரயாணிகள் நாட்டுக்கு வருவார்களானால் அதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக தனியார் துறையினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அது தொடர்பில் நேற்றைய தினம் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவிக்கையில்;

விமான நிலையம் திறக்கப்படும் நிலையில் பெருமளவிலான உல்லாசப்பிரயாணிகள் நாட்டுக்கு வருகை தருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதும் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தனியார் துறையினருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் இப்போது தனியார் துறையினரின் ஒத்துழைப்புடனேயே பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எவ்வாறெனினும் அரசாங்கம் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு அரசாங்கத்தின் செலவிலேயே பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கிணங்க எதிர்காலத்தில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் போது அதற்கேற்ப 06

## கோர விபத்து குழந்தையும் தாயும் பரிதாப பலி; 08 பேர் கைது

அனுராதபுரம் பாதெனிய வீதியில் பஹலபலல்ல பகுதியில் கெப் ரக வாகனம் ஒன்று மோதியதில் தாயும் குழந்தையும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் குறித்த கெப் ரக வாகனத்தில் 11 பேர் பயணித்துள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் 8 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் வாகன ஓட்டுனர் உட்பட மூவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சிவனொளிபாத யாத்திரைக்கு முதல் தடவையாக அரச அனுசரணை

### வீதியோர பூஜைகள் இல்லை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

சிவனொளிபாத மலை யாத்திரை இம்முறை முதற்தடவையாக அரசின் அனுசரணையோடு நடத்தப்பட உள்ளது. இதற்கு முன்னேற்பாடாக புனித புத்தர் சிலை மற்றும் புனித பூஜை பொருட்களுடனான பெரஹரா யாத்திரை எதிர்வரும் 27 ஆம் திகதி இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து சிவனொளிபா த மலை புனித தலத்தை சென்றடைவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 06

## ஒரு தொகை 5000 ரூபா போலி நாணயத்தாள்கள் பொலிஸாரினால் மீட்பு

குருணாகல், கோகரெல்ல பகுதியில் நூறு 5000 ரூபா போலி நாணயத்தாள்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

அத்துடன் இந்த பறிமுதல் நடவடிக்கையின்போது பொலிஸார் 22 மற்றும் 23 வயது இரு சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

போலி நாணயம் அச்சிடல் மற்றும் அது தொடர்பான விடயங்களை அறிந்தால் 0112422176 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 137.53 | 144.04 |
| கனடியன் டொலர் | 143.06 | 149.40 |
| யூரோ | 222.64 | 230.50 |
| ஜப்பான் யென் | 1.7549 | 1.8368 |
| சிங்கப்பூர் டொலர் | 137.05 | 142.73 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 244.76 | 253.02 |
| சுவிஸ் பிராங்க் | 205.40 | 213.98 |
| அமெரிக்க டொலர் | 184.57 | 188.97 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 493.34 | கட்டார் ரியால் | 51.08 |
| குவைத் டினார் | 611.20 | சவூதி ரியால் | 49.59 |
| ஓமான் ரியால் | 483.15 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.64 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் காத்திகை மாதம் 31ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரபீஉனில் ஆகிர் பிறை 30

### குறள் தரும் சிந்தனை



பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை

ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும்; பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும், அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.

# சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் கருத்துகள்!

இலங்கையில் கொவிட்19 தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதாவது கடந்த மார்ச் மாதம் தோற்றம் பெற்ற இத்தொற்றின் முதலாவது அலையில் இதற்கு உள்ளானவர்களாகப் பதிவானவர்களை விடவும், தற்போது இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவானவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களை விரைவாகவும் துரிதமாகவும் இனம் காணும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் விரிவுபடுத்தப்பட்ட ஏற்பாடுகளே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

தற்போது இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதைப் போன்று இத்தொற்றுக்குள்ளாகி குணமடைந்து வீடு திரும்புகின்றவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதையும் மறந்து விட முடியாது. அதாவது கடந்த மார்ச் நடுப் பகுதி முதல் இற்றை வரையும் 34,121 பேர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகியுள்ள போதிலும், அவர்களில் 24,867 பேர் குணமடைந்துள்ளனர். சுகாதார அமைச்சின் தரவுகளின்படி தற்போது 9100 பேர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இருப்பினும் இத்தொற்றின் பரவுதலைத் துண்டிப்பதற்காக சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப விரிவாகவும் பரவலாகவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான சூழலில் கொவிட் 19 தொற்றைத் தவிர்த்துக் கொள்ளவும் அவற்றிலிருந்து குணமடைந்து கொள்ளவும் பயன்படுமென சில மூலிகை மற்றும் ஆயுர்வேத மருந்துகள் தொடர்பான தகவல்கள் சமூக வலைத்தலங்களில் பரப்பப்படுகின்றன. ஆனால் இத்தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் உண்மை நிலை தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ளன. ஏனெனில் கொவிட் 19 தொற்று உள்ளிட்ட எந்தவொரு நோய்க்கும் சிகிச்சை பெறும் போது அச்சிகிச்சை மற்றும் மருந்து பொருட்கள் தொடர்பில் முன்கூட்டிய மருத்துவ விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளின் உறுதிப்படுத்தல்கள் இன்றியமையாததாகும்.

இந்த நிலையில்தான் சுதேச மருத்துவ ஊக்குவிப்பு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் மக்கள் சுகாதார இராஜாங்க அமைச்சு, 'கொவிட் 19 தொற்றாளர்களுக்கு பயன்படுத்தக் கூடியது என சமூக வலைத்தலங்களில் வலம் வரும் மூலிகை மற்றும் சுதேச மருந்துகளை பயன்படுத்த வேண்டாம்' என்று மக்களிடம் கேட்டுள்ளது. அத்தோடு இவ்வமைச்சின் செயலாளர் திருமதி குமாரி வீரசேகர, 'கொவிட் 19 தொற்றுக்கு பயன்படுத்தத் தரமானது எனக் குறிப்பிட்டு வலம் வரும் மூலிகை மருந்துகள் தொடர்பில் எதுவித மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவில்லை' என்றும் 'ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவ சிகிச்சைகளுக்காக ஒரு மருந்தை தயாரிக்கும் போது அதற்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுவது மிக முக்கிய விடயம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது காலத்திற்கு மிகவும் அவசியமான அறிவிப்பாகும். ஏனெனில் கொவிட் 19 தொற்று தவிர்ப்பு தொடர்பில் சமூக வலைத்தலங்களில் பலவிதமான மூலிகை மருந்துகள் வலம் வருகின்றன. ஆனால் அம்மருந்துகள் தொடர்பிலான உரிய அறிவு தெளிவு இன்றியமையாததாகும். அப்போதுதான் உடலாரோக்கியத்திற்கு பொருத்தமற்றவைகளின் பாவனையைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மேலும் மருத்துவ விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்படாத மருந்துகளைப் பாவிக்கும் போது அவற்றின் விளைவாக வேறு தாக்கங்களும் பாதிப்புகளும் கூட ஏற்படலாம். ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் முன்பை விடவும் உணவு பழக்கவழக்கங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பெரும்பாலானவர்கள் ஆங்கில மருத்துவத்திற்கே பழக்கப்பட்டும் உள்ளனர். அதனால் விஞ்ஞான ரீதியில் பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்படாத மூலிகை மருந்துகளைப் பாவிப்பது ஆரோக்கியத்திற்கு பொருத்தமானதல்ல. இவ்விடயம் தொடர்பில் முன்னவதானத்துடனும் முன்னெச்சரிகைகளுடனுமே செயற்பட வேண்டும்.

அதேநேரம் சமூக வலைத்தளங்களில் வலம் வரும் மூலிகை மருந்துகள் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அதன் ஊடாக மூலிகை மருந்துகள் தொடர்பில் மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய தவறான அபிப்பிராயங்களையும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆகவே அமைச்சு விடுத்துள்ள வேண்டுகோளுக்கு ஏற்ப தற்போதைய சூழலில் கொவிட் 19 தொற்றுக்கு பயன்படுத்தக் கூடியது என சமூக வலைத்தலங்களில் வலம் வரும் எந்த மூலிகை மருந்தையும் பாவிப்பதை தவிர்த்துக் கொள்வதோடு இம்மருந்துகள் தொடர்பில் மருத்துவ விஞ்ஞான ரீதியிலான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியாகும் வரையில் விழிப்புணர்வும் முன்னவதானமும் மிகவும் அவசியமானது. இவ்விடயத்தில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்தி செயற்படுவதோடு சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப கொவிட் 19 தவிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் தவறக் கூடாது.

editor.tkn@lakehouse.lk

# தமிழகத்தில் சூடு பிடித்தது சட்டசபை தேர்தல் களம்!



தமிழ்நாடு மாநில சட்டசபைக்கு அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறப் போகின்ற தேர்தல் தொடர்பான பரபரப்பு இப்போதே தீவிரமடைந்து விட்டது. தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆகியவற்றைத் தவிர பலம் வாய்ந்த மாற்று அணிகள் களத்தில் இறங்கியுள்ளதால் தமிழக மாநில தேர்தல் களம் இம்முறை பரபரப்பாக அமையப் போகின்றது.

இதேவேளை தமிழக சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி தொடரும் என்று கூறிய பா.ஜ.க மாநில தலைவர் எல். முருகன், எடப்பாடி பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக ஏற்பது குறித்து பா.ஜ.க தேசிய தலைமை முடிவு செய்து அறிவிக்கும் என்றார்.

தமிழகம் முழுவதும் நேற்று (16ம் திகதி) முதல் 21ம் திகதி வரை ஆயிரம் சிறப்பு கூட்டங்களை நடத்தி, மத்திய அரசின் வேளாண் திருத்த சட்டங்களின் நன்மைகள் என்னென்ன என்பது குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்க போகிறோம் என்றார் முருகன்.

இதுஒருபுறமிருக்க, தமிழக சட்டமன்றத் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்பதற்காக நடிகர் ரஜினிகாந்துக்கு 'ஹை டெக்' முறையில் பரப்புரை முன்னேற்பாடுகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. 'ஹோலோகிராபிக்' எனப்படும் முப்பரிமாண காட்சி வடிவில் பரப்புரை, ஹெலிகொப்டரில் பறந்து சென்று பரப்புரை, எல்.இ.டி. திரைகள் கொண்ட வாகனங்கள் மூலம் பரப்புரை என திட்டமிடல்கள் மும்முரமாக இருக்கின்றன. எதிர்வரும் ஜனவரி மாதம் இறுதியில் இருந்தே ரஜினிகாந்த் தேர்தல் பிரசாரத்தை தொடங்கி விடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதல் முறையாக நடிகர்கள் கமல்ஹாசனும், ரஜினிகாந்தும் சட்டமன்றத் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். இதனால் இந்த முறை போட்டி சற்று கடினமாகவும் தேசியளவிலான கவனத்தையும் ஈர்த்துள்ளது. ரஜினிகாந்தை பொறுத்தவரை தனது உடல்நிலையை கருத்தில் கொண்டு தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்கத்தான் விரும்பினார்.

இருப்பினும் அவரது நலன் விரும்பிகளும், அன்பர்களும், ரசிகர்களும் விடுத்த அன்புக்கட்டளை காரணமாக வேறு வழியின்றி அரசியல் பிரவேச முடிவுக்கு வந்துள்ளார். இதனிடையே மருத்துவர்கள் அறிவுரைப்படி மிகுந்த கவனத்துடன் அவரது அரசியல் நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பிரசாரம் என்பது தேர்தலுக்கு இன்றியமையாதது என்பதால் அதில் ரஜினியை எப்படி பங்கேற்க செய்வது என்பது பற்றியும் அவரால் நியமிக்கப்பட்ட பிரத்தியேக குழு ஆலோசித்து வருகிறது.


மாலை நேர பிரசாரங்களை தவிர்த்து ஜெயலலிதா பாணியில் பகல் நேர பிரசாரம் மேற்கொள்ளலாம் என்றும் அந்தப் பிரசாரத்துக்கு சென்னையில் இருந்து ஹெலிகொப்டரில் சென்று விட்டு அன்றைய தினமே ரஜினி சென்னை திரும்பும் வகையிலும் திட்டமிடல்கள் நடந்து வருகின்றன.





## தி.மு.க, அ.தி.மு.க அணிகளுக்கு பலப்பரீட்சையாக கமல், ரஜினி கட்சிகள்

மேலும், தமிழகத்தின் முக்கிய நகரங்களான மதுரை, கோவை, திருச்சி,சேலம், நெல்லை, என இந்த ஊர்களுக்கு மட்டும் ரஜினியை நேரடியாக பிரசாரத்துக்கு அனுப்பி வைத்து விட்டு ஊரகப் பகுதிகளில் முப்பரிமாண காட்சி வடிவில் 'லைவ் ரிலே' செய்யவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர வழக்கம் போல் டிஜிட்டல் ஊடகம் வழியாகவும் பரப்புரை நிகழவுள்ளது. 'மக்கள் சேவை கட்சி' என்ற பெயரில் கட்சி தொடங்கியுள்ளார் ரஜினி.





மக்கள் சேவை கட்சி, என்ற பெயரில் புதிதாக பதிவு செய்யப்பட்ட கட்சி கிடையாது. ஏற்கனவே, 'அனைத்திந்திய மக்கள் சக்தி கழகம்' என்ற பெயரில் ஒரு கட்சியின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை பதிவு செய்த நபர், 'மக்கள் சேவை கட்சி' என்ற பெயரில் அதை மாற்றம் செய்ய இரண்டரை மாதங்கள் முன்பு கோரிக்கை விடுத்து, அது தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுதான் நடந்துள்ளது. இந்த கட்சிக்கு ஆட்டோ சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டில் வெளியான 'பாட்ஷா' திரைப்படத்தில் ஆட்டோ ஓட்டுநராக நடித்தார் ரஜினிகாந்த். ரஜினிகாந்த்தின் திரை உலக வாழ்வில் மிகப்பெரிய ஹிட் திரைப்படம் 'பாட்ஷா'. அதன் பிறகு அவரது மசாலா படங்களின் போக்கு மாறிப் போனது என்று சொல்லலாம். ஆட்டோ ஓட்டுநர்கள் மத்தியில் ரஜினிகாந்தை கொண்டு சேர்த்ததில் மிக முக்கிய பங்கு வகித்தது அந்தப் படம். எனவே ஆட்டோ சின்னம் மிகவும் பொருத்தமானது என்று பல ரசிகர்கள் கருதுகிறார்கள்.

இருப்பினும், ரஜினிகாந்த் விருப்பம் என்பது வேறு ஆக இருந்துள்ளது. அவர் விரும்பியது இரட்டை விரல் சின்னம் என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள். இதை 'ஹஸ்த முத்திரை' என்றும் சொல்கிறார்கள். 2002ஆம் ஆண்டு வெளியான 'பாபா' திரைப்படத்தில் இந்த முத்திரையை ரஜினிகாந்த் கதாபாத்திரம் பயன்படுத்தியது. இமயமலையில் உள்ள பாபா தனக்கு வழிகாட்டி என்கிறார் ரஜினிகாந்த். எனவே இந்த பாபா முத்திரையை பயன்படுத்தினால் வெற்றி உறுதி என்று அவர் நம்புகிறார்.

ஆட்டோ ரிக்ஷா என்பது வருங்காலத்தில் நடைமுறையில் இருக்குமோ இல்லையோ என்பது தெரியவில்லை. உதாரணத்துக்கு சைக்கிள் ரிக்ஷா இப்போது வழக்கொழிந்து போய் விட்டது. அதே போன்ற நிலை ஆட்டோரிக்ஷாவுக்கு ஏற்பட்டால் எதிர்காலத்தில் கட்சி சின்னத்தின் நிலைமை என்ன என்பது ரஜினிகாந்தை சுற்றியிருப்பவர்கள் கேள்வியாக இருக்கிறது.

தமிழகத்தின் இருபெரும் கட்சிகள் தி.மு.க மற்றும் அ.தி.மு.க. இவற்றில் தி.மு.க சின்னம் உதயசூரியன். அ.தி.மு.கவின் சின்னம் இரட்டை இலை. இரண்டும் இயற்கையுடன் தொடர்புடையது. இதற்கு மாற்றம் கிடையாது. இதே மாதிரிதான், இரட்டை விரல் என்றால், ஒரு பக்கம் சென்டிமெண்ட், மறுபக்கம் எப்போதும் மாற்றமில்லாத கைவிரல் போன்ற அறிவியல் காரணமும் இதன் பின்னணியில் இருக்கிறது.

இருப்பினும், இரண்டு காரணங்களுக்காக, தேர்தல் ஆணையம் இந்த சின்னத்தை ஒதுக்கீடு செய்ய யோசிக்கின்றது. ஒன்று□ ஏற்கனவே இதே போன்ற கை சின்னத்தை காங்கிரஸ் கட்சி பயன்படுத்துகிறது. இரண்டு சின்னங்களுக்கு இடையே குழப்பம் ஏற்பட்டு விடக் கூடாது என்பது முக்கியம் என்பதால் தேர்தல் ஆணையம் யோசிக்கிறது. மேலும், ஆன்மீகம் தொடர்புடையது என்றால் அந்த சின்னத்தை தேர்தல் ஆணையம் அனுமதி கொடுப்பது கிடையாது. எனவேதான் யோசித்து வருகிறது தேர்தல் ஆணையம்.

தேர்தல் ஆணையத்திற்கு யோசனைகள் பல இருந்தாலும், ரஜினிகாந்த்தின் முழு விருப்பமும் இரட்டை இலை பாணியில் இரட்டை விரல் என்கிறார்கள். எனவே, தேர்தல் ஆணையத்திடம் எப்படியாவது வேண்டுகோள் விடுத்து இரட்டை விரல் சின்னத்தைப் பெற்று விட வேண்டும் என்பதில் ரஜினி தரப்பு மிகத் தீவிரமாக இருக்கிறது. இப்போது வெளியாகியுள்ள ஆட்டோ சின்னம் என்பது ஒரு வேளை ரஜினிகாந்து விரும்பியது கிடைக்காவிட்டால் பயன்படுத்தக் கூடிய இரண்டாவது தெரிவு சின்னமாக இருக்க கூடும் என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள்.

தமிழக சட்டமன்றத் தேர்தல் திருவிழா இப்போதே களைகட்டத் தொடங்கியிருக்கும் சூழலில், பிரசாரக் களமும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. 'விடியலை நோக்கி ஸ்டாலின் குரல்' என்ற தலைப்பில் தி.மு.கவும், 'வேல் யாத்திரை' என்ற பெயரில் பா.ஜ.கவும், 'சீரமைப்போம் தமிழகத்தை' என்ற முழக்கத்துடன் கமல்ஹாசனும் தேர்தல் பரப்புரையை தொடங்கி விட்டார்கள். இந்நிலையில் தி.மு.கவுக்காக தேர்தல் பிரசாரம் செய்ய நடிகர் சத்யராஜ் மற்றும் இயக்குநர் கரு.பழனியப்பன் ஆகியோர் களமிறங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பா.ஜ.க மற்றும் அ.தி.மு.கவில் ஏராளமான நட்சத்திரப் பட்டாளங்கள் உள்ளதால் அதற்கு சற்றும் சளைக்காத வகையில் தி.மு.கவிலும் நட்சத்திரங்களை களமிறங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல் தி.மு.க முன்னாள் அமைச்சரின் பேரனும், நடிகருமான நந்தாவும் தி.மு.கவுக்காக தேர்தல் பரப்புரை மேற்கொள்வார் எனத் தெரிகிறது.

# தமிழ் இலக்கிய பரப்பில் நான்கு தசாப்த சாதனையாளர் கவிஞர் நீலாபாலன்

தமிழ்க் கவிதை இலக்கியப் பரப்பில் கடந்த நான்கு தசாப்தங்களாகப் பேசப்பட்டு வருகின்ற கவிஞர் கல்முனை பூபால் என்பவரே கவிமாமணி நீலாபாலன். புதிது புதிதான விடயத் தேடல்கள், அருமையாகவும் ஆழமாகவும் சொல்கின்ற சொல் ஆட்சி, படித்தவுடன் புரிந்து கொள்ளக் கூடிய விளக்கமான படிமங்கள், உணர்ந்த பின் பிரமிக்க வைக்கும் குறியீடுகள் என்றெல்லாம் எல்லோரும் விரும்பிப் படிக்கின்ற கவிதைகளை தரும் படைப்பாளர் நீலாபாலன்.

அவருடைய ஒவ்வொரு கவிதையிலும் உயிரிருக்கும். ஒவ்வொரு வரிகளிலும் பொருளிருக்கும், செய்யுள் நடையில் எழுதினாலும், அல்லது புதிதாகப் பிரசவித்தாலும் இவர் எழுதுவது கவிதை. அவை கட்புலனுக்குரியதாக செவிப்புலனுக்குரியதாக மாத்திரமல்லாது ஆழமான உணர்வுகளையும் தொட்டுப் பார்க்கும் ஆற்றலுடையவை.

பொருத்தமான படிமங்களோடு, மயக்கம் தராத குறியீட்டில் கவிதை மொழியினைப் புரிந்து கொண்டு உணர்வுபூர்வமான கவிதைகளைப் படைக்கும் அற்றல் நிறைந்த நீலாபாலன் கவிதை மொழிவதிலும் ஆற்றலும், ஆளுமையும் நிறைந்தவர். பல கவியரங்குகள் இவரது கவிதைப் பொழிவால் களைகட்டி யிருக்கின்றன.

இலக்கியத்துறையில் பன்முகத் திறமையாளரான இவர் கவிதை, சிறுகதை, குறுங்கதை, மெல்லிசைப் பாடல்கள் எழுதியுள்ளதுடன் திறனாய்வாளருமாவார். இவர் பதினைந்து நாடகங்களுக்கு மேல் எழுதி மேடையேற்றி பரிசுகள் பெற்றிருக்கின்றார். கவிமணி நீலாபாலன் மக்கள் கவிஞர். இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் 1990 முதல் 1997 வரையான காலப் பகுதியில் இவர் தொகுத்து வழங்கிய 'கவிதைக் கலசம்' நிகழ்ச்சி வரலாற்று சிறப்பு வாய்ந்தது. .



இதன் ஊடாக பல கவிஞர்களை உருவாக்கி உற்சாகப்படுத்திய தாய்க் கவிஞர் இவர். அது மட்டுமன்றி இலங்கை வானொலியில் 'முத்துப் பந்தல்' என்ற நிகழ்ச்சியின் ஊடாக பல இலக்கியவியலாளர்களை பேட்டி கண்டு அறிமுகம் செய்துள்ளார். இலங்கை வானொலி, ரூபவாஹினியில் பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ள இவர், இதுவரை 80 கவியரங்குகளில் பங்குபற்றியுள்ளார். இலங்கை வானொலியில் பதினைந்து கவியரங்குகளை தலைமை தாங்கி நடத்தியுள்ளார்.

மலையக பெருந்தோட்டத் துறையில் காரியாலய முதல்வராக உத்தியோகம் பெற்று மலையகத்தையே புகுந்தகமாகவும் ஆக்கிக் கொண்டு, 1975ம் ஆண்டிலிருந்து நீலாபாலனாக தொடர்ந்து எழுதிவரும் 'கல்முனைப் பூபால்' 1980களில் உலக கவிதைப் போட்டியொன்றில் முதல் பரிசைப் பெற்றுக் கொண்டார்.

மலையகத்தில் பண்டாரவளை நகரில் கவிதைக்குப் பெருவிழா எடுத்து பல படைப்பாளர்களை பாராட்டி கௌரவித்தார். பாவரசர். கவிமணி, இலக்கிய வித்தகர், தமிழ்மணி, கவிதைப் பரிதி கலைத் திலகம், கலாபூசணம், கவிமாமணி என்று இருபத்திரண்டு பட்டங்கள், விருதுகள் பெற்றுள்ளார்.

ஊவா தமிழ்ச் சங்கத் தலைவராக, கல்முனை புதிய பறவைகள் கவிதா மண்டல முதல்வராக இருந்து வரும் இவரது நூல்கள் 2010இல் இலந்தைப் பழத்துப் பூக்கள், 2013இல் கடலோரத் தென்னை மரம் என நூலுருவாக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செல்லையா பேரின்பராசா

# காற்றாலை மின்னுற்பத்தியில் இலங்கை கூடுதல் அக்கறை

மின்சக்தி துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் மன்னாரில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்திற்கு மேலதிகமான இன்னும் இரு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை எதிர்வரும் காலங்களில் நாட்டின் வெவ்வேறு இடங்களில் நிர்மாணிக்கவுள்ளதாக சூரிய சக்தி காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.



“இலங்கையின் இரண்டாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை வடமாகாணத்தின் பூநகரி பகுதியில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்துள்ளன. திட்டத்தினை விரைவாக ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். சூரிய சக்தியினால் 150 மெகாவோட் மின் உற்பத்தியையும் காற்றாலை மூலம் 240 மெகாவோட் மின் உற்பத்தியையும் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றோம். அதற்கமைவாக மூன்றாவது நிலையமாக இன்னும் 390 மெகாவோட் தேசிய மின் கட்டமைப்போடு சேர்ப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். அதேபோன்று சியம்பலாண்டுவ பகுதியில் சூரிய சக்தியால் இன்னும் 100 மெகாவோட்டினை மக்களுக்கு வழங்க எதிர்பார்க்கின்றோம். ஜனாதிபதி மற்றும் பிரதமருடைய தலைமைத்துவத்தில் காற்றாலை மின் உற்பத்தி மூலம் பெரும் புரட்சியொன்றினை நாம் எதிர்பார்க்கின்றோம். மின்சார சபைக்குச் சொந்தமான மிகவும் பாரிய நிலையமொன்றினை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களின் உபயோகத்திற்காக திறந்து வைத்துள்ளார். அதன் மூலம் எட்டு ரூபாவிற்கு ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். இதன் மூலம் அடையும் நன்மையினை இந்த நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும். அதாவது குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தினை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும்.

**★ இரண்டாவது மின்னுற்பத்தி நிலையம் பூநகரியில்**



ஜனாதிபதி காற்றாலை மின் உற்பத்தி தொடர்பில் நம்பிக்கை வைத்து எமக்கு இலக்கொன்றினை பெற்றுக் கொடுத்துள்ளார். எதிர்வரும் காலப் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி ஊடாக கிடைக்கும் மின் உற்பத்தியை தேசிய மின் கட்டமைப்புடன் சேர்பதன் மூலம் மின்சார நெருக்கடிக்கு தீர்வொன்றினை பெற்றுக் கொடுக்க முடியும்” என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

# அக்கரைப்பற்று பிரதேசத்தில் கொரோனா தொற்று பரவல் தணிந்து செல்லும் அறிகுறி

**அக்கரைப்பற்று பிராந்திய மக்கள் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, தனிமைப்படுத்தலிலிருந்து விடுபட ஒத்துழைப்பு நல்க வேண்டும்.**

அக்கரைப்பற்று சந்தைப் பகுதியில் கடந்த நவம்பர் இறுதி வாரம் மேற்கொள்ளப்பட்ட பீ.சி. ஆர் பரிசோதனையின் மூலம் கொவிட்19 வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு பிரதேசங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நவம்பர் 26ம் திகதி மாலை 06.00 மணி முதல் அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு இன்னும் தளர்த்தப்படாது தொடர்கின்றது. இதனை தளர்த்தி பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதில் சுகாதாரத் துறையினர், பாதுகாப்புப் பிரிவினர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர்.

கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இரவு பகலாக பணியாற்றி வரும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.லதாகரன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர ஜீ.சுகுணன், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பறூஸா நக்பர், அட்டாளைச்சேனை மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன உட்பட சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், இதர உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பணி மகத்தானது என்றால் அது மிகையாது.

இவர்களது பணிக்கு மேலதிகமாக, அக்கரைப்பற்று மாநகர முதல்வர், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு பிரதேச சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், சமய நிறுவனங்களின் நிர்வாகிகள், பிரதேசத்திலுள்ள சமூக சேவை நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள், சங்கங்கள், கழகங்களின் பணிகளும் அளப்பரியன என்பதை மறந்து விடலாகாது.

கொவிட் 19 அக்கரைப்பற்று சந்தை கொத்தணியைத் தொடர்ந்து, இப்பிரதேசத்தில் பதற்றமான சூழல் உருவாகியது எனலாம். எனினும் இதனை சமூகப் பரவலாக்க இடமளிக்காது, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பெருமை சுகாதாரத் துறையினரையே சாரும். இதற்காக பிரதேசத்திலுள்ள ஒவ்வொருவரும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

கொவிட் 19 அச்சம் நிறைந்த பதற்றமான சூழல், கடுங்காற்றுடன் கூடிய அடைமழை, சூறாவளி அபாயம், மின்சாரத் தடை என்பனவற்றுக்கு மத்தியில் சுகாதாரத் துறையினர் ஆற்றிய அர்ப்பணிப்பான பணியின் காரணமாக இன்று நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது எனலாம்.



எனினும் பொதுமக்கள் வழங்கும் உதவி, ஒத்துழைப்பிலேயே நூறுவீத கட்டுப்பாட்டைக் கொண்டு வர முடியும் என்பது சுகாதாரத்துறையினரின் எதிர்பார்ப்பாக உள்ளது. நாட்டையும், மக்களையும் பெரும் அச்சத்திற்குள்ளாக்கி இயல்பு நிலையை சீர்குலைத்துள்ள கொவிட் 19 தொற்றின் பயங்கரத்திலிருந்து எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்ளுதல் அவசியமாகும். இதனையே அரசும், சுகாதாரத்தறையினரும் பொதுமக்களிடம் விடுக்கும் வினயமான வேண்டுகோளாகும்.

**★ கண்டிப்பான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சுகாதார துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது மக்களின் பொறுப்பு**

ஆகையால் அரசும், சுகாதாரத் துறையினரும் நாட்டு மக்களிடமிருந்து எதிர்பார்க்கும் சுகாதார, பாதுகாப்பு விடயங்களில் எவரும் அலட்சியம் காட்டாது, முழுமையான ஒத்துழைப்பு வழங்கி எமதும், ஏனையவர்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும்.

கொவிட் 19 தொற்றுக்கு அதிகம் பாதிக்கப்படுபவர்களாக சிறுவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள் காணப்படுகின்றனர். ஆகையால், பின்வரும் விடயங்களில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பறூஸா நக்பர் கேட்டுள்ளார்.

தொடர்ச்சியாக நடைபெறும் பீ.சி.ஆர். பரிசோதனையில் ஆர்வத்துடன் கலந்து கொள்ளுதல், நாட்பட்ட நோயாளிகள், வயோதிபர்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்துதல், அவர்களுக்கான மருந்து வகைகளை ஒழுங்கு முறையாக வழங்குதல், நல்ல காற்றோட்டமுள்ள இடங்களில் வைத்து அவர்களைப் பராமரித்தல், நோய் எதிர்ப்பு சக்தி அதிகமுள்ள உணவு வகையறாக்களை தாராளமாக வழங்குதல் என்பன முக்கியமாகும்.

கொவிட் 19 தொற்றுப் பரம்பல் பிராந்தியத்தில் கட்டுப்பாட்டு நிலையை அடையும் சாத்தியம் தென்படுவதால் பொதுமக்கள் அரசு மற்றும் சுகாதாரத் துறையினரின் சட்டதிட்டங்கள், சுகாதாரத் துறையினரின் அறிவுரை, ஆலோசனைகள், வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றி நடந்து கொள்வது அவசியம். உரிய தரப்பினருக்கு நிறைவான உதவி,ஒத்துழைப்பு நல்க வேண்டும். அதுவே எங்கள் முன்னுள்ள தார்மீகக் கடமையும், பொறுப்புமாகும்.

கொரோனா வைரஸ் தொற்றின் பரவல். கட்டுப்பாடு தொடர்பில் நாட்டு மக்களை விழிப்படையச் செய்யும் நோக்கில் அவ்வப்போது பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், இவ்விடயங்களில் குறித்த சிலர் நடந்து கொள்ளும் விதம் கவலை கொள்ளச் செய்கின்றது. அரசு மற்றும் சுகாதாரத்துறையினர் வழங்கும் அறிவித்தல், அறிவுறுத்தல்களை அவர்கள் முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளாது அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றனர். இது ஏனையவர்களை வேதனைக்குள்ளாக்கும் செயலாகும்.

சுகாதார நடைமுறைக்கு அமைவாக முகக்கவசம் அணிந்து கொள்ளுதல், அனைத்து சந்தர்ப்பங்களிலும் சமூக இடைவெளியைப் பேணுதல், முறையாக கைகளைக் கழுவிக் கொள்ளுதல், தேவையற்ற ஒன்றுகூடல்களைத் தவிர்த்துக் கொள்ளுதல், உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை ஒழுங்கு முறையாகப் பின்பற்றுவது நமது பாதுகாப்பிற்கும், சமூகத்திலுள்ள ஏனையவர்களது பாதுகாப்பிற்கும் உத்தரவாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

கொவிட் 19 வைரஸ் உடனான கடந்த பலமாத கால அனுபவத்திலிருந்து மருத்துவ உலகம் பல விடயங்களை புதிதாக அறிந்து கொண்டுள்ளது. ஒரு நோயாளிக்கு கொவிட் 19 தொற்று ஏற்படுகின்ற போது, உடம்பில் தொற்றிக் கொள்கின்ற வைரஸின் எண்ணிக்கை அல்லது வைரஸ் தொற்றுதலின் பின்னர் அவர் உடம்பில் உருவாகக் கூடிய வைரஸ்களின் எண்ணிக்கை கூடுதலாக காணப்படுகின்ற போது, பொதுவாக அது அதிகமான நோய்த் தாக்கங்களையும், சிக்கலான நிலைமைகளையும் உருவாக்குவதோடு மற்றவருக்கு மிக விரைவாகத் தொற்றக் கூடிய தன்மையையும், கொண்டதாகக் காணப்படுகின்றது.

குறைவாக காணப்படுகின்ற போது அது சாதாரண தடிமன், காய்ச்சல் போன்ற சிறியளவிலான நோய்த் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. கொரோனாவின் சமூகப் பரம்பல் அதிகரிக்கின்ற பொழுது நிலைமைகள் மாறுபடும். ஒருவருக்கு தொற்றக் கூடிய வைரஸின் அளவைக் கட்டுப்படுத்த முடியாது போகும்.

சமூகப் பரம்பல் அதிகரிக்கின்ற பொழுது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு தொற்றுகின்ற வைரஸின் அளவும் அதிகரிக்கும். அது மனிதர்களுக்கு ஏற்படுத்துகின்ற நோய்த் தாக்கங்களும் அதிகரிக்கும். வைத்தியசாலைகள் நிரம்பி வழியும். இறுதியில் அதிகரித்த மரணங்கள் ஏற்படலாம். இவ்வாறான ஆபத்தான நிலைமை ஏற்படுவதிலிருந்து எங்களையும், எங்களது குடும்பத்தையும், சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்குமுள்ள தலையாய கடமையாகும்.


குறிப்பாக, மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் கொவிட் 19 தொற்று ஒருவருக்கு ஏற்பட்டால் ஓரிரு மணித்தியாலங்களில் மிக விரைவாகப் பரவி விடும் அபாயம் காணப்படுகின்றது. அதன் காரணத்தினாலயே இந்நோய் தொடர்பில் இறுக்கமான பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.



டொக்டர் லதாகரன்



டொக்டர் சுகுணன்



டொக்டர் பறூஸா நக்பர்

ஐ.எல்.எம்.றிஸான்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

# முஸ்லிம்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு ஜனாஸா நல்லடக்கத்துக்கு இடமளிக்க வேண்டும்

**அரசாங்கத்தின் பதவிக் காலத்தின் முதல் வருடம் மூன்று வாரங்களுக்கு முன்னர் நிறைவாகி இருந்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கொடிய யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் அபிவிருத்தித் திட்டங்கள் தடையின்றி முன்னெடுக்கப் பட்டன.**

நாடு பூராகவும் வீதிகள் புனரமைக்கப்பட்டதுடன் அபிவிருத்திப் பணிகளும் நடைபெற்றன. பாலங்களை அமைத்ததன் மூலம் வீதிப்போக்குவரத்து இலகுவாக்கப்பட்டது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றம் செய்ததுடன், அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் மலையக மக்களின் அடிப்படைத் தேவைகளிலும் கவனம் செலுத்தப்பட்டது.

வேலையற்ற பட்டதாரிகள் ஒவ்வொரு அரசாங்க காலத்திலும் வேதனையின் விளிம்பில் ஏமாற்றப்பட்டவர்களாகவே காணப்பட்டார்கள். அம்முறை மாற்றப்பட்டு வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்க ப்பட்டுள்ளது.

மௌலவி ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பலஸ்தீன மக்களுக்காக குரல் கொடுக்கப்பட்டது. இதனால்தான் பெரும்பான்மையான மக்கள் ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளனர்.ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் சமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலணியின் தலைவரும் பொதுஜன பெரமுனையின் ஸ்தாபகருமான பசில் ராஜபக்ஷ ஆகிய நால்வரும் இந்நாட்டின் தூண்கள் ஆவர்.

தீவிரமாகப் பரவி வரும் கொவிட்19 தொற்றுக்கு மத்தியில் பல சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம்

நாட்டு மக்களுக்கு பல்வேறுபட்ட சேவைகளை மேற்கொண்டு வருகிறது. உலகின் வல்லரசுகளே இந்த வைரஸைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் போது அரசாங்கம் அதனைக் கட்டுப்படுத்த காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.



இலங்கை வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் செய்யாத சேவைகளை செய்து கொண்டிருக்கின்றது. அதாவது உலகளவில் பார்க்கும் போது குறைந்த கல்வித் தகமை உடையோர்களுக்கு அரசாங்க தொழில் வாய்ப்பு வழங்கப்படுவது இலங்கையில் இதுவே முதல் தடவை ஆகும்.

மேலும் தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுவதற்குரிய வேலைகள் செய்யப்படுகின்றன.

காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்கப்படுகின்றன. பெருந்தொட்ட தொழிலாளர்களுக்கு ஒரு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இளைஞர்,யுவதிகளுக்கான விளையாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு 8264மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கான வீடமைப்பு கடன் வட்டி வீதம் 7 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பல்வேறுபட்ட சேவைகளை பேதமின்றி அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இந்நிலையில் இலங்கை முஸ்லிம்களின் மனஉணர்வுகளை புரிந்து கொண்டு கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்குமாறு அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

எம்.ஐ.எம்.ஜிப்ரி (BA),LLB

## இந்திய தரப்பு நல்லெண்ணத்தை... (03ஆம் பக்கத் தொடர்)

கோரியுள்ளதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், உண்மையில் இந்தியத் தரப்பினரே எல்லை தாண்டும் செயற்பாடுகளை நிறுத்தி தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட தொழில் முறையை இந்திய மீனவர்கள் பயன்படுத்துவதால் கடல் வளம் பாதிக்கப்பட்டு எதிர்கால இலங்கை இந்திய சந்ததியினருக்கு வாழ்வாதரப் பிரச்சினை ஏற்படாமல் கடல் வளத்தை பாதுகாக்க வேண்டும் எனவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் பொருளாதார... (03ஆம் பக்கத் தொடர்)

அதேவேளை 600 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் டயர்தொழிற்சாலையை ஒத்ததாக மேலும் டயர் தொழிற்சாலை ஒன்றை மத்துகம பகுதியில் நிர்மாணிக்க சீன அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் வாகனங்களை பொருத்தும் தொழிற்சாலை ஒன்றை அடுத்த வருடத்தில் நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய ஒத்துழைப்பபை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது சீன பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்யுமாறு சபாநாயகர் உள்ளிட்ட தூது குழுவினருக்கு சீன தூதுவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் சீன அரசாங்கம் ருகுணு பல்கலைக்கழக அபிவிருத்திக்காக வழங்கும் நிதி உதவியை அதன் உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேனவிடம் சீன தூதுவர் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## கொரோனா தொற்று;... (03ஆம் பக்கத் தொடர்)

நோயாளிகள் நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளிலும் மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவித்தது. (ஸ)

## விமான நிலையங்கள்,... (03ஆம் பக்கத் தொடர்)

நாட்டுக்குள் பிரவேசிக்கும் போது அதற்குப் பொருத்தமான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## உட்கட்டமைப்பு வசதிகளுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் தனியார் துறையினரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## ரஞ்சனுக்கு எதிரான மனு... (03ஆம் பக்கத் தொடர்)

இராஜாங்க அமைச்சருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு விசாரணையும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மாலைதீவில் இலங்கையரின் உடல்கள்...

அமைதியாகவும் இருக்கவேண்டும் என விரும்புகின்றோம் என முன்னாள் ஜனாதிபதி டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஆனால் வெளிநாட்டில் உயிரிழுந்தவர்களின் உடல்களை இங்கும் புதைப்பதற்காக கொண்டுவருவதை என்னால் ஆதரிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரசினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்வதற்கு இலங்கை விடுத்த வேண்டுகோளை பரிசீலிப்பதாக மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளதை தொடர்ந்தே முன்னாள் ஜனாதிபதி தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

## வன்னி மக்களது பிரச்சினைகளுக்கு...

நீண்ட காலமாக மக்கள் வாழும் காணிகளில் இருந்து வன வளத்திணைக்களம் வெளியேறுமாறு கூறுவதால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இதனை செவிமெடுத்த ஜனாதிபதி இவ்வாறான நிலை காணப்படும் பட்சத்தில் அதனை சீர் செய்வது தொடர்பிலும் உத்தரவாதமளித்துள்ளார். இவ்வாறு பல்வேறு விடயங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் ஜனாதிபதியின் கவனத்திற்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கொண்டு சென்றுள்ளார்.

## யாழ் மாநகர சபையின் பட்ஜட்...

இழக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டிக்கான வரவு – செலவுத் திட்டம், மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்டினால் கடந்த 2ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தச் சமர்ப்பணத்தின்போது, அதற்கு ஆதரவாக 19 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டு முதலாவது வாசிப்பு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையிலறு (புதன்கிழமை) காலை இடம்பெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 03 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு – செலவுத் திட்டத்திக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 13 உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 10 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு – செலவுத் திட்டத்திக்கு எதிராக வாக்களித்தனர்.

இதனால் யாழ் மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவு திட்டம் தேற்கடிக்கப்பட்டதன் காரணமாக 14 நாட்களுக்குள் யாழ். மாநகர சபையின் புதிய முதல்வர் தெரிவு இடம்பெற வேண்டும் என்பது சட்ட ஏற்பாடாகும்.

## ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டம்...

உருவாக்கவும் வழிவகுக்கின்றது.

இந்த உயரிய நோக்கம் கொண்ட இந்த சுபிட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தி திட்டங்களை அமுல் நடத்துவதற்கு இந்த மாகாணங்களைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் இதனை முன்னுரிமை அடிப்படையில் அமுல் நடத்துவதற்கும் முன்வரவேண்டும் என கேட் டுக் கொண்டார்.

ஆளுநர் அனுராதா யகம்பத் தொடரந்தும் இங்கு கருத்து வழங்குகையில்; பல்வேறு பயனுள்ள வளங்களை கொண்டுள்ள மாகாணம்தான் கிழக்கு மாகாணம். இந்த மாகாணத்தின் வளங்கள் இந்நாட்டின் அபிவிருத்திக்கு இதுவரை காலமும் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை.

இதனை கருத்தில் கொண்டு சுபீட்சத்தின் நோக்கு ஜனாதிபதியின் கொள்கை திட்டத்திற்கு அமைய நிலைபேறான அபிவிருத்தி திட்டங்களில் கிழக்கு மாகாணத்தின் அனைத்து வளங்களும் பயன்படுத்து வதற்கு வழி வகை செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

## தற்போதுள்ள நிலைமையில் பண்டிகை...

தலைவரும், இராணுவத் தளபதியுமான ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், எவ்வாறாயினும், பண்டிகை வார இறுதிக்கு இன்னும் ஒரு வாரம் இருப்பதால் நிலைமை மறுபரிசீலனை செய்யப்படும். தற்போதுள்ள நிலைமை தொடர்ந்தால், எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படாது. எல்லாம் பொது மக்களின் கைகளிலேயே உள்ளது.

அடுத்த ஏழு நாட்களுக்குள் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே எதுவும் அமையும். கொழும்பின் சில பகுதிகள் கடுமையான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. தனிமைப்படுத்தப்பட்ட 13 வீட்டுத் திட்டங்களில், 10 வீடமைப்புத் திட்டங்கள் இந்த வாரம் பூட்டப்பட்ட இடத்திலிருந்து நீக்கப்பட்டன.

அளுத்கம பிரதேச மக்கள் உரியமுறையில் நடந்து கொள்ளவில்லை. இதன்காரணமாக மற்றுமொரு கிராமத்துக்கும் பரவல் ஏற்பட்டுள்ளது என்றும் இராணுவத்தளபதி குறிப்பிட்டுள்ளார்.

# முழு அம்பாறை மாவட்டத்தையும் முடக்குங்கள்!

## மாதாந்த அமர்வில் ஜனாதிபதி, பிரதமரிடம் தவிசாளர் வேண்டுகோள்

**காரைதீவு குறூப் நிருபர்**

கிழக்கிலே அம்பாறை மாவட்டம் குறிப்பாக கல்முனைப் பிராந்தியம் கொரோனாவினால் மிகக்கூடுதலாக பாதிக்கப்பட்டுவருகிறது. 500க்கும் மேல் தொற்றுக்கள். ஒருவர் மரணம். மக்கள் மரண பீதியிலுள்ளனர். தினம் தினம் தொற்று அதிகரித்துவரும் இன்றைய சூழலில் முழு மாவட்டத்தையும் முடக்கி மக்களைக் காப்பாற்றுங்கள்.

இவ்வாறு நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் நேற்றைய சபை அமர்வில் பகிரங்கமாக வேண்டுகோள்விடுத்தார்.

காரைதீவு பிரதேசசபையின் 34ஆவது மாதாந்த அமர்வு நேற்று(16) புதன்கிழமை சபாமண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்:

கொரோனா முதலாவது அலைக்கு முழுநாட்டையும் முடக்கி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தீர்கள். அப்போது இவ்வாறான தாக்கங்கள் இல்லை. ஆனால் இன்று நிலைமை மோசமாகின்றது. நாட்டில் 150க்கும் மேற்பட்ட மரணங்கள்.

கல்முனைப் பிராந்தியத்தில் தினம் தினம் திகிலூட்டும் செய்திகள். மக்கள் மரணபயத்தில் உறைந்துள்ளனர்.

இங்கு பாடசாலைகள் திறந்திருக்கின்றன. மாணவரில்லை. பெற்றோர் பிள்ளைகளை அனுப்பத்தயங்குகின்றனர். பயம் பீதி. அப்படியெனின் எதற்காக பாடசாலை திறக்கப்படுகின்றது?

மாளிகைக்காடு கிழக்கு மக்களைக்காப்பாற்ற சுகாதார அதிகாரியுடனும் பிரதேசசெயலருடனும் பேசியே போக்குவரத்துக்கட்டுப்பாட்டிற்காக கயிறுகட்டினோம். ஆனால் சில விசமிகள் அதனை அறுத்துள்ளமை கவலைக்குரியது. அதாவது எம்மை ஏற்கவில்லையென்பதே கருத்து.

மக்களின் வரிப்பணத்தில் பயணிக்கும் நாம் மக்களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பும் கடமையுமுள்ளது.

ஏழை நலிவுற்றவர்களுக்கு ஒரு லட்சம் வேலைவாய்ப்பை வழங்கும் ஜனாதிபதியின் திட்டம் வரப்பிரசாதமாகும். ஆனால் அதனை வழங்கும் முறை கேவலமாகவுள்ளது. அதாவது அது அரசியலாக்கப்பட்டுள்ளது. பகிரங்கமாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களை வைத்து பிரதேச செயலகத்தில் நியமனங்களை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அடிமட்ட அரசியல்வாதிகளின் வீடுகளில்வைத்து வழங்கப்பட்டமை கவலைக்குரியது. இனியாவது முறையாக வழங்க ஏற்பாடு செய்யுங்கள்.

முஸ்லிம்களின் ஜனாஸாக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். சிறுபான்மையினரை கிள்ளுக்கீரையாக நினைத்து விளையாடுகிறார்கள். அதற்கு தலைவர்கள் இடமளிக்கக்கூடாது என்றார்.

உப தவிசாளர் எ.எம்.யாகீர் உரையாற்றுகையில்:

முஸ்லிம்கள் கலிமாச் சொன்னவர்கள். அவர்களுக்கு நான்கு கடமைகளுண்டு. அதனைச்செய்யவேண்டும். அதனைச்செய்ய உரிமையுண்டு. மதத்திற்குப் பின்னர்தான் அரசியல்.

இலங்கையில் பிறந்த முஸ்லிம்களின் ஜனாஸா இலங்கையில்தான் அடக்கப்படவேண்டும். அதற்காக சம்மாந்துறை மன்னார் போன்ற பிரதேசங்கள் முன்வந்துள்ளன. எனவே இங்கே அடக்க அனுமதியுங்கள்.

மு.கா.உறுப்பினர் எ.ஆர்.எம். பஸ்மீர் பேசுகையில்:

முஸ்லிம்களின் மனங்களை உருக்கும் கோரச்செயல் நடந்து கொண்டிருக்கிறது. ஜனாஸாக்கள் எரிப்பதற்கு எதிராக குரல்கொடுத்த சகோதர எம்.பிக்களான சாணக்கியன் சுமந்திரன் உள்ளிட்டோருக்கு நன்றி கூறுகின்றேன்.

த.தே.கூ.உறுப்பினர் த.மோகனதாஸ் பேசுகையில்:

எமது பிரதேசத்திலுள்ள ஏனைய கடைகளுக்கு லெசன்ஸ்சை நாம் வழங்கும்போது இங்கிருக்கும் மதுபானசாலை எமது லைசன்ஸைப் பெறவில்லை. அதனைப்பெறாமல் அவர்களை அனுமதித்தது யார்? ஆட்டிறைச்சியின் விலை நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்றார்.

மேலும் சில உறுப்பினர்கள் உரையாற்றினார்கள். குப்பைவரி உயர்த்தப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. பெரும்பாலாக அனைத்துப் பிரேரணைகளும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

# பொத்துவில் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று அதி தீவிரம்

**ஒலுவில் விசேட நிருபர்**

பொத்துவில் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று அதி தீவிரமடைந்துள்ளதால் பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறும், தங்களின் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறும், பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எஸ். அப்துல் வாசித் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் மிக வேகமாக கொவிட்19 தாக்கம் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் வீடுகளிலிருந்து வெளியேறுவதை முற்றாக தவிர்க்குமாறும், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதோடு கூட்டமாக ஒன்று கூடுவதையும் தவிர்ந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

மேற்படி விடயங்களைக் கடைப்பிடித்து கொரோனாத் தொற்றிலிருந்து எம்மையும், நாட்டையும் பாதுகாப்பதற்கு பொது மக்கள் ஆகிய உங்களின் அவசியமாகும்.

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுபவர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பொலிஸார் மற்றும் சுகாதார திணைக்கள அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பின்பற்றி பொது மக்கள் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளி பேணி செயற்பட வேண்டும்.

# மஹர சிறை மோதலில் உயிரிழந்த கைதிகளின் சடலங்கள் தகனம்

## வத்தளை நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

மஹர சிறை மோதலில் உயிரிழந்த நான்கு பேரின் சடலங்களை தகனம் செய்ய வத்தளை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மஹர சிறை மோதலில் உயிரிழந்த 11 பேரின் பிரேத பரிசோதனைக்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை (16) மஹர நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் நான்கு பேரின் பூதவுடல்களை அடக்கம் செய்ய இடமளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதல் காரணமாக 11 கைதிகள் உயிரிழந்த நிலையில் அவர்களில் 8 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்து.

அதன்படி, குறித்த நான்கு பேரும் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக குறித்த பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த சடலங்களை தகனம் செய்யாமல் அடக்கம் செய்ய அனுமதி வழங்குமாறு உயிரிழந்த நபர்களின் உறவினர்கள் மற்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிவனொளிபாத யாத்திரைக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

இதன் பிரகாரம் பலாபத்வல குருவிட்ட பலாங்கொடை அவிசாவளை ஆகிய வழிகளில் இந்த பெரஹரா ஊர்வலங்கள் கொவிட் சுகாதார கட்டுப்பாடு நடைமுறைகளுடன் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே ஆகியோரது இணைத் தலைமையில் இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் சிவனொளிபாத மலை புனிதஸ்தல விகாராதிபதி பெங்கமுவே தம்ம தின்ன தேரோ இரத்தினபுரி மாவட்ட செயலாளர்களுக்கு மாலனி லொகு போதாகம உட்பட உயர் அரசாங்க அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். இங்கு பின்வரும் தீர்மானங்கள் இங்கு நிறைவேற் றப்பட்டன.

நான்கு ஊர்வலங்களிலும் கலந்து கொள்ளும் பக்தர்களது எண்ணிக்கையை (1 ஊர்வலத்துக்கு 50 பேர் வீதம்) 200 பேருக்கு கட்டுப்படுத்தல், வாகனங்களது எண்ணிக்கையை கட்டுப்படுத்தல், வீதி நெடுகிலும் வழமையாக நடத்தப்படும் பூஜைகளை இம்முறை நடத்தாதிருத்தல், வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள கடைகளில் கடமையாற்றுவோருக்கு பி.சி.ஆர் பரிசோதனைசெய்தல், ஊர்வல த்தில் கலந்துகொள்ள விரும்புவோ ர் தமது பிரதேச செயலாளரது அனுமதிச் சான்றிதழ் பெறல், நான்கு வீ திகளிலும் தொற்று நீக்கல், தேசிய மற்றும் மேலைத்தேய வைத்திய உதவிகளை வழங்கல் ஆகியனவாகும்.

## தொற்றாளர் அதிகரிப்பிற்கு ஏற்ப...

இடம்பெற்ற கொரோனா வைரஸ் செயற்பாடு தொடர்பான மீளாய்வு குழுவின் கூட்டத்தில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது நாட்டில் தினமும் புதிதாக 500 க்கும் 600 க்கும் இடைப்பட்ட வைரஸ் தொற்று எண்ணிக்கையாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றார்கள்.

அந்த நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் புதிதாக சிகிச்சை நிலையங்களை ஸ்தாபிப்பது தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று அதிக எண்ணிக்கையானவர்களுக்கு சிகிச்சை வழங்கும் வகையில் வசதிகள் கொண்ட ஆஸ்பத்திரிகளை உடனடியாக சுகாதார அமைச்சின் கீழ் சுவீகரித்து அந்த ஆஸ்பத்திரிகளை கொரோனா வைரஸ் சிகிச்சை மத்திய நிலையங்களாக மாற்றுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான நிதியை சுகாதார அமைச்சின் மூலம் பெற்றுக்கொள்ளவும் தேவையான மேலதிக நிதியை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகள் மூலம் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் மேற்படி மீளாய்வு கூட்டத்தில் நேற்று கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளின்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை உள்ளிட்ட மாவட்டங்களை உள்ளடக்கியதாக தினமும் 14000 பிசி ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளபடுவதுடன்3000அன்டிஜன்பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேவேளை ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் டாக்டர்கள் தாதிகள் பொது சுகாதார பரிசோதகர்கள் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் உரிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேவேளை அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களையும் போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சின் செயலாளர் டாக்டர் சஞ்சீவ முனசிங்கவிடம் அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதேவேளை நாட்டில் தினமும் சுமார் 600 புதிய வைரஸ் தொற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டு வரும் நிலையில் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி குணமடையும் நோயாளிகளின் எண்ணிக்கையும் தினமும் 500 ஆக அதிகரித்து வருவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நேற்றைய இந்த மீளாய்வுக் குழுக் கூட்டத்தில் அமைச்சின் மேலதிக செயலாளர் கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் பலரும் கலந்து கொண்டுள்ளனர்

## அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைக்கு...

ரஞ்சித் ஆண்டகை நேற்று 16 தெரிவித்தார்.

2019 உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான தேவாலயங்களின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து பிரதமரின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் நிறைவிலேயே பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான தேவாலயங்களில் காணப்படும் பிரச்சினைகள் அருட்தந்தை லோரன்ஸ் ராமநாயக்கவினால் இச் சந்திப்பின்போது முன்வைக்கப்பட்டது.

கலந்துரையாடலின் நிறைவில் அங்கு கருத்து தெரிவித்த பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை பிரதமரிடம் தெரிவிக்கையில்,

நான் உங்களுக்கும் அரசாங்கத்திற்கும் தனிப்பிட்ட ரீதியில் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுத்து, அவர்களது பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு முயற்சிக்கும் இந்த வேலைத்திட்டத்திற்கு எமக்கு வழங்கிய ஆதரவு தொடர்பில், விசேடமாக இந்த விடயத்தில் தலையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் அமைச்சர்களுக்கும், இராஜாங்க அமை ச்சர்களுக்கும் நான் எனது நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

எமது மக்கள் பாதிக்கப்பட்டமையினாலேயே நாம் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றோம். எதிர்காலத்தில் அவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறாத பாதுகாப்பான இடமாக மாற்றுவதற்கு உங்களது அரசாங்கம் மற்றும் ஜனாதிபதியின் தலையீட்டுடன் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென நாம் நம்புகின்றோம். அது குறித்து நாம் பிரதமர் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். இவ்வாறானதொரு சந்திப்பை ஏற்பாடு செய்தமை குறித்தும் பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன் எனக் குறிப்பிட்டார்.

இதில் கொழும்பு உதவி பேராயர் வணக்கத்திற்குரிய ஜே.டீ.அந்தனி ஆண்டகை, வணக்கத்திற்குரிய அருட்தந்தைமார்களான ஃப்ரீலி முத்துகுடஆராச்சி, ஜுட் சமந்த பெர்னாண்டோ, தவடகே கிஹான் றிட்லி டெரன்ஸ் பெரேரா, லியனகே பட்ரின் லலித் பெரேரா மற்றும் அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## சிவிலுடையில் பொலிஸாரை...

குறைப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது, அனுராதபுரம் – பாதெனிய வீதியில் பஹலபலல்ல பகுதியில் கெப் ரக வாகனம் ஒன்று மோதியதில் தாயும் குழந்தையும் உயிரிழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

குழந்தையுடன் தாய் வீதியைக் கடக்கும்போது அனுராதபுர நோக்கி வந்த கெப் ரக வாகனம் மோதியதில் குறித்த விபத்து நேற்று முன்தினம் மாலை ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றபோது கெப் ரக வாகனத்தில் 11 பேர் பயணித்திருந்தமை தெரியவந்துள்ளது.

அத்துடன் குறித்த சம்பவத்திற்குப் பின்னர் வண்டியின் சாரதி மற்றும் இரண்டு பேர் தப்பி ஓடிவிட்டதாக தெரியவந்துள்ளது. ஏனைய 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் தப்பி ஓடிய நபர்களைக் கண்டுபிடிக்க பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த விபத்து சம்பவத்தில் 32 வயதான தாய் மற்றும் மூன்றரை வயதான குழந்தையும் உயிரிழந்துள்ளமை தெரிய வந்துள்ளது. அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மாஹவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்பு மொரட்டுவ பகுதியில் தாய் மற்றும் இரண்டு மகள்களும் வீதியைக் கடக்கும்போது கவனக்குறைவாக வருகை தந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர் மற்றும் தாய்க்கு பலத்த காயம் ஏற்பட்டது.

இந்நிலையில், கவனக்குறைவாகவும் வேகமாக வாகனம் ஓட்டுவதாலும் வீதி பாதுகாப்பின்மை ஏற்பட்டுள்ளதாக அஜித் ரோஹானா தெரிவித்தார். தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, எதிர்வரும் 20 திகதி முதல் வீதி போக்குவரத்து பாது காப்பிற்காக விசேட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொது போக்குவரத்து சேவைகள் மற்றும் வீதி பாதுகாப்பு ஆகியவற்றில் சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# சர்வதேச செய்திகள்

## ஜெர்மனியில் கொரோனா தொற்று உச்சம்: பொது முடக்கநிலை தீவிரம்

ஜெர்மனியில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிக அளவில் உயர்ந்துள்ளதை முன்னிட்டு கடுமையான முடக்கநிலை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவசிய சேவை வழங்காத கடைகளுடன் பாடசாலைகளையும் மூடும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்திலிருந்து செயல்பாடுகளை நிறுத்திக்கொண்ட உணவகங்கள், மதுக்கூடங்கள், பொழுதுபோக்கு நிலையங்கள் ஆகியவை தொடர்ந்து மூடப்பட்டிருக்கும்.

கிறிஸ்மஸை முன்னிட்டு பொருட்கள் வாங்க பொதுமக்கள் அதிக அளவில் கடைகளுக்குச் சென்றதே வைரஸ் பரவல் அதிகரித்ததற்குக் காரணம் என்று ஜெர்மானி அரச தலைவர் ஏங்கலா மெர்க்கல் தெரிவித்தார்.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட முடக்கநிலை அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை நடப்பில் இருக்கும். எனினும், இம்மாதம் 24ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதி வரை அது தளர்த்தப்படும்.



பொதுமக்கள் அதிகபட்சம் 4 பேர் வரை கிறிஸ்மஸுக்குத் தங்கள் வீடுகளுக்கு வரவழைக்கலாம்.

ஜெர்மனியில் நேற்று கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 27,728 ஆக அதிகரித்திருந்ததோடு மேலும் 952 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த உயிரிழப்பு எண்ணிக்கை ஜெர்மனியில் புதிய உச்சமாக உள்ளது.

எதிர்வரும் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை ஒட்டி ஐரோப்பிய நாடுகள் கட்டுப்பாடுகளை இறுக்கி உள்ளன. பிரான்ஸ் இரவு நேர ஊரடங்கை அறிவித்துள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனிலும் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டிருப்பதோடு இத்தாலியில் தினசரி உயிரிழப்பு அதிகரித்துள்ள நிலையில் கிறிஸ்மஸ் விடுமுறையில் கட்டுப்பாடுகளை அதிகரிக்க அரசு ஆலோசித்து வருகிறது.

## குறுங்கோளிலிருந்து திட்டமிட்டதை விடவும் அதிகமான மண் மாதிரிகள்



ரயுகு குறுங்கோளில் இருந்து ஹயாபூசா–2 விண்கலம் சேகரித்து அனுப்பிய மண் தாங்கள் எதிர்பார்த்ததை விடவும் அதிகம் என்பதால், ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பூமியில் இருந்து 30 கோடி கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இந்த குறுங்கோளுக்கு 6 வருட பயணம் செய்த ஹயாபூசா–2 விண்கலம், மண் மாதிரிகள் அடங்கிய சிறு பெட்டகத்தை பூமிக்கு அனுப்பியது.

அவுஸ்திரேலிய பாலைவனத்தில் இருந்து இந்த பெட்டகம் ஜப்பானின் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு திறக்கப்பட்டது. அதிலுள்ள மண் கோப்பிக் கொட்டையை அரைத்தது போன்று உள்ளது.

அதில் உள்ள கனிமங்களில் இருந்து வெளியாகும் வாயுவையும் விஞ்ஞானிகள் ஆய்வு செய்ய உள்ளனர். இந்த மண் மாதிரியில் இருந்து கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் அண்டம் எப்படி இருந்தது, பூமியில் உயிர்கள் தோன்றுவதற்கும் அதற்கும் தொடர்பு உள்ளதா உள்ளிட்ட பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## உலக செல்வந்தரின் முன்னாள் மனைவி 4 பில். டொலர் கொடை



அமேசன் நிறுவனரான ஜெப் பெசோசின் முன்னாள் மனைவி மெக்கன்சி ஸ்கொட் கடந்த நான்கு மாதங்களில் உணவு வங்கிகள் மற்றும் அவசர நிவாரண நிதிகளுக்கு 4 பில்லியன் டொலர்களுக்கு மேல் நன்கொடை அளித்துள்ளார்.

பெருந்தொற்று காரணமாக நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் அமெரிக்கர்களுக்கு உதவுவதற்கு தாம் விரும்புவதாக அவர் தமது வலைப்பூவில் தெரிவித்துள்ளார்.

உலக செல்வந்தர்கள் பட்டியலில் ஸ்கொட் 18 ஆவது இடத்தில் உள்ளார். அவரது செல்வம் இந்த ஆண்டில் 23.6 பில்லியன் டொலர்களால் அதிகரித்து 60.7 பில்லியன் டொலர்களுக்கு உயர்வடைந்துள்ளது.

அவரது செல்வத்தின் பொரும் பகுதி உலகின் மிகப்பெரிய செல்வந்தரான முன்னாள் கணவர் பெசோஸ் இடம் இருந்து கிடைத்ததாகும். கடந்த ஆண்டு இருவரும் பிரிந்த நிலையில் அமேசன் நிறுவனத்தில் மெக்கன்சிக்கு உள்ள பங்குகளால் அவர் உலகச் செல்வந்தர்கள் பட்டியலில் உள்ளார்.

## உயர் பதவியில் அதிக பெண்களை நியமித்ததற்கு பிரான்ஸில் அபராதம்



பெண்களை மிதமிஞ்சிய எண்ணிக்கையில் உயர் பதவிகளில் அமர்த்தியதற்காக பாரிஸ் நகர அதிகாரிகளுக்கு சுமார் 150,000 வெள்ளி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு உயர் பதவியில் அதிகமான பெண்களைப் பணி அமர்த்தியதால் பாரிஸ், பாலினச் சமத்துவத்தை மீறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் காலக்கட்டத்தில் 69 வீதமான பெண்கள் உயர் பதவிகளில் இருந்தனர். அதனால் பிரான்ஸ் பொதுச்சேவை அமைச்சு பாரிஸ் நகருக்கு அபராதம் விதித்தது.

அமைச்சின் அந்த முடிவுக்கு பாரிஸ் நகர மேயர் அன் ஹடல்கோ வேடிக்கையாக பதிலளித்தார்.

அபராதம் விதித்த செய்தியைக் கேட்டபோது, தமக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்ததாக அவர் கூறினார்.

இருப்பினும் அமைச்சின் முடிவுக்கு அவர் கடுமையான கண்டனம் தெரிவித்தார். இது மிகவும் ஆபத்தானது, நியாயம் இல்லாதது, பொறுப்பற்றது என்று ஹடல்கோ சாடினார்.

துணை மேயர்களோடும் தம்மோடு பணிபுரியும் அனைத்துப் பெண்களோடும் இணைந்து நேரில் சென்று, அரசாங்கத்திடம் அபராதத்துக்கான காசோலையை வழங்கப்போவதாக அவர் கூறினார்.

பிரான்ஸின் நிர்வாகப் பதவிகளில், ஒரு பாலினத்தைச் சேர்ந்தவர்கள் 60 வீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் 2ஆவது கொரோனா தடுப்பூசியின் ஒப்புதலுக்குத் திட்டம்



மொடர்னா நிறுவனத்தின் தடுப்பூசிகள் 94 வீதம் செயல்திறன்மிக்கவை என்றும் அவை பாதுகாப்பானவை என்றும் அமெரிக்க உணவு, மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் மூலம் அமெரிக்காவில் பயன்படுத்த அனுமதிக்கப்படும் இரண்டாவது தடுப்பூசி என்னும் தகுதியை மொடர்னா பெறவுள்ளது.

மொடர்னா தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வதால், தீய பக்கவிளைவுகள் ஏற்படுவது அரிது எனக் கட்டுப்பாட்டு அமைப்பு குறிப்பிட்டது.

30,000 பேரிடம் நடத்தப்பட்ட சோதனையில் அந்தத் தடுப்பூசியின் செயல்திறன் 94 வீதம் எனத் தெரிய வந்தது.

கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவில், பைசர் தடுப்பூசி போடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்காவில் வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 300,000ஐத் தாண்டியதாக ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகம் குறிப்பிட்டது.

இன்று வியாழக்கிழமை மொடர்னா நிறுவனத்தின் தடுப்பூசிகளுக்கு அவசரகால ஒப்புதல் வழங்குவது குறித்து, தடுப்பு மருந்து நிபுணர் குழு சந்திக்கவுள்ளது.

அந்தக் குழுவின் ஒப்புதலும் கட்டுப்பாட்டு அமைப்புத் தலைவரின் முறையான ஒப்புதலும் கிடைத்தால் 24 மணி நேரத்திற்குள் மொடர்னா தடுப்பூசிகளை விநியோகிக்கும் பணி ஆரம்பமாகும்.

## 'செல்பி' எடுக்க முயன்ற பெண் மலையில் இருந்து விழுந்து பலி



அவுஸ்திரேலியாவில் பெண் ஒருவர் செல்பி எடுக்க முயன்றபோது மலை மேலிருந்து விழுந்து மரணமடைந்துள்ளார்.


அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில் உள்ள கிராம்ப்பியன்ஸ் தேசியப் பூங்காவில் அந்தச் சம்பவம் நடந்ததாக சி.என்.என் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

சம்பவம் நடந்த நாளன்று ரோசி லூம்பா என்ற 38 வயது பெண் அவரது கணவருடனும் பிள்ளையுடனும் அங்கு சென்றிருந்தார். அவர் செங்குத்தான மலை மேல் தெரிந்த அழகிய இயற்கைக் காட்சியுடன் சேர்ந்து செல்பி எடுக்க விரும்பினார்.

அவர் அங்கிருந்த எச்சரிக்கைப் பலகைகள், பாதுகாப்பு அம்சங்கள் எதையும் பொருட்படுத்தாமல் தாண்டிச் சென்றதாக சி.என்.என் குறிப்பிட்டது.

அங்கிருந்த கல்லின் மேல் நின்று படம் பிடிப்பதற்குத் தயாரான அவர் கால் தடுமாறி மலையிலிருந்து விழுந்தார்.

## பாகிஸ்தானில் பலாத்காரத்திற்கு எதிரான புதிய சட்டத்தியத்திற்கு ஜனாதிபதி ஒப்புதல்




பாகிஸ்தான் ஜனாதிபதி அரிப் அல்வி பலாத்காரத்திற்கு எதிரான புதிய சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார். புதிய சட்டம் மூலம், பலாத்காரம் தொடர்பான வழக்குகளை வேகமாக விசாரிக்க முடியும்.

பாதிப்புக்கு ஆளானவரின் அடையாளம் வெளியிடப்பட மாட்டாது. பாலியல் குற்றச்சாட்டு குறித்த ஆரம்பக்கட்டப் புலனாய்வை நடத்த நாடெங்கும் பலாத்காரத்துக்கு எதிரான அமைப்புகள் நிறுவப்படும்.

பாலியல் பலாத்காரம் குறித்து ஒருவர் பொலிஸாரிடம் புகார் செய்த ஆறு மணி நேரத்திற்குள், அவரிடம் மருத்துவச் சோதனை நடத்தப்படுவதைப் புதிய சட்டம் கட்டாயமாக்குகிறது. மேலும், நாட்டில் பாலியல் ரீதியான குற்றம் புரிந்தவர்களின் விவரங்களைக் கொண்ட தனிப் பதிவேடுகளும் உருவாக்கப்படும்.

புதிய சட்டம், உடனடியாக நடப்புக்கு வரும். இருப்பினும் அது பாராளுமன்றத்தில் இன்னும் 3 மாதத்திற்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

புதிய சட்டத்தை பிரதமர் இம்ரான் கான் முதலில் முன்மொழிந்தார். கடந்த செப்டம்பர் மாதம் மூன்று பிள்ளைகள் முன்பு தாயார் ஒருவர் கூட்டாகச் சிலரால் பாலியல் பாலாத்காரம் செய்யப்பட்டார். அந்தச் சம்பவம் பாகிஸ்தானில் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவுகட்ட, அரசாங்கம் இன்னும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று, பெண்ணுரிமை ஆர்வலர்கள் குரல் கொடுத்தனர்.

## தடுப்பூசியை பெற ஏழை நாடுகள் காத்திருக்க வேண்டிய நெருக்கடி



அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் கொரோனாவுக்கு எதிரான தடுப்புமருந்தை பெற தயார்நிலையில் உள்ள வேளையில், ஏழை நாடுகள் பல மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் நெருக்கடி உள்ளது.

உலகெங்கும் உள்ள நாடுகளுக்குத் தடுப்புமருந்து அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் உலக சுகாதார அமைப்பால் 'கொவக்ஸ்' திட்டம் உருவாக்கப்பட்டது. இருப்பினும், அது தற்போது 2 பில்லியன் அளவு தடுப்புமருந்துகளையே பெற்றுள்ளது. பணப் பற்றாக்குறையால் திட்டம், கூடுதல் தடுப்பு மருந்துகளைப் பெறும் ஒப்பந்தங்களில் ஈடுபட முடியவில்லை.

ஏழை நாடுகளுக்கும் வசதிபடைத்த நாடுகளுக்கும் இடையில் தடுப்பு மருந்து நியாயமாகப் பகிரப்படும் வாய்ப்புகள் குறைந்துகொண்டே போவதாக நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். கொவக்ஸ் திட்டத்தின் மூலம் தடுப்புமருந்து பெறமுடியாமல் போகலாம் என்பதால் ஏழை நாடுகள் அதற்கான மாற்று வழிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றன.

அடுத்த ஆண்டு உற்பத்தியாகவிருக்கும் 12 பில்லியன் தடுப்புமருந்துகளில் வசதிபடைத்த நாடுகள் 9 பில்லியன் தடுப்புமருந்துகளுக்கு ஏற்கனவே முன்பதிவு செய்துவிட்டன. இதில் சில நாடுகள் மிதமிஞ்சிய அளவில் தடுப்பு மருந்துகளை பெற முன்பதிவு செய்துள்ளன. கொவக்ஸ் திட்டத்தில் போதுமான தடுப்புமருந்துகள் இல்லை என்பதால், ஏழை மக்கள் அதற்காக நீண்ட நாள் காத்திருக்க வேண்டியிருக்கலாம் என உலகப் பொருளாதார மன்றத்தின் சுகாதாரப் பிரிவுத் தலைவர் குறிப்பிட்டார்.

ஏழை நாடுகளுக்காக கொரோனா தடுப்பு மருந்தை உற்பத்தி செய்வதற்கு அறிவுசார் சொத்துரிமை ஒழுங்குமுறையில் சில விட்டுக்கொடுப்புகளை செய்யும்படி உலக வர்த்தக நிறுவனத்தை தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா கேட்டுக்கொண்டுள்ளன. ஆனால் செல்வந்த நாடுகள் அதனைச் செய்ய தயக்கம் காட்டி வருகின்றன.

## உலக வர்த்தக நிறுவனத்திடம் சீனா மீது முறையிடும் ஆஸி.



அவுஸ்திரேலியாவின் பார்லி தானிய இறக்குமதிக்கு, அதிகமான தீர்வை விதிக்கும் சீனாவின் முடிவை மறுஆய்வு செய்யக் கோரி உலக வர்த்தக நிறுவனத்திடம் அவுஸ்திரேலியா அதிகாரபூர்வமாக முறையிடவுள்ளது.

அவுஸ்திரேலிய வர்த்தக அமைச்சர் சைமன் பர்மிங்ஹாம் அதனைத் தெரிவித்தார். அவுஸ்திரேலிய பார்லி தானியம் சீனாவுக்குள் மிதமிஞ்சிய அளவில் இறக்குமதி செய்யப்படுவதாகக் கூறி சீனா அதற்கான தீர்வையை உயர்த்த முடிவெடுத்தது.

அதுகுறித்தும் ஏனைய தீர்வைகள் குறித்தும் முறையான கலந்தாய்வுக்கு அவுஸ்திரேலியா அழைப்பு விடுக்கும் என்று வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார். இவ்வாண்டின் மே மாதம் சீனா, ஆஸ்திரேலியாவின் பார்லி தானிய இறக்குமதிக்கு மொத்தம் 80 வீத தீர்வை விதித்தது.

பார்லி உற்பத்திக்கு உள்நாட்டில் மானியம் வழங்கப்படுவதாகச் சீனா கூறும் குற்றச்சாட்டை அவுஸ்திரேலியா மறுத்து வருகிறது. சீனா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு இடையே அரசியல் பதற்றம் அதிகரித்திருக்கும் நிலையில் அவுஸ்திரேலியாவின் பால் பொருட்கள், இறைச்சி, வைன் மற்றும் ஏனைய பொருட்கள் மீது தடை அல்லது அதிக தீர்வையை சீனா விதித்துள்ளது.

மங்கையர் முற்றம்
சுகந்தி



Ladies Fashion

தற்போது கொரோனா காரணமாக பலரும் வீடுகளிலேயே வீடியோக்களை பார்த்து உடற்பயிற்சிகளை செய்து வருகின்றனர்.

வீட்டில் பயிற்சி செய்வதால் இப்படித்தான் செய்ய வேண்டும் என்றில்லாமல் தங்களது வசதிக்கேற்ப பயிற்சிகளை செய்கின்றனர். இவ்வாறு வீட்டில் பயிற்சிகளை செய்வோர் பலரும் பொதுவாக செய்யும் சில தவறுகளை அறிந்து கொள்வோம்.

உடற்பயிற்சி செய்யும் முன் வோர்ம் அப் செய்வது அவசியம். எடுத்தவுடன் பயிற்சியில் ஈடுபடாமல் சில ஸ்ட்ரெச்சிங் செய்வதால் நீங்கள் செய்யப்போகும் உடற்பயிற்சிக்கு உடல் தயாராகும்.

உடற்பயிற்சி செய்யும் முன் எவ்வகையான பயிற்சிகளை செய்யப் போகிறீர்கள், எத்தனை மணி நேரம் செய்யப் போகிறீர்கள், உடலில் எப் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து பயிற்சியை செய்யப்போகிறீர்கள் என அனைத்தையும் முன்கூட்டியே திட்டமிடுவது அவசியம்.

வீட்டில் பயிற்சிகளை செய்வதால் இப்படித்தான் செய்ய வேண்டும் என இல்லாமல் உங்கள் விருப்பத்திற்கு அந்தப் பயிற்சியை செய்தால் அதற்கு பலன் கிடைக்காது. அந்த பயிற்சியை சரியாக செய்து வந்தால்தான் நன்மை கிடைக்கும்.

சிலர் உடல் எடையைக் குறைக்கும் ஆர்வத்தில் உடற்பயிற்சி யோகா, நடைபயிற்சி என அனைத்தையும் ஒன்றாக செய்வார்கள். அவ்வாறு செய்யாதீர்கள். ஒரு நாளைக்கு ஒன்று என்ற படிமுறையில் செய்யுங்கள்.

# உடற்பயிற்சிக்கு முன் வோர்ம் அப் செய்யுங்கள்



அதேபோல், ஆரம்பத்திலேயே கடினமான பயிற்சிகளை செய்யாமல் சிறு சிறு பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். பலரும் கார்டியோ பயிற்சி மட்டும் செய்வதால் உடல் எடையைக் குறைத்துவிடலாம் என கற்பனை செய்கின்றனர். எனவே அவ்வாறில்லாமல் அனைத்து வகையான பயிற்சிகளையும் மேற்கொள்வது உங்களின் ஒட்டுமொத்த உடலுக்கும் நல்லது.

# பெண்களை தாக்கும் ஒஸ்டியோ பொரோசிஸ்



ஒஸ்டியோ பொரோசிஸ் என்பது நம் உடலில் உள்ள எலும்புகள் எளிதில் உடையக் கூடிய நிலையைக் குறிப்பதாகும். இடுப்புகளை சிரமப்படுத்தி வளைத்து உடற்பயிற்சி செய்தல், கடுமையான யோகா, குளியளறையில் வழுக்கி விழுதல் போன்றவற்றால் இப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆண்களை விடப் பெண்களே இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பெரும்பாலும் பெண்கள் வீட்டுக்குள்ளேயே அதிகம் இருப்பதால் சூரிய ஒளியில் இருக்கும் விட்டமின் D3 அவர்களுக்கு அதிகம் கிடைக்காமல் போய்விடுகிறது. சத்தான உணவில் அக்கறை காட்டாமல் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படுகிறது.

இடுப்பு முழங்கால், முதுகு போன்ற எடை அதிகம் தாங்குகின்ற மூட்டுகளில் அதிக வலி உண்டாகும். முதுகுத் தண்டுவடம் வளையத் தொடங்கும். இவைகளை ஒஸ்டியோ பொரோசிஸின் அறிகுறிகளாகக் கொள்ளலாம். இவ்வகையான எலும்பு தேய்மானம் ஏற்பட்டால் குணமாவதற்கு கால தாமதமாகும். எனவே கர்ப்பிணிப் பெண்கள் ஏதேனும் தொடர் தொற்றுகள், நீரிழிவு இருதய பாதிப்பு, புற்றுநோய் இருப்பவர்கள் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம்.



இன்றைய மருத்துவ வளர்ச்சியில் ஒஸ்டியோ பொரோசிஸ் இருப்பதை எக்ஸ்ரே மற்றும் டெக்சா என்கிற ஸ்கேன் முறையிலும் பி.எம்.டி.(Bone mineral denssity) என்று சொல்லப்படும் எலும்பின் அடர்த்தி அறியப்படும் சோதனைகளாலும் கண்டறிந்து அதற்கான சிகிச்சையை மேற்கொள்ளலாம்.

சத்தான பழங்கள், காய்கறிகள், கீரைவகைள், பால், முட்டை, ஈரல் முதலான கல்சியம், இரும்புச் சத்து மற்றும் D3 உள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். அதற்கான உரிய சில உடற்பயிற்சிகளை மேற்கொள்வதாலும் முறையான மாத்திரைகளாலும் ஒஸ்டியோ பொரோசிலை நிச்சயமாகக் குணப்படுத்த முடியும்.

ஒஸ்டியோ பொரோசிஸுக்கு சிகிச்சையளிக்கும் போது பிற மருந்து, உடற்பயிற்சி, புகைபிடித்தல் மற்றும் குடிப்பதைத் தவிர்ப்பது மிகப்பெரிய பலனை ஏற்படுத்துகின்றன. எலும்பை வலுவாக வைத்திருக்க விட்டமின் D முக்கியம். சத்தான உணவை நாம் புறக்கணித்தால் என்றாவது ஒருநாள் இதுபோன்ற நோய்களுக்கு ஆளாகக்கூடும். அன்றாட உணவில் விட்டமின் டி சத்துக்கள் நிறைந்த காய்கறிகள், பழங்களை சேர்த்து கொள்ள வேண்டும்.



# நெற்றிச் சுட்டி



தலையிலிருந்து தவழ்ந்து, நெற்றியில் அழகாக குவிந்து விழும் இந்த ஆபரணம், உடம்பில் உள்ள வெப்பத்தை கட்டுப்படுத்துகிறது. நெற்றிச்சுட்டி அணியும்போது, தலைவலி மற்றும் 'சைனஸ்' பிரச்சினைகள் சரி செய்யப்படுகிறது.

## ஆரோக்கிய சமையல்

# கோலிஃப்ளவர் சூப்

கோலிஃப்ளவரை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதால் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். ஊட்டச்சத்து அதிகம் கொண்ட கோலிஃப்ளவரை, உணவில் சேர்த்துக் கொள்வதால், உடலை தாக்கும் புற்றுநோய், இதய நோய்கள், பல்வேறு தொற்று நோய்கள் மற்றும் மன அழுத்தத்தால் ஏற்படும் நோய்களில் இருந்து நம்மைக் பாகாத்துக் கொள்ளலாம்.

**தேவையான பொருட்கள்**

துருவிய கோலிஃப்ளவர் - ஒரு கப்
கோலிஃப்ளவர் தண்டு -அரை கப்
கோதுமை மாவு - ஒரு மேசைக்கரண்டி
வெங்காயம் - ஒன்று
பால் - ஒரு கப்
மிளகுத்தூள் - சிறிதளவு
பூண்டு - 5 பல்
நெய் அல்லது எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவைக்கேற்ப

**செய்முறை**

முதலில் கோலிஃப்ளவர் தண்டு, பூண்டு, வெங்காயத்தை மிக்ஸியில் விழுதாக அரைத்துக்கொள்ளவும்.

பாத்திரத்தில் சிறிதளவு நெய் அல்லது எண்ணெய் சேர்த்து, அடுப்பை குறைந்த தீயில் வைத்து, துருவிய காலிஃப்ளவரை வதக்கி உப்பு, மிளகுத்தூள் சேர்த்துப் பிரட்டி தனியாக எடுத்து வைத்துக்கொள்ளவும். பாத்திரத்தில் நெய் அல்லது எண்ணெய் விட்டு, அரைத்த விழுதை சேர்த்துப் பிரட்டி, கோதுமை மாவை சேர்த்துக் கிளறவும்.

இரண்டு நிமிடங்கள் கழித்து ஒரு கப் நீர் ஊற்றிக் கொதிக்கவிடவும். வதக்கி வைத்துள்ள கோலிஃப்ளவர் கலவையை இதில் சேர்த்துக் கொதிக்க விட்டு, பால் சேர்த்துக் கிளறி அடுப்பிலிருந்து இறக்கி பரிமாறவும்.



# பண்டிகைக்கால அலங்காரம்



# இனித் தேவையில்லை மெனிக்யூர், பெடிக்யூர்

உங்களது கைகளும், கால்களும் வெள்ளையாக மாற உங்கள் வீட்டில் இருக்கும் இந்த 3 பொருட்களும் வெறும் 5 நிமிடங்கள் மட்டுமே போதும். பெடிக்யூர், மெனிக்யூரையெல்லாம் தூக்கி போடுங்கள்.

சில பேருக்கு முகம் பார்ப்பதற்கு அழகாக இருக்கும் ஆனால், அவர்களுடைய கைகளும் கால்களும் வெள்ளை நிறத்தில் இருக்காது. இப் பிரச்சினைகளுக்கு நம்மில் பலபேர் அழகு நிலையத்திற்குச் சென்று மெனிக்யூர், பெடிக்யூர் செய்கின்றனர். இதற்காக பணத்தை அள்ளி கொடுக்கின்றர். இனியாவது பணத்தை கொஞ்சம் மிச்சப்படுத்துவோம்.

உங்கள் வீட்டில் சமையலுக்கு பயன்படுத்தும் இந்த 3 பொருட்களை வைத்தே, உங்களது கைகளையும் கால்களையும் நீங்களே அழகுபடுத்திக் கொள்ளலாம்.

முதல் பொருள் எலுமிச்சை பழச்சாறு, இரண்டாவது பொருள் தக்காளி பழச்சாறு, மூன்றாவது பொருள் பேக்கிங் சோடா (சமையலுக்கு பயன்படுத்தும் சோடா உப்பு). முதலில் ஒரு சிறிய கிண்ணத்தில் 2 மேசைக்கரண்டி எலுமிச்சை பழச்சாறு, தக்காளிச் சாறு (உங்கள் கைகளாலேயே பிழிந்து எடுத்த தக்காளிச் சாறு) 4 மேசைக்கரண்டி ஆகிய இரண்டு பொருட்களுடன் ஒரு மேசைக்கரண்டி சோடா உப்பை சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள்.

சோடா உப்பு கொஞ்சம் பொங்கி வரும். அந்த நுரை அடங்கும் வரை நன்றாக கலந்து விடுங்கள். அதன் பிறகு இக் கலவையை ஒரு பருத்தித் துணியில் அல்லது பஞ்சில் தொட்டு உங்களது கையின் மேல் பக்கத்திலோ அல்லது பாதங்களின் மேல் பக்கத்திலோ தடவி விட வேண்டும்.

முதலில் லேசாக தடவி அந்த பஞ்சால் 5 நிமிடங்கள் மெதுவாக வட்ட வடிவத்தில் மசாஜ் செய்து கொடுங்கள். 5 நிமிடங்கள் இந்த ஜெல் உங்களது தோலின் மேல் நன்றாக ஊறட்டும். அதன் பின்பு இரண்டு நிமிடங்கள் மெதுவாக தேய்த்து 2 நிமிடங்கள் மசாஜ் செய்து, குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.





பத்து நிமிடங்களுக்கு முன்பு உங்களது கால் இருந்த நிறத்திற்கும், 10 நிமிடங்களின் பின்பு உங்கள் காலில் இருக்கும் நிறத்திற்கும் மாற்றத்தை நீங்களே காணலாம். உங்களது காலில் அதிகப்படியான அழுக்குகள் இருந்தால் இந்த குறிப்பை பின்பற்றுவதற்கு முன், வெந்நீரில் உப்புக் கல்லை சேர்த்து 10 நிமிடங்கள் உங்களது பாதங்களை ஊறவைத்து நன்றாக துடைத்த பின்பு இச் செய்முறையை செய்யுங்கள்.

சிலபேருக்கு சோடா உப்பு, தோலில் பட்டால் தோல் அரிக்க ஆரம்பிக்கும். உங்களுடைய கையிலோ கால் பகுதியிலோ சிறிதாக இக் கலவையை தடவி பாருங்கள். அரிப்பு இல்லாமல் இருந்தால் மட்டும் உங்கள் சருமத்திற்கு இதைத் தொடர்ந்து பயன்படுத்துங்கள்.

## மாணவிக்கு கொரோனா

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா கற்குழியை சேர்ந்த மாணவி ஒருவருக்கு கொரோனா தொற்று திங்கட்கிழமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் நகர பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. இம் மாணவி வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் கல்விகற்று வருகின்றார். இவர் வேறு நோய் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் அவருக்கு எழுமாறாக பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. மாணவி கடந்த மூன்று மாதங்களாக பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை என பாடசாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது. எனினும் திங்கட்கிழமை பாடசாலைக்கு அவர் சென்று கல்வி செயற்பாடுகளில் பங்கெடுத்துள்ளார்.

இதன்போது இரண்டு வகுப்புகளை சேர்ந்த 35 மாணவர்களை ஒன்றாக இணைத்து பாடம் எடுக்கப்பட்டுள்ளது. 12 ஆசிரியர்கள் கற்பித்துள்ளனர். ஆசிரியர்கள் அனைவரும் சுய தனிமையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## முகக்கவசம் அணியாத 9 பேருக்கு நீதிமன்று தண்டம் விதிப்பு

சுண்டுக்குளி நிருபர்

கொரோனா தொற்று பரம்பல் அதிகரித்து வரும் நிலையில், பொது இடங்களில் முகக்கவசம் அணியாமல் மற்றும் நாடியில் முகக்கவசத்தை அணிந்து நடமாடிய 9 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது.

தொற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய வகையில் நடமாடினார்கள் என குற்றஞ்சாட்டி சாவகச்சேரி பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே இத் தண்டம் விதிக்கப்பட்டது.

## சந்தை வியாபாரிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வியாபாரிகள், 313 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்காக நேற்று பெறப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடுமுழுவதும் எழுமாறாக தெரிவு செய்யப்படுவோரிடம் பி.சி. ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒரு அங்கமாகவே நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள திருநெல்வேலி பொதுச் சந்தை வியாபாரிகளின் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

## ஐயப்ப குருமாருக்கு சுகாதார கட்டுப்பாடு

ஓமந்தை விஷேட நிருபர்

சுகாதார நடைமுறைகள் தொடர்பாக வன்னி மாவட்ட ஐயப்ப குருமார்களிற்கு தெளிவுபடுத்தப்பட்டது. மாவட்ட ஐயப்ப குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காடு ஆதிவிநாயகர் ஆலய மண்டபத்தில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஐயப்ப விரதம் அனுஸ்டிப்பவர்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டதுடன், விரத காலத்தில் பின்பற்றப்பட வேண்டிய சில கட்டுப்பாடுகள் பற்றியும் சுகாதார பரிசோதகர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

## ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு 210 வீட்டுத் திட்டம் ஆரம்பம்

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ்.மாவட்டத்தில் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு 210 வீட்டுத் திட்டம் என்ற 5 வருட வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மாவட்ட செயலக விவசாய பிரிவு தெரிவித்துள்ளது.

விவசாயப் பிரிவு, சமுர்த்தி பிரிவு ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டதை முன்னெடுத்துள்ளன. தொடர்ச்சியாக 5 வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக 8 வகையான மரக்கறி வகைகளுக்கான விதைகள் மற்றும் நாற்றுகள் கிராம மட்டத்தில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

ஜனவரி மாதம் இரண்டு தென்னங்கன்றுகள் ஒரு பழமரக்கன்று கோழிக்குஞ்சுகள் ஆகியன வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருதனார்மட தொற்றாளர் எண்ணிக்கையில் அதிகரிப்பு



யாழ்.விசேட நிருபர்

யாழ். மருதனார்மடம் பொதுச் சந்தையில் கொரோனா வைரஸ் கொத்தணியுடன் தொடர்புடையோரில் மேலும் ஆறு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதன் மூலம் தொற்றாளர்களின் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளது.

மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடைய 100 பேரின் மாதிரிகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன் அறிக்கை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வெளியாகியுள்ளது. இதன்படி, தொற்று கண்டறியப்பட்ட அனைவரும் சந்தை வியாபாரிகளுடன் நேரடித் தொடர்புடையவர்கள் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி நேற்று முன்தினம் சங்கானை சந்தை, நேற்று திருநெல்வேலி சந்தை, சாவகச்சேரி சந்தை வியாபாரிகளுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### நேற்று 8 பேருக்கு தொற்று உறுதி

யாழ்ப்பாணத்தில் நேற்று மேலும் 8 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். சங்கானை சந்தை வர்த்தகர்கள் 100 பேருக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர் பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் 8 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதாவது சங்கானை 4, உடுவில் 1, பண்டத்தரிப்பு 1, மானிப்பாய் 1 வடலியடைப்பு 1 என 8 வர்த்தகர்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஏ.ரி.எம் இயந்திரங்களில் கொள்ளையிட்டவர் கைது

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவிலுள்ள வங்கி ஏ.ரி.எம் இயந்திரங்களில் நூதன முறையில் பணங்களை களவாடிய நபரை வவுனியா சிறு குற்றத்தடுப்பு பொலிசார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

வவுனியா நகரில் அமைந்துள்ள அரச வங்கிகளான மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் ஏ.ரி.எம் இயந்திரங்களில் பணம் மீளப்பெறுவதற்கு வருகை தரும் நபர்களுக்கு உதவி செய்கின்றது போல் சென்று அவர்களின் ஏ.ரி.எம் அட்டை, இரகசிய இலக்கம் என்பவற்றினை பெற்று பண மோசடி இடம்பெற்றுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய சிறு குற்றத்தடுப்பு பொலிசாருக்கு கிடைத்த ஐந்து நபர்களின் முறைப்பாட்டினையடுத்து சிறு குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார் இரகசிய முறையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சி.சி.ரி.வி மற்றும் பொதுமக்களின் உதவியுடன் இம் மோசடியில் ஈடுபட்ட மதவாச்சி அடவீரகொல்லாவா பகுதியினை சேர்ந்த நபரை பொலிசார் கைது செய்தனர்.

விசாரணைகளின் பிரகாரம் குறித்த நபர் கடந்த ஒரு வருடகாலமாக இவ்வாறு களவு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையுடன் பல இலட்சம் பெறுமதியான பணமும் இவ் நூதன முறையில் பெறப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

## இரண்டாவது நாளாகவும் மீனவர்கள் போராட்டம்



மாங்குளம் குறூப் நிருபர்

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து முல்லைத்தீவு மீனவர்கள் ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையினை கட்டுப்படுத்துமாறு கோரி முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்தனர். இந் நிலையில் அப் போராட்டத்தினை தொடர் போராட்டமாக அறிவித்த மீனவர்கள் நேற்றும் அதனை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கொட்டகை அமைத்த அவர்கள் அதிலிருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

## தமிழ் மக்களது பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்

பருத்தித்துறை விசேட நிருபர்

அரசு பதவியேற்று ஒரு வருடம் ஆகிவிட்டபோதிலும் தமிழ் மக்களுக்குரிய எந்த பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை என யாழ் மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர் இன்பராஜா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

தற்போதைய அரசானது பதவியேற்று ஒரு வருட காலம் பூர்த்தி அடைந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளாகிய மீள் குடியேற்றம், காணாமலாக்கப்பட்டோர் விடயம், அரசியல் கைதிகள் விடுதலை போன்ற எந்தவித பிரச்சினைக்கும் தீர்வு முன்வைக்கப்படவில்லை.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அத்தோடு அரசியல் கைதிகளின் விடுதலை கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். மீனவ மக்கள் தங்களுடைய தொழில் பாதிப்புக்கு எதிராக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த போராட்டத்தை நடத்துகின்ற மக்கள் எதிர்காலத்தில் தீர்வைப் பெற முடியாது சலிப்படைந்துள்ளார்கள் என்றார்.

## செட்டிக்குளம் பிரதேச சபையின் புதிய தவிசாளராக ஜெகதீஸ்வரன்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, செட்டிக்குளம் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் சுப்பையா ஜெகதீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். செட்டிகுளம் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான பாதீடு இரண்டு தடவைகள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு தோல்வி அடைந்திருந்தது.

இந்நிலையில் புதிய தவிசாளருக்கான வாக்கெடுப்பு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் சு.ஜெகதீஸ்வரனும் சுதந்திரகட்சி சார்பில் ஏற்கனவே தவிசாளராக பதவி வகித்த ஆ.அந்தோணியின் பெயரும் முன்மொழியப்பட்டன. தெரிவிற்கான வாக்கெடுப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சு.ஜெகதீஸ்வரன் 10 வாக்குகளை பெற்று தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு ஆதரவாக கூட்டமைப்பின் 05, ஈ.பி.ஆர்.எல்.எப் 03, தமிழ் தேசிய மக்கள் முன்னனி 01, முஸ்லிம் காங்கிரஸ் 01 என 10 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.

சுதந்திரகட்சியின் வேட்பாளரான அந்தோணி 6 வாக்குகளை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தார். அவருக்கு அந்த கட்சியின் 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

பொதுஜன பெரமுனவின் ஒரு உறுப்பினர் நடுநிலைமை வகித்திருந்தார்.

## தமது சமூகத்தின் மீது அக்கறை வேண்டும் –அங்கஜன் அறிவுரை

சாவகச்சேரி விசேட நிருபர்

பொதுமக்கள் அனைவரும் தாம் வாழும் சமூகத்தில் அக்கறை கொண்டு தமது இயல்பு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும், யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கொரோனா உலகளாவிய ரீதியில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இலங்கையிலும் அதனுடைய பாதிப்பு இருக்கிறது. கொழும்பில் நாளாந்தம் எழுநூறு, எண்ணூறு எனப் புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

யாழில் நீண்ட காலத்திற்கு பின்னர் ஒரு தொகை தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை இது அதிக தொகையாகக் காணப்படுவதால் மக்கள் மத்தியில் பய உணர்வு ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் உரிய கட்டுப்பாடுகளை விதித்து சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். மக்களும் தங்கள் இயல்பு வாழ்க்கையை நிச்சயமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றார்.

# கிழக்கின் குரல்



# தேசிய இளைஞர் படையணி தேசத்தின் திறன் விருத்தி

## இன்று 18 வருடங்கள பூர்த்தி நாள்



உயிரோட்டமுள்ள, துணிச்சலான இளவயதினர் நாட்டின் வளமாகும். புதியனவற்றை கண்டுபிடிக்கும், புதியவற்றை உருவாக்கும் அறிவார்ந்து செயற்படும் இளம் தலைமுறையினர் நாட்டில் இருந்தால் அது நாட்டின் அதிஷ்டமே. இருப்பினும் தற்போது எமது இளவயதினரிடமிருந்து நாட்டுக்கு நன்மை கிடைக்கிறதா? அவர்கள் வினைத்திறனாக நாட்டின் முன்னேற்றத்துக்கு பங்களிப்பு செய்கின்றனரா என்பது எம் முன்னுள்ள கேள்வியாகும்.

2002 டிசம்பர் 17 திகதி கேர்ணல் சன்ன குணத்திலக்க தலைமையில் தேசிய இளைஞர் படையணி உத்தியோகபூர்வமாக இயங்க ஆரம்பித்தது. பயிற்சி பெறும் இளைஞர், யுவதிகள் 'ரேன்ஜர் தலைவர்கள்' எனும் பெயரால் அழைக்கப்பட்டனர். முதலாவது பாடநெறி எம்பிலிப்பிட்டிய, எரமிணியாய, ஹெய்யந்துடுவ, ரன்டம்பே ஆகிய பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 58 நிலையங்கள் நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. ஆரம்ப பயிற்சி நெறியில் சேர்க்கப்பட்ட 100 பயிலுனர்கள் தற்போது நாடு முழுவதும் பயிற்சியளிக்கும் ஒழுக்கம் தொடர்பான போதனாசிரியர்களாக பணியாற்றுகின்றனர்.

ஒழுக்கம், தலைமைத்துவம், ஆளுமை விருத்தி ஆகிய மூன்று தலைப்புகளின் அடிப்படையில் செயற்படும் தேசிய இளைஞர் படையணி சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய இளைஞர் படையை உருவாக்குவதில் தெளிவான, முறைமைப்படுத்தப்பட்ட வகையில் இயங்கி வருகிறது.

இளைஞர்களிடம் உருவாகக் கூடிய பிற்போக்கான சிந்தனைகளிலிருந்து அவர்களை மாற்றுவதற்கும், அவர்களிடமுள்ள பிறப்பாற்றல்களை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் தேசிய இளைஞர் படையணியால் முன்னெடுக்கப்படுகின்றன. குழப்ப நிலை, அவநம்பிக்கை, தொழிலின்மை காரணமாக ஏற்படும் மன அழுத்தம், ஒழுக்கமின்மை, உல்லாச வாழ்க்கை மீதான விருப்பம் போன்றவை இளைஞர்களிடம் காணப்படும் விடயங்களாகும். இருப்பினும் அந்த கருத்துக்களிலிருந்து விடுபட்டு ஒழுக்கம் மிக்கவர்களாக சமூகத்தில் இணைவதற்காக இளைஞர்கள் தயார்படுத்தப்பட வேண்டும். ஒழுக்கத்தை ஏற்படுத்துதல் தேசிய இளைஞர் படையணியின் விஷேடமான குறிக்கோளாகும். உன்னதமான பிரஜைகளுக்கான பண்புகளை மேம்படுத்தும் பண்பான எதிர்கால தலைமுறையினரை உருவாக்கும் நோக்குடனேயே தேசிய இளைஞர் படையணி தேசிய கீதத்துக்கும், தேசிய கொடிக்கும் மட்டுமன்றி அன்றாட வாழ்க்கையிலும் கவனம் செலுத்தி ஆற்றல்களை விருத்தி செய்யும் புதிய பயிற்சி நிகழ்ச்சி நிரலை உள்ளடக்கியுள்ளது.




நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் ஒன்றிணையும் இளைஞர், யுவதிகள் அடிமட்டத்திலிருந்தே நிலையான, பெறுமதியான அறிவை வழங்கி அவர்களது எதிர்காலம் அர்த்தமுள்ளதாக நல்வழியில் செல்வதற்கான வழிகாட்டுவதற்காக தேசிய இளைஞர் படையணி 800 தகைமையுள்ள போதனாசிரியர்களின் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. முறையான பாடத்திட்டத்துக்கு அமைய கோட்பாட்டு ரீதியான மற்றும் பிரயோக ரீதியான ஆக்கத்திறனாக மேற்கொள்ளப்படும் பயிற்சிகளை மேலும் விரிவுபடுத்தி, 58 பயிற்சி நிலையங்களுக்கு மேலதிகமாக தம்புல்ல ஹோட்டல் பயிற்சி பாடசாலை, தொழில்முயற்சி செற்பாட்டு மேம்படுத்தல் நிறுவனம் மற்றும் நாவுல உள்ளக பயிற்சி நிலையம் போன்றவை இளைஞர் யுவதிகளுக்காக நிறுவப்பட்டுள்ளன. இந்த அனைத்து பயிற்சிநெறிகளிலும் இலவசமாக பங்குபற்றலாம். அதற்கு மேலதிகமாக பயிற்சியின் பின்னர் பயிலுனர்கள் தெரிவு செய்யும் தொழில்துறை பயிற்சி வாய்ப்பு வழங்கப்படுவதுடன், மொழி அறிவும் வளங்கப்படுவது சிறப்பான விடயமாகும்.

தேசிய இளைஞர் படையணி தற்போது இளைஞர் விவகார மற்றும் விளையாட்டத்துறை அமைச்சின் கீழ் அமைச்சர் நாமல் ராஜபக்ச தலைமையில் இயங்கி வருகிறது. இளமை துடிப்புடன் சமகால உற்சாகத்தை இன்றைய நாளை விடவும் எதிர்காலத்தில் அர்த்தமுள்ளதாக்குவதற்காக செயற்பாடுகளை நவீனத்துவமாக முன்னெடுக்கும் தற்போதைய தலைவர் கேர்ணல் தர்ஷன ரத்நாயக்க தூரநோக்கான வழிகாட்டலில் அனைத்து ஆளணியினரும் இளைஞர், யுவதிகளின் ஆளுமை, ஒழுக்கம், தலைமைத்துவம் மற்றும் ஆற்றலை அதிகரிப்பதற்காக உன்னதமான பணியை ஆற்றி வருகின்றனர்.



இழந்து போன பலவற்றை புனர்வாழ்வளித்து நாட்டின் அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்லும் தேசிய பணியில் முதலிடம் பெற்று செயற்பட்டுவரும் தேசிய இளைஞர் படையணியின் எதிர்கால பயணத்தின் நிலைத்திருக்கும் தன்மையை பாதுகாப்பதற்காக வருட இறுதி ஆளுமை பாராட்டு விழா, தேசிய கலை விழா, தேசிய விளையாட்டு விழா, போதைப்பொருள் தடுப்பு செயற்திட்டம், சிவில் சட்டம், சுற்றாடல் பாதுகாப்பு செயற்திட்டம், சமூக அபிவிருத்தி செயற்திட்டம், கட்டுரை, விவாதம் மற்றும் பொது அறிவு போட்டி, தொற்றும் நோய் மற்றும் தொற்றா நோய் தெளிவூட்டல் செயற்திட்டம், சமூக வலுவூட்டல் செயற்திட்டம், தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சியாக ஓக்கிட் மலர்ச்செடி வளர்ப்பு திட்டம் போன்ற பயனுள்ள செயற்திட்டங்கள் மூலம் பயிலுனர்கள் சமூகமயப்படுவதற்கு தேவையான அறிவாற்றல் வழங்கப்படுகிறது. அத்துடன் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து புனர்வாழ்வு பெற்ற போதைப்பொருளுக்கு அடிமையானோருக்கான ஆளுமை விருத்தி பயிற்சிகள் மற்றும் தேசிய செயற்திட்டமான பல்நோக்கு அபிவிருத்தி செயலணிக்கான பயிற்சி, மாணவ தலைவர்களுக்கான பயிற்சிகள் போன்றவை தேசிய இளைஞர் படையணியால் நடத்தப்படுகின்றன.

நாட்டின் சொத்தான உன்னதமான வளமாக கருதப்படும் எமது நாட்டின் பிள்ளைகளின் பொறுப்பை புரிய வைத்து நாட்டுக்கான தமது கடமையையும், பொறுப்பையும் உரிய வகையில் ஆற்றுவோம் என சத்தியப்பிரமாணம் செய்துள்ள தேசிய இளைஞர் படையணி இதுவரை பயணித்த பாதை பல நினைவுகளை கொண்டுள்ளது.

அந்த பயணத்தில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்றைய நாள் 18 வயதை பூர்த்தி செய்து கட்டிளமை பருவத்தை அடையும் தேசிய இளைஞர் படையணி தேசத்தின் திறன் விருத்தி கல்லூரியாக மாறி இளவயதினர் அனைவரதும் 'தாய்வீடு' ஆக மாற வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

**சலினி மனீஷா தொடங்கொட**

# மட்டு.சுற்றுலா விடுதியில் களியாட்ட நிகழ்வு; உரிமையாளர் உட்பட 47 பேர் தனிமைப்படுத்தலில்






**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி வருட இறுதி புத்தாண்டு களியாட்ட நிகழ்வை நடாத்திய மட்டக்களப்பிலுள்ள பிரபல சுற்றுலா விடுதியொன்றின் உரிமையாளர் உட்பட நிகழ்வை ஏற்பாடு செய்த தனியார் நிறுவனமொன்றின் 46 உறுப்பினர்கள் அடங்கலாக 47 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கல்லடி பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.அமிர்தாப் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை முழுமையாக மீறி நேற்று முன்தினம் இரவு (15) 7 மணியளவில் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள கிறீன் காrhடன் சுற்றுலா விடுதியில் (green garden hotel) மட்டக்களப்பு தனியார் நிறுவனத்தினர் வருட இறுதி களியாட்ட நிகழ்வு நடாத்தப்பட்ட வேளை அங்கு சென்ற சுகாதார அதிகாரிகளும் காத்தான்குடி பொலிசாரும் குறித்த விடுதியின் உரிமையாளர் மற்றும் விடுதியில் பணிபுரிவோர் நிகழ்வில் கலந்து கொண்டோரென 47 பேர் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நீதிமன்ற அனுமதியின் பேரிலேயே குறித்த நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் கல்லடி பொது சுகாதார பரிசோதகர் எஸ்.அமிர்தாப், நாவற்குடா பொது சுகாதார பரிசோதகர் எஸ். தீரகுமாரன் உட்பட சுகாதார அதிகாரிகள் பொலிசார் அடங்கிய குழுவினரே இச்சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# சம்மாந்துறையில் கொரோனா பாதுகாப்பு திட்டங்கள்

## பிரதேச சபையால் பிரகடனம்

**சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்**

சம்மாந்துறை பிரதேசத்தில் 11 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டதனையடுத்து சம்மாந்துறையை பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்கள் தொடர்பான கொரோனா பாதுகாப்பு செயலணிக் குழு விஷேட கூட்டம் நேற்றுமுன்தினம்(15) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.எம் ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கொரோனா தொற்று நோயிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதோடு பொதுமக்களும் பொறுப்புவாய்ந்தவர்களும் அவற்றை கடைப்பிடித்து நடக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கொரோனா வைரஸ் தடுப்பு கிராமமட்ட விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு செயற்பாடுகளை முன்னெடுத்து கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து எமது பிரதேச மக்களை பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் கொழும்பு மற்றும் கம்பஹா போன்ற பிரதேசங்களில் இருந்து தற்காலிகமாக அல்லது குறுகிய கால விடுமுறை பெற்று வருபவர்களை நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினை கருத்திற் கொண்டு தடை செய்தல். வியாபார "அனுமதி அட்டை" பெறாமல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளியூர், உள்ளூர் வியாபாரிகளை பரிசீலனை செய்து நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதற்கான செயற்பாடுகளில் ஒத்துழைப்புடன் செயற்படல்.

வியாபார நோக்கில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வெளி மற்றும் தூர இடங்களுக்கு சென்று வருபவர்களின் சுகாதார நடைமுறைகளை பரிசோதகர்களுடன் இணைந்து கண்காணித்தல்.

அத்தியாவசிய பொருட்கள் தவிர்ந்த எந்தவொரு பொருளும் வியாபார நடவடிக்கைக்காக சம்மாந்துறை பிரதேச எல்லைக்குள் அனுமதிக்கப்படமாட்டது. என்பதோடு பாதையோர வியாபாரத்தில் ஈடுபடும் எந்தவொரு வியாபாரியும் தரித்து நின்று ஒரே இடத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

# யானைக்கு போட்ட மின்கம்பியில் இளைஞன் சிக்கி மரணம்

## திருமலை பன்குளம் பகுதியில் சோகம்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை பன்குளம் பகுதியில் யானைக்கு வைத்த மின் கம்பியில் சிக்கி இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு (15)

11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் மட்டக்களப்புகாந்தி நகர் பகுதியைச் சேர்ந்த பரந்தாமன் கிருஷாந்தன் (22வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பன்குளம்ஆறாம் வாய்க்கால் பகுதியில் உயிரிழந்தவரின் தாயின் தங்கையின் (சித்தி வீட்டில்) வேலைக்காக சென்றிருந்ததாகவும் இதேவேளை இவ்வனர்த்தம் இடம் பெற்றதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், திருட்டுத்தனமாக மின்சாரத்தை பொருத்திய குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிசார் தெரிவித்தனர்.

# மாகாண சபை தேர்தலில் என்னையும், கட்சியையும் அழித்துவிட நினைத்தவர்களுக்கு பாடம் புகட்டுவோம்

## சிவநேசதுரை சந்திரகாந்தன் எம்.பி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனது பலத்தை உறுதிப்படுத்திக் கொண்டு என்னையும் எமது கட்சியையும் அழித்துவிட வேண்டுமெனக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ள சில தலைவர்களுக்கு பாடம் புகட்டுவேன் என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியாக கருதப்படும் வாகரை பகுதிக்கு விஜயம் செய்த அவர் அங்கு மக்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகள்குறித்து கேட்டறிந்து கொண்டார்.

பாராளுமன்ற தேர்தல் நிறைவு பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிபெற்ற சந்திரகாந்தன் சிறையிலிருந்து விடுதலையானதும் முதன் முறையாக வாகரைக்கு சென்ற நிலையில் அங்கு மக்களால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

குறிப்பாக வாகரை பகுதியில் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள், கல்வி நிலைமைகள், உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்திசெய்தல் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.



இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்

நான் மக்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாத நிலையிலும் வாக்களித்து மக்களுக்கு சேவையாற்ற சந்தர்ப்பத்தை வழங்கிய மக்களுக்கு நன்றி. மட்டக்களப்பு மாவட்ட கல்வி நிலையை ஆராய்ந்தபோது கல்குடா வலயம் மிக மோசமான பின்னடைவு நிலையில் இருக்கின்றது. நூற்றுக்கணக்கான ஆசிரியர் தட்டுப்பாடுகள் உட்பட பலர் விடயங்கள் காணப்படுகின்றன.

அதற்கான பணிகளை அரசாங்கத்துடன் இணைந்து செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். தொடர்ந்தும் உங்களுக்காக பணிசெய்வேன். இறக்கும் வரையில் உங்களுடன் நிற்பேன் என்றார்.



# மழையின் பின்னர் பயிர்களில் புதிய நோய்த் தொற்று தாக்கம்

## செய்கையாளர்கள் கவலை

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழையின் பின் கத்தரி மற்றும் பயிற்றை மரக்கறி செடிகளில் புது வகையான தொற்று ஏற்பட்டுள்ளதாக தோட்டப் பயிர் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விவசாயிகள் கூறுகையில், நோய்த் தாக்கத்தினால் கத்தரி மற்றும் பயிற்றை செடிகள் வாடிக் காணப்படுவதுடன் இலைகள் மஞ்சள் நிறமாக பழுத்து விழுகின்றன. இதனால் செடிகளில் காய்கள் மிகவும் குறைவாகவே காய்க்கின்றன.

நீண்ட காலமாக பயிற்றை மற்றும் கத்தரிகளை பயிர் செய்து வருகின்றோம். தற்போதைய மழையின் பின்னரே இவ்வாறான நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த வருடத்தின் தோட்டப் பயிர் செய்கையும் பாரிய நஷ்டமா காணப்படுகின்றது என்றனர்.

இந்த நோய்த் தாக்கம் மன்னார் இராசமடு மடுக்கரைப் பகுதியில் உள்ள தோட்டங்களில் காணப்படுன்றமை குறிப்பிடத்தக்கது.

# வருமானவரி பரிசோதகருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு



**வேலணை குறூப் நிருபர்**

வடமாகாணத்தில் புதிதாக நியமிக்கபட்ட 25 வருமான பரிசோதகர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு, வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் தலைமையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், ஆளுநரின் உதவிச் செயலாளர், ஆளுநரின் இணைப்பு செயலாளர், மற்றும் நியமனம் பெற்ற வருமான பரிசோதகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இங்கு நியமனங்களை வழங்கி வைத்து கருத்து தெரிவித்த ஆளுநர், 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதற்கிணங்க உங்கள் புவியியல் பிரதேச மக்களுக்கு சேவை செய்யும் பாக்கியம் உங்களுக்கு கிடைத்திருக்கிறது. அந்தவகையில் உள்ளூராட்சி திணைக்களங்களின் அடிப்படை வரவுசெலவுத்திட்ட வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் முக்கிய பணியை மேற்கொள்ளப்போகும் நீங்கள் அனைவரும், அரச வருமானத்தை துஸ்பிரயோகம் செய்யாது நிறுவன ஒழுக்கக் கோவைக்கு அமைய நேர்மையுடன் கடமைகளை ஆற்றவேண்டும்.

மேலும், சேகரிக்கும் வருமானங்களை உரியவாறு அரச கணக்கில் வைப்பிலிட்டு, அரச ஆவணங்களை அரச சட்டக்கோவைக்கு அமைய கையாள வேண்டும் என்றார்.

# யானைகளின் வருகையால் குள அணைக்கட்டுக்கள் சேதம்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் குளங்களின் அணைக்கட்டுகளுக்கு யானைகள் கூட்டமாக வருவதன் காரணமாக அணைக்கட்டுகள் பெரும் சேதமடைவதாக மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார்.

குளங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ள போதிலும் நடுக்குளங்கள் வழியாக நீந்தி வரும் யானைகள் குளங்களின் அணைக்கட்டுகளுக்கும் சேதமேற்படுத்துகின்றன. அவற்றினை விவசாயிகளின் துணையுடன் நீர்ப்பாசனத் திணைக்களம் புனரமைத்து வருகின்றது.

அம்பலப்பெருமாள்குளம், தென்னியங்குளம், மல்லாவிக்குளம், தண்ணீர்முறிப்புக்குளம், முத்தையன்கட்டுக்குளம் ஆகியவற்றின் அனைக்கட்டுக்கள் சேதமடைந்துள்ளன என்றார்.

# வாள்வெட்டு சந்தேகநபர் ஓமந்தையில் கைது

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாள் வெட்டு வன்முறைச் சம்பவங்களை நடத்திவிட்டு தலைமறைவாகியிருந்த சுமன் என்று அழைக்கப்படும் சந்தேகநபர் ஓமந்தையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் இக் கைது நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப் பட்டது.

கடந்த செப்ரெம்பர் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் வைத்து தனுரொக் என்ற மானிப்பாய் இளைஞனை வாளால் வெட்டி கொலை முயற்சி செய்தமை, நீர்வேலியில் உள்ள தனுரொக்கின் நண்பனின் வீடு புகுந்து இளைஞனையும் தாயாரையும் தாக்கியமை கச்சேரியில் ஊழியர் ஒருவரை வெட்டிக் காயப்படுத்தியமை உள்ளிட்ட பல வாள்வெட்டு வன்முறைகளுடன் பிரதான சந்தேக நபராக சுமன் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளிகளுக்கு SOLVE நிறுவனத்தின் முகக்கவசம்



**வேலணை குறூப் நிருபர்**

SOLVE நிறுவனம், தேசிய முன்பள்ளி ஆசிரியர் சங்கம் மற்றும் சர்வோதயம் ஆகியோர் இணைந்து முன்பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான முகக்கவசங்களை வழங்கினர்.

நிகழ்வில் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்கள் இணைந்து கொண்டு தமது முன்பள்ளிகளுக்கு தேவையான அளவிலான முகக்கவசங்களை பெற்றுக்கொண்டனர். மேலும் முகக்கவசங்களை இதுவரையில் பெற்றுக்கொள்ளாத முன்பள்ளிகள் சர்வோதய நிலையத்தற்கு வருகைதந்து பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் முயற்சிகள் அரசினாலும் சுகாதார சேவையாளர்களினாலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் கல்வி துறைக்கு தன்னாலான பங்களிப்பினை வழங்க வேண்டும் என்ற முனைப்பில் இந் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# இரு நாட்டையும் பேச வைத்து தீர்வு காண்போம்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக இலங்கை இந்திய அரசாங்கங்களை பேச வைத்து இப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மீனவர்களது கவனயீர்ப்பு போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இந்திய தரப்பில் இருந்து அதிகார வர்க்கத்தினை சேர்ந்தவர்கள் எங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். முன்னால் மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் அவர்களுடன் பேசிய பின்னர் என்னுடனும் பேசியுள்ளார்கள்.

இந்த விடயத்தினை அனைத்து கட்சிகளிடமும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் முன்னெடுத்து இலங்கை அரசுடனம் இந்திய அரசுடனும் எத்தனையோ தடவை நாங்கள் பேசியுள்ளோம். இன்னும் முடிவு கிடைக்கவில்லை. இதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் என்றார்.

# மன்னாரில் 24 ஆயிரம் சமுர்த்தி பயனாளிகள்

**மன்னார் குறூப் நிருபர்**

### மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

மக்களின் ஏழ்மை நிலையை பயன்படுத்தி பல்வேறு நுண் நிதி நிறுவனங்கள் பெண்களை ஏமாற்றி நுண் கடன்களை வழங்கி அவர்களை தற்கொலைக்கும் தள்ளிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. எனவே அவற்றை எல்லாம் தீர்க்கும் முகமாக கௌரவமாக நீங்கள் நிதியை பெற்று அதன் மூலம் உங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள சமுர்த்தி வங்கியின் செயற்பாடு துணையாக இருக்கும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள சமுர்த்தி வங்கியின் செயற்பாடுகள் கணணிமயப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் மக்கள் சேவைக்காக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கூறுகையில்,

சமுர்த்திஎன்பது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கான செயற்திட்டம். அந்த செயல் திட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் சுமார் 24 ஆயிரம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சமுர்த்தி பயனாளிகள் உள்ளனர்.

இவர்களுக்கு மாதாந்தம் 40 மில்லியன் ரூபா நிதி சென்று கொண்டிருக்கின்றது.

மாவட்டத்தில் அதி கூடிய நிதி தொகையை கொண்ட திணைக்களமாக சமுர்த்திதிணைக்களம் காணப்படுகின்றது. சமுர்த்தி பணத்தை பெற்றுக் கொள்ள மக்களாகிய நீங்கள் எவ்வளவு நாட்கள் அலைந்து திரிந்திருப்பீர்கள் என்று தெரியும்.

ஆனால் இனி அந்த கஸ்டம் உங்களுக்கு இல்லை.

கணணி மயப்படுத்தலின் மூலம் ஐந்து நாட்கள் எடுக்கப்பட்ட காலம் இனி ஐந்து நிமிடத்தில் முடிவடையக் கூடியதாக இருக்கும். சில தினங்களில் பின்னர் இலகுவாக நீங்கள் பணத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

www.nlb.lk
2020-12.-15 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 650,491
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 25,226,150.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 27
NLB NATIONAL LOTTERIES

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம்: 704
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 15/12/2020
ஆங்கில எழுத்து: S
சுப்பர் இலக்கம்: 03
வெற்றி இலக்கங்கள்: 01 16 31 58

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 06 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 85 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 186 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4,829 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,169 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 78,903 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 14,444 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 59,823,316.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 14,623,305.20
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 26,554,878.00
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,254,600.00
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2632 சீட்டிழுப்பு திகதி 15/12/2020
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 03 33 59 76

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 170 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 375 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9,038 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 5,899 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 148,903 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 27,035 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 191,424
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 5,773,520.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,155,590.00
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15/12/2020 1557 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 01 03 43 48

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | - |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 15,000.00 | 06 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 92 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 293 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 4,362 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 3,861 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 54,937 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாததிரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 13,730 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 2,281,800.00
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,607,700.68
இல. 32, தேசமான்ய N.W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
Phone : 0114 607 000, 0112 324 324
Fax : 0114 663 416 Web : www.nlb.lk
NATIONAL LOTTERIES BOARD

சீட்டிழுப்பு இலக்கம் : 4337 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 15-12-2020
வெற்றி எழுத்து D வெற்றி இலக்கங்கள் 2 1 4 7 3 9
பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 2 1 4 7 3 9 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 1 4 7 3 9 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 4 7 3 9 | ரூபா. 10,000/- | 108 |
| 4 ஆம் பரிசு | 7 3 9 | ரூபா. 1,000/- | 1,065 |
| 5ஆம் பரிசு | 3 9 | ரூபா. 100/- | 10,675 |
| 6ஆம் பரிசு | 9 | ரூபா. 20/- | 105,462 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 2 1 4 7 3 | ரூபா. 10,000/- | 11 |
| 8ஆம் பரிசு | 2 1 4 7 | ரூபா. 1,000/- | 101 |
| 9ஆம் பரிசு | 2 1 4 | ரூபா. 100/- | 1,096 |
| 10ஆம் பரிசு | 2 1 | ரூபா. 50/- | 10,451 |
| 11ஆம் பரிசு | | ரூபா. 20/- | 42,208 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 10,209,050.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,696,634.00
வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை www.nlb.lk
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 2020/12/15
சீட்டிழுப்பு இலக்கம் - 374
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 03 30 46 74

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 96 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 206 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,041 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,414 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 84,472 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 15,740 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,707,180.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 108,974
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 124,773,863.12
• ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
• பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
• சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD




கொவிட் 19

# சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கண்டி நகர பாடசாலைகள் ஆரம்பம்





(எம்.ஏ.அமீனுல்லா )

கண்டி நகர எல்லைக்குட்பட்ட பாடசாலைகள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடைபெறுவதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் நிலைமையை கருத்திற்கொண்டு, கண்டி நகர எல்லைக்குள் தற்காலிகமாக மூடப்பட்டு, கடந்த திங்கட் கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ள பாடசாலைகள் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இயங்குகின்றனவா ? என்பது தொடர்பில் ஆராய்வதற்காக மத்திய மாகாண ஆளுநர் அப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு நேற்று முன்தினம் (15) கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதனைத்தொடர்ந்து ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் பரவல் நிலைமையை கருத்திற்கொண்டு, தற்காலிகமாக மூடப்பட்ட கண்டி நகர எல்லைக்குட்பட்ட 45 பாடசாலைகளில் 42 பாடசாலைகள் கடந்த திங்கட் கிழமை முதல் ஆரம்பிக்கபட்டுள்ளன. கண்டி திரித்துவ கல்லூரி, கலைமகள் வித்தியாலயம், தக்ஷிலா கல்லூரி ஆகிய பாடசாலைகளை தொடர்ந்தும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டியிலுள்ள சுவர்ணமாலி மகளிர் கல்லூரி,,சரசவிய உயன மகாவித்தியாலயம் , கண்டி சில்வெஸ்ட்டர், பேராதனை மத்தியக்கல்லூரி, உள்ளிட்ட நகரத்திலுள்ள பல பாடசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தேன். மாணவர்களுக்கு பொது போக்குவரத்து சேவைகள் சரியாக செயற்படுகின்றனவா? என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்த்தேன். மேலும் ஏனைய குறைப்பாடுகள் தொடர்பில் பாடசாலை அதிபர், ஆசியர்களுடன் நேரடியாக கேட்டறிந்ததுடன், மாணவர்களுக்கான சுகாதார வழிகாட்டல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா? எனவும் கவனம் செலுத்தப்பட்டது.

பொதுப்போக்குவரத்தின் பொழுது, பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறும் அதுபோன்று,பாடசாலை நேரத்தில் இரண்டு பஸ்களை நிறுத்து வேண்டுமென உரிய அதிகாரிகளுக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதன் மூலம் மாணவர்களினது போக்குவரத்து நெரிசலைத் தடுக்க கூடியதாக இருக்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# பிரதமரை பாராட்ட வேண்டும்

## இராதாகிருஸ்ணன் எம்.பி

நுவரெலியா தினகரன் நிருபர்



அரசாங்கம் மாகாண சபை தேர்தலை நடாத்த வேண்டும் என தீர்மானித்திருப்பது வரவேற்க கூடிய விடயமாகும்.அதற்கு முன்னெடுப்புகளை செய்கின்ற பிரதமரை பாராட்ட வேண்டும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரிக்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தமிழ் பாரம்பரிய இசைக்கருவிகளை நேற்று (16.12.2020) புதன்கிழமை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் மாகாண சபை தேர்தலை நடாத்துவதற்கு திட்டமிட்டு வருகின்றது அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஒரு சில பௌத்த தலைவர்கள் மாகாண சபை தேர்தல் தேவையில்லை என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் ஒரு நாட்டில் ஜனநாயகம் நிலைத்திருக்க வேண்டுமாக இருந்தால் தேர்தல் மிகவும் முக்கியமானது. தேர்தல் நடைபெற வேண்டும்.

மாகாண சபைகள் மூலமாக அதிகார பகிர்வு இடம்பெற்றது.இதன் காரணமாகவே எங்களை நாங்களே ஆளக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது.குறிப்பாக சிறுபான்மை மக்களின் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே இந்த மாகாண சபைகள் முறை கொண்டு வரப்பட்டது.இதனை இல்லாது செய்வது என்பது சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமையை இல்லாது செய்கின்ற ஒரு விடயமாகவே பார்க்க வேண்டியுள்ளது.

மாகாண சபை தேர்தலை அரசாங்கம் நடாத்துவதற்கு முடிவு செய்தால் மலையக மக்கள் முன்னணியை பொறுத்த அளவில் அந்த தேர்தலில் நாங்கள் தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற வகையில் நாம் தனித்து களம் இறங்குவதே சிறந்தது என நான் கருதுகின்றேன்.

ஏனெனில் மாகாண சபையில் எங்களுடைய அதிகாரத்தையும் தனித்துவத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக நாம் தனித்து களம் இறங்குவதே சிறந்தது.

இந்த தீர்மானம் தொடர்பாக எங்களுடைய கூட்டணியில் இருக்கின்ற ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடி அனைவருடைய விருப்பத்திற்கும் இணங்க இறுதி தீர்மானம் எடுக்கப்படும்.இன்று இருக்கின்ற இந்த அரசியல் சூழ்நிலையில் தமிழர்கள் தங்களுடைய உரிமைகளையும் அபிவிருத்தியையும் ஏனைய விடயங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டுமாக இருந்தால் தனித்து போட்டியிடுவதே சிறந்தது என்பதே எனது கருத்தாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# 15 வருடமாக பாதுகாப்பற்ற பாலத்தில் பயணிக்கும் ஹெரோ தோட்டமக்கள்

பூண்டுலாயோ நிருபர்



கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட ஹெரோ கீழ்ப்பிரிவு தோட்டத்தில் 15 வருடங்களாக பொதுமக்கள் கடக்கும் பாலம் மக்களுக்கு உயிர் அச்சத்தை கொடுத்து வருகின்றது.

ஆனால் இன்றுவரையில் எவ்வித நடவடிக்கைகளோ அல்லது பாதுகாப்பு முறைகளோ ஏற்படுத்தி கொடுக்கவில்லையென தோட்டமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஹெரோ தோட்ட கீழ்ப்பிரிவில் இப்பாலமே மக்கள் கடக்கும் பிரதான பாலமாக காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் முதல் வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள் என பலரும் இப்பாலத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் பாலத்தின் நடுவில் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் மக்கள் அச்சத்துடன் பாலத்தை கடக்கின்றனர்.மேலும் பாலத்தை கடப்பதற்கு எவ்வித பாதுகாப்பு கம்பிகள் எதுவும் இன்மையால் இரவு நேரங்களில் பாலத்தை கடப்பது பெரும் சவாலாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் பல அரசியல்வாதிகளிடம் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எட்டப்படவில்லை.

ஏதாவது அசம்பாவிதம் ஏற்படும் முன்னர் பாலத்தை புனரமைத்து தருமாறு ஹெரோ கீழ்ப்பிரிவு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# தோட்டத் தொழிலாளர்களை இம்முறை ஏமாற்றினால் போராட்டம் வெடிக்கும்

## விஜித ஹேரத் எம்.பி

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனவரி மாதம் முதல் கட்டாயம் ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும். இம்முறையும் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றினால் ஜனவரி முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதற்கு தோட்டத் தொழிலாளர்கள் தயாராகவே இருக்கின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பங்களிப்பை செய்தனர். இன்றும் செய்து வருகின்றனர். ஆனால் அவர்களின் வாழ்க்கை நிலைமை மேம்படவில்லை. சுகாதார வசதிகள் இல்லை.

தமது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதற்கு உரிய வகையிலான கல்வி கட்டமைப்பு இல்லை. மாத சம்பளத்தை பெறுவதற்கான உரிமை இருந்தும் நாட்கூலிகளாகவே நடத்தப்படுகின்றனர். இந்நிலைமை மாறவேண்டும். நாட்டில் ஏனைய பிரஜைகளுக்குள்ள உரிமை அவர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.




தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்கப்படும் என அரசாங்கங்கள் உறுதிமொழி வழங்கியிருந்தாலும் இன்னும் அது வழங்கப்படவில்லை. சட்டபூர்வமான பத்திரத்துக்கு பதிலாக மாற்று பத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது 750 ரூபா நாட் சம்பளம் வழங்கப்படுகின்றது.

அது அடிப்படை சம்பளம் இல்லை. தற்போது ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது. அந்ததொகைகூட போதாது. குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஆயிரத்து 281 ரூபா வழங்கப்படவேண்டும்.

2021 ஜனவரி முதல் ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என அரசாங்கம் பட்ஜட்டில் முன்மொழிந்துள்ளது.

ஆனால் தோட்டக் கம்பனிகள் இணங்கினால்தான் இந்த சம்பள உயர்வு கிடைக்கும். அவ்வாறு இணங்காவிட்டால் கிடைக்காது.

கம்பனிகள் இணங்காவிட்டாலும் அந்த தொகையை அரசாங்கம் வழங்குவதற்கான நிதி பட்ஜட்டில் ஒதுக்கப்படவில்லை. கம்பனிகள் சுவீகரிக்கப்படும் எனக் கூறப்பட்டாலும் அதற்கான சட்ட ஏற்பாடுகளும் இடம்பெறவில்லை.

எது எப்படியிருந்தாலும் இம்முறை தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்படும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கைக்கு அவர்கள் தயாராகவே இருக்கின்றனர்.

அதேவேளை தோட்டத்தொழிலாளர்களின் வீட்டுரிமை, காணி உரிமை, சம்பள உரிமை ஆகியன உறுதிப்படுத்தப்படவேண்டும். சுகாதார உரிமை, பிள்ளைகளுக்கான கல்வி உரிமை ஆகியனவும் வழங்கப்படவேண்டும்." என்றார்.

# வெல்லவாய நகரம் மூன்று நாட்களுக்கு மூடல்

லுணுகல நிருபர்

மொனறாகல மாவட்டத்தில் வெல்லவாய நகரத்தை நேற்றுமுதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மூன்று நாட்களுக்கு மூடுவதற்கு நகர வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது. கடந்தசில நாட்களாக வெல்லவாய பிரதேசத்தில் 15 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை படல்கும்பர பிரதேச சபைக்குட்பட்ட அலுபொத்த கிராம பகுதி தனிமைப் படுத்தப்பட்ட பிரதேசமாக நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் 24 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக படல்கும்பர பிரதேச பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். தனிமைப்படுத்தப்பட்ட அலுபொத்த பகுதியில் நேற்றுமுன்தினம் 159 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு படல்கும்பர நகர வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா மாநகரசபை பட்ஜட் நிறைவேற்றம்

நுவரெலியா தினகரன் நிருபர்



நுவரெலியா மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மேலதிக 12 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நுவரெலியா மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தை நுவரெலியா மாநகர சபை முதல்வர் சந்தனலால் கருணாரத்ன நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (15.12.2020) நடைபெற்ற மாநகர சபை விசேட வரவு செலவு கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

இதன்போது வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக ஐக்கிய தேசிய கட்சியின் 12 உறுப்பினர்களும் முதல்வர் உட்பட 13 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

வரவு செலவு திட்டத்திற்கு எதிராக பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் மகிந்த தொட்மபே கமகே வாக்களித்தார். பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏனைய உறுப்பினர்களில் சபைக்கு வருகை தந்திருந்த எம்.பி.நவரட்ணம் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இவருடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பான இரண்டு உறுப்பினர்களான சட்டத்தரணி சிவன்ஜோதி யோகராஜ், ஜெயராம் வினோஜி ஆகியோர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்தனர்.

இவர்களுடன் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவம் செய்கின்ற மாகந்துரே ரத்ன வன்ச தேரர் மற்றும் நலீன் கீர்த்தி சமரஜீவ ஆகியோரும் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.இவர்கள் விடுமுறை கோரி சபைக்கு கடிதங்கள் அனுப்பியிருந்ததுடன் அந்த கடிதங்கள் சபையில் மாநகர முதல்வர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அதே நேரம் இங்கு கருத்து தெரிவித்த மாநகர சபை முதல்வர் சந்தணலால் கருணாரத்ன இந்த வரவு செலவு திட்டமானது மக்கள் நலன் சார்ந்த திட்டம் எனவும் 2021 ஆம் ஆண்டு மிகவும் சவால் மிகுந்த ஆண்டாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

# கம்பளையில் 6 பேருக்கு கொரோனா

கம்பளை நிருபர்

கம்பளையில் மேலும் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கம்பளை வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் வைத்தியரொருவருக்கு அண்மையில் கொரோனா வைரஸ் தொற்றியது. இதனையடுத்து அவரின் குடும்ப உறுப்பினர்களிடமும், அவர்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்களில் தொழில் புரிந்தவர்களிடமும் கடந்த 12 ஆம் திகதி பி சி ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

பி சி ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்றுமுன்தினம் (15) வெளியாகின.

இதில் வைத்தியரின் தந்தை, தாய், மகள் மற்றும் பேரப்பிள்ளைக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஊழியர்கள் இருவருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

குறித்த வர்த்தகருக்கு சொந்தமான நான்கு கடைகள் மூடப்பட்டுள்ளன. ஹோட்டலொன்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கு வைரஸ் தொற்றிய விதம் பற்றியும் சுகாதார அதிகாரிகள் ஆராய்ந்துவருகின்றனர். வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளவர்கள் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் நேற்று கொண்டு செல்லப்பட்டனர்.



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம் சடலங்களை தகனம் செய்வது தொடர்பாக தமது எதிர்ப்பைத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் பொது இடங்களில் வெள்ளைத் துணிகளை கட்டி 'கபன் துணி' போராட்டம் ஒன்றை முஸ்லிம்கள் நடத்தி வருகின்றனர். அதன் அடிப்படையில் அக்குறணை நகரில், கண்டி மாவட்டப் பாராளுமன்ற அங்கத்தவரும் முன்னாள் அமைச்சருமான எம்.எச்.ஏ. ஹலீம் 'கபன் துணி' போராட்டத்தில் பங்கு கொண்டு வெள்ளைத் துணியைக் கட்டுவதை படத்தில் காணலாம்.

# கண்டியில் இந்திய கொன்சியூலர் காரியாலயத்தை நிறுவ ஆலோசனை

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டியில் புதிதாக இந்திய கொன்சியூலர் காரியாலயம் ஒன்று நிறுவப்படுவது தொடர்பாக ஹம்பாத்தோட்டை இந்திய தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் பீ.ஆர்.டிபின் மற்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே ஆகியோருக்கு இடையே கலந்துரையாடல் ஒன்று கண்டியில் இடம்பெற்றது.

ஜனாதிபதியின் வேண்டுக்கோளுக்கு அமைய இந்திய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாக இதன்பாதே கலந்துரையாடப்பட்டது.

அதற்கு கண்டியில் கொன்சியூலர் காரியாலயம் ஒன்று நிறுவப்படுவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மத்திய மாகாணத்தில் சுற்றுலா அபிவிருத்தி தொடர்பாக கலந்தரையாடப்பட்டதாக ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

# அயல்நாட்டு செய்திகள்



# ஜெயலலிதாவுக்கு கோயில் கட்டும் தமிழக அமைச்சர்

## விரைவில் கும்பாபிஷேகம்; அரசியல்வாதிகளின் அபத்தங்கள்!

தமிழக முன்னாள் முதலமைச்சரும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மறைந்த தலைவருமான ஜெயலலிதாவுக்கு தமிழகத்தில் மாபெரும் கோயில் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. ஜெயலலிதா பேரவையின் சார்பில் திருமங்கலம் அருகே இந்த ஆலயம் அமைக்கப்பட்டு வருகின்றது.

அமரர் ஜெயலலிதாவுக்கு திருக்கோயில் கட்டும் பணியினை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் நேற்றுமுன்தினம் நேரில் ஆய்வு செய்தார்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதியில் உள்ள டி.குன்னத்தூர் அருகே 'கழக ஜெயலலிதா பேரவை' செயலாளரும், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு இந்தகோயிலை கட்டி வருகிறார்.

இந்த பணியினை அவர் ஆய்வு செய்தார். அவருடன் அவரது தந்தையார் ஆர்.போஸ், அவரது தாயார் பி.மீனாள் மற்றும் கல்லுப்பட்டி ஒன்றிய கழக செயலாளர் ராமசாமி உட்பட பலர் இருந்தனர்.

இது குறித்து அமைச்சர் உதயகுமார் கூறியதாவது:

"உலகமெங்கும் வாழும் 10 கோடி தமிழ் மக்களின் இதயங்களில் தெய்வமாக வாழ்ந்து வருகிறார் ஜெயலலிதா. மக்கள் நலனே தன் நலன் என்று மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து ஒரு தியாக தீபமாக வாழ்ந்து ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களின் குலதெய்வமாக அம்மா திகழ்ந்து வருகிறார்.

இந்த இயக்கம் இன்னும் நூறு ஆண்டு காலம் மக்கள் பணியாற்ற வேண்டும் என்று அம்மா அவர்கள் இலட்சியம் முழங்க முழக்கமிட்டார். அந்த இலட்சிய முழக்கங்களை இன்றைக்கு நமது முதல்வரும், துணை முதல்வரும் அம்மாவின் பாத தடத்தில் அடிபிறழாமல் நிறைவேற்றுகின்றனர்.

ஜெயலலிதா முக்காலும் உணர்ந்த தீர்க்கதரிசி. அதனால்தான் இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழ் இனமே வணங்கும் தமிழர் குலசாமியாக அவர் திகழ்கிறார். தொடர்ந்து இன்றைக்கு எங்களது குடும்பத்தாரும் குலதெய்வமாக அம்மாவை வழிபட்டு வருகிறோம். அந்த தெய்வத்திற்கு முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோரின் நல்லாசியுடன் தற்போது கழக அம்மா பேரவை சார்பில் கோயில் கட்டி வருகிறோம்.

திருக்கோயிலில் ஜெயலாலிதாவுக்கு திரு உருவ வெண்கலச் சிலையும், அதேபோல் எம்.ஜி.ஆருக்கு முழு நீள வெண்கலச் சிலையும் அமைக்கப்பட உள்ளன.

அதுமட்டுமில்லாது இந்த திருக்கோவிலில் அனைத்து மக்களும் வழிபடும் வண்ணம் அதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த பணி விரைவில் முடிவுற்று கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது."

இவ்வாறு அமைச்சர் உதயகுமார் கூறினார்.

# இந்தியாவில் நிமிடத்துக்கு 8.6 கார்கள் உற்பத்தி

## 5வது இடத்தையும் பிடித்துள்ளது



கார் உற்பத்தியில் உலகளவில் இந்தியா 5வது இடத்தைப் பிடித்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் அனைவருக்கும் போக்குவரத்துக்கு கார்களை அதிகம் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் தனி நபர் ஒருவர் தனது சொந்த பணத்திற்காக, ஒருவர் மட்டும் கார்களில் செல்வதால் தான் அதிகளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் கார் என்பது அத்தியாவசிய தேவையாக மாறி வருகிறது.

இதற்காக, கார் உற்பத்தி நிறுவனங்களும் பொதுமக்களை கவரும் வகையில் புதுப்புது அம்சங்களை அறிமுகப்படுத்தி வருகின்றன. புதிய கார் நிறுவனங்களும் இந்தியாவில் செயல்பட தொடங்கி வருகிறது. இந்நிலையில், UKவில் உள்ள மணிஷேக் என்ற அமைப்பு உலகம் முழுவதும் ஆராய்ச்சி நடத்தி கார்களை அதிகம் உற்பத்தி செய்யும் நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில், உலகளவில் சீனா முதல் இடத்தைப் பிடித்துள்ளது. ஆண்டுக்கு 25.7 மில்லியன் கார்களை உற்பத்தி செய்யும் சீனா, நிமிடத்துக்கு 48.9 கார்களை உற்பத்தி செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் இந்தியா 5வது இடத்தைப் பிடித்துள்ளது. நிமிடத்துக்கு 8.6 கார்களை உற்பத்தி செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார் உற்பத்தியில் முதல் 5 இடங்களைப் பிடித்த நாடுகளின் பட்டியல்:

1. சீனா நிமிடத்துக்கு 48.9 கார்.
2. அமெரிக்கா நிமிடத்துக்கு 20.7 கார்.
3. ஜப்பான் நிமிடத்துக்கு 18.4 கார்.
4. ஜெர்மனி நிமிடத்துக்கு 8.9 கார்.
5. இந்தியா நிமிடத்துக்கு 8.6 கார்.

# விவசாயிகள் போராட்டம்; தீர்க்க தேசிய அளவில் குழு

## உச்சநீதிமன்றம் அதிரடி



விவசாயிகள் போராட்டத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து தெரிவிக்க மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. டெல்லி எல்லையில் போராடும் விவசாயிகளை அப்புறப்படுத்த கோரும் வழக்கில் மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

மத்திய அரசு நிறைவேற்றியுள்ள வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் அனைவரும் டெல்லியில் தொடர்போராட்டம் நடத்தி வருகின்றனர். மத்திய அரசு பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் எந்த ஒரு பலனும் இல்லை. வேளாண் சட்டத்தை முழுவதுமாக திரும்ப பெறும் வரையில் போராட்டம் தொடரும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். போராட்டம் நேற்று 21வது நாளை எட்டியுள்ளது. இந்நிலையில் டெல்லி எல்லையில் போராடும் விவசாயிகளை அப்புறப்படுத்த கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. விவசாயிகள் அதிக அளவில் கூடியுள்ளதால் கொரோனா பரவல் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. விவசாயிகள் போராட்டத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து தெரிவிக்க மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. டெல்லிக்குள் விவசாயிகள் நுழைவதை தடுத்தது யார்.? சாலைகளை முடியது யார்.? என உச்சநீதிமன்றம் சரமாரி கேள்வி எழுப்பியுள்ளது. விவசாயிகள் போராட்டம் தொடர்பாக உச்சநீதிமன்றம் குழு அமைக்கும் எனவும் தலைமை நீதிபதி தெரிவித்துள்ளார். விவசாயிகள் சங்கங்கள், மத்திய அரசு உள்ளிட்ட அனைத்து தரப்பு பிரதிநிதிகளும் அடங்குவர். கூடிய விரைவில் விவசாயிகள் பிரச்சினை தேசிய பிரச்சினையாக மாற வாய்ப்புள்ளது.

## கேரளாவில் உள்ளாட்சி தேர்தல்;

# இடதுசாரி கூட்டணி,காங்கிரஸ் முன்னிலை பாரதீய ஜனதாவுக்கு பெரும் பின்னடைவு

கேரள உள்ளாட்சி தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நேற்று காலை தொடங்கியது. இதில் 4 இடங்களில் இடதுசாரி கூட்டணியும், 2 இடங்களில் காங்கிரஸ் கூட்டணியும் முன்னிலை வகிக்கின்றன. பா.ஜ பின்தங்கியது.கேரளாவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் மொத்தம் 4 கட்டமாக நடந்தது. முதல் கட்டமாக கடந்த 8ம் தேதி திருவனந்தபுரம், கொல்லம், பத்தனம்திட்டா, ஆலப்புழா, இடுக்கி ஆகிய மாவட்டங்களிலும், 2ம் கட்டமாக 10ம் தேதி கோட்டயம், எர்ணாகுளம், திருச்சூர், பாலக்காடு, வயநாடு மாவட்டங்களிலும், 3வது கட்டமாக 14ம் தேதி மலப்புரம், கோழிக்கோடு, கண்ணூர், காசர்கோடு ஆகிய 4 மாவட்டங்களிலும் நடந்து முடிந்துள்ளது.

மொத்தம் 4 கட்டமாக நடந்த இந்த தேர்தலில் 76.04 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன. பதிவான வாக்குகள் அனைத்தும் நேற்று (16) காலை 8 மணிமுதல் எண்ணப்பட்டு வருகின்றன. இதற்காக மாநிலம் முழுவதிலும் 244 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் முடிவுகள் அனைத்தும் நண்பகலுக்குள் முழுமையாக கிடைக்கும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. முதலில் தபால் ஓட்டுகள் எண்ணப்பட்டன.



இதில் காங்கிரஸ் கூட்டணி முன்னணி வகித்தது. தொடர்ந்து மின்னணு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. காலை 10 மணி நிலவரப்படி பெரும்பாலான வார்டுகளில் இடதுசாரி கூட்டணி முன்னணியில் உள்ளது. மொத்தம் உள்ள 6 மாநகராட்சிகளில் திருவனந்தபுரம், கொல்லம், கோழிக்கோடு, கண்ணூர் ஆகிய 4 இடங்களில் இடதுசாரி கூட்டணியும், கொச்சி, திருச்சூர் என 2 இடங்களில் காங்கிரஸ் கூட்டணியும் முன்னணியில் இருந்தன. 3 மாநகராட்சிகளில் காங்கிரஸ் கூட்டணி 2வது இடத்தில் உள்ளது. திருவனந்தபுரம் மாநகராட்சியில் மட்டும் பா.ஜ 2வது இடத்தில் உள்ளது. மற்ற இடங்களில்கடும்பின்னடைவை சந்தித்து வருகிறது.

இதுபோல 86 நகராட்சிகளில் 39 இடங்களில் இடதுசாரி கூட்டணியும், 37ல் காங்கிரஸ் கூட்டணியும், 3 இடங்களில் பா.ஜவும் முன்னணியில் இருந்தன. மேலும் 14 மாவட்ட பஞ்சாயத்துகளில் 11ல் இடதுசாரி கூட்டணியும், 3ல் காங்கிரஸ் கூட்டணியும், 152 ஊராட்சி ஒன்றியங்களில் 89ல் இடதுசாரி கூட்டணிகளும், 59ல் காங்கிரஸ் கூட்டணியும், 2ல் பா.ஜவும் முன்னனியில் இருந்தன. அதுபோல 941 கிராம ஊராட்சிகளில் 363ல் இடதுசாரி கூட்டணியும், 318ல் காங்கிரஸ் கூட்டணியும், 32ல் பாஜவும் முன்னிலை வகித்து வந்தன.

# தமிழகத்தில் நேற்று 1,132 பேருக்குக் கொரோனா தொற்று

## மொத்தத் தொகை 8,01,161




தமிழகத்தில் நேற்று 1,132 பேருக்குக் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. மொத்த எண்ணிக்கை 8,01,161.

சென்னையில் மட்டும் மொத்தம் 2,20,560 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மட்டும் வெளி மாநிலத்திலிருந்து தமிழகத்துக்கு வந்தவர்களில் ஒருவருக்கும் தொற்று இல்லை எனத் தெரியவந்துள்ளது. அரசு அனுமதி அளித்தபின் அண்டை மாநிலம் மற்றும் வெளிநாடுகளிலிருந்து விமானம், ரயில், சாலை மார்க்கமாக வந்தவர்கள் இன்றைய தேதி வரை மொத்த எண்ணிக்கை 20,65,228.

சென்னையில் 359 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்னை உள்ளிட்ட 37 மாவட்டங்களில் தொற்று எண்ணிக்கை வந்துள்ளது. சென்னையைத் தவிர 36 மாவட்டங்களில் 773 பேருக்குத் தொற்று உள்ளது.

- ★ தற்போது 67 அரசு ஆய்வகங்கள், 165 தனியார் ஆய்வகங்கள் என 232 ஆய்வகங்கள் உள்ளன.

இந்த நிலையில் தமிழகத்தில் கொரோனா நோயாளிகள் எண்ணிக்கை, நிலை குறித்து நேற'று பொது சுகாதாரத்துறை வெளியிட்ட அறிவிப்பு:

- ★ தனிமைப்படுத்துதலில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 9,951.
- ★ மொத்தம் எடுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 1,30,86,807.
- ★ இன்று ஒரு நாளில் எடுக்கப்பட்ட சோதனை மாதிரி எண்ணிக்கை 66,213.
- ★ மொத்தம் தொற்று உள்ளவர்கள் எண்ணிக்கை 8,01,161.
- ★ நேற்று தொற்று உறுதியானவர்கள் எண்ணிக்கை 1,132.
- ★ சென்னையில் தொற்று உறுதியானவர்கள் எண்ணிக்கை 359.
- ★ மொத்தம் தொற்று உள்ளவர்கள் எண்ணிக்கையில் ஆண்கள் 4,84,110 பேர். பெண்கள் 3,17,017 பேர். மூன்றாம் பாலினத்தவர் 34 பேர்.
- ★ தொற்று உறுதியானவர்களில் ஆண்கள் 720 பேர். பெண்கள் 412 பேர்.
- ★ நேற்று குணமடைந்தவர்கள் 1,210 பேர்.
- ★ இன்று கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினால் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

முக்கியப் பிரச்சினையாக சுவாசப் பிரச்சினை, மாரடைப்பு, கோவிட் நிமோனியா ஆகியவை அதிக அளவு மரணத்துக்குக் காரணமாக உள்ளன. நீண்டகால நோயால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் 10 பேர். எவ்வித பாதிப்பும் இல்லாதவர் ஒருவருமில்லை.

# சிலிண்டர் விலை உயர்வு பகல் கொள்ளையாகும்



## அரசு உடனே திரும்பப் பெறவேண்டும்



சமையல் எரிவாயு சிலிண்டர் விலையைக் குறைக்க வேண்டும் என, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் மக்களவை உறுப்பினருமான தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்:

'சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை 15 நாட்களில் சிலிண்டர் ஒன்றுக்கு 100 ரூபாய் உயர்த்தியிருப்பது பகல் கொள்ளையைவிட மோசமானது. ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மக்களைச் சுரண்டும் இந்த விலை உயர்வை மோடி அரசு உடனே திரும்பப் பெற்று பழைய விலைக்கே கொடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைவாக இருக்கும் நிலையில், பெட்ரோல், டீசல் விலையைத் தாறுமாறாக உயர்த்தி லிட்டர் 40 ரூபாய்க்கு விற்க வேண்டிய பெட்ரோலை 86 ரூபாய்க்கு விற்று மக்களைச் சுரண்டுகிறது மோடி அரசு. அது போதாதென்று சமையல் எரிவாயு விலையையும் தன் விருப்பம்போல் உயர்த்தி வருகிறது. கடந்த 12 நாட்களில் மட்டும் சிலிண்டர் ஒன்றுக்கு 100 ரூபாய் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த டிசம்பர் 3ஆம் தேதி சிலிண்டர் விலை 610 ரூபாயிலிருந்து 660 ரூபாயாக உயர்த்தப்பட்டது. டிசம்பர் 15ஆம் தேதி முதல் அது 710 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மோடி அரசின் இந்த மக்கள் விரோதப் போக்கை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. கொரோனா பெருந்தொற்றால் வேலையோ, வருமானமோ இல்லாமல் அவதிப்படும் மக்களிடம் இப்படி அப்பட்டமாகக் கொள்ளையடிக்கும் அரசாங்கம் உலகில் எந்த நாட்டிலும் இல்லை. 'கார்ப்பரேட் முதலாளிகளுக்குக் கடன் தள்ளுபடி ஏழை மக்களுக்கு விலை உயர்வு' என்பதுதான் மோடி அரசின் தாரக மந்திரமாக உள்ளது. ஏழை, நடுத்தர வர்க்க மக்களின் வயிற்றிலடிக்கும் இந்த சிலிண்டர் விலை உயர்வைத் திரும்பப் பெற வேண்டும். பழைய விலைக்கே எரிவாயு சிலிண்டர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறோம்'.



# ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் மீதான 04 வழக்குகளும் இரத்து

தமிழக காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் மீது தமிழக அரசு தொடர்ந்திருந்த 4 அவதூறு வழக்குகளை இரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2016ல் மதுக்கடைகள், துணை வேந்தர் நியமனம் என பல விவகாரங்களில் அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவை விமர்சித்து இளங்கோவன் பேசியிருந்தார்.

# கெஸ்பேவ நகர சபை

## கேள்விக்கான அழைப்பு

### அரங்கேற்ற மண்டப கதிரை வழங்கிப் பொருத்துவதற்கான விலைமனுக் கோரல்

கெஸ்பேவ நகர சபையின் அரங்கேற்ற மண்டபத்திற்காக புதிதாக கிட்டத்தட்ட 400 கதிரைகளை வழங்கிப் பொருத்துவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

இதற்காக ரூ. 1000/- மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை கெஸ்பேவ நகர சபையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டை கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் 2020.12.16 முதல் 2020.12.28 வரை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் அத்துடன் கேள்விகளை சமர்ப்பிக்கும் போது முழுமையான கேள்விப் பெறுமதியின் 1% ஆன கேள்விப் பிணைமுறி சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மூலையில் 'அரங்கேற்ற மண்டப கதிரைகளை வழங்கிப் பொருத்துவதற்கான விலைனு' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

மேலும் விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் மீண்டும் ஒரு உறையில் இட்டு ஒப்படைத்தல் வேண்டும்.

பொறியிடப்பட்ட கேள்வி விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2020.12.30 பி.ப. 3.00 இற்கு முடிவடைவதுடன் அந்நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நகர சபை தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

இக்கேள்வி கோரல் பற்றிய முழுமையான அதிகாரம் கெஸ்பேவ நகர சபைக்கு உரியதுடன் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். அரங்கேற்ற மண்டப வளாகத்தைப் பரீட்சித்துப் பார்த்தல், கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் அல்லது மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளல் அலுவலக நேரங்களில் நகர சபையின் கணக்காளரிடம் விசாரித்து பெற்றுக்கொள்ளலாம். (0112-618197)

**லக்ஷ்மன் பெரேரா**
**தலைவர்,**
**கெஸ்பேவ நகர சபை**
**2020.12.14**

# பஸ்பாகே கோறளை பிரதேச சபை

## ரபுக்பிட்டி, நாவலப்பிட்டி

கீழ் குறிப்பிட்ட பொருட்களை விநியோகிப்பதற்காக மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக பதிவு செய்ய விருப்பம் உடைய விநியோகத்தர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு விடயத்திற்கும் கீழ்குறிப்பிட்ட பதிவு கட்டணங்களுடன் விண்ணப்பப்படிவங்களை பஸ்பாகே கோறளை பிரதேச சபை, ரபுக்பிட்டிய என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்ப வேண்டும்.

**பதிவு செய்வதற்காக இறுதி திகதி 2021.01.31**

**பதிவு செய்வதற்கான கட்டணம்**

| 01. | பொருட்கள் விநியோகம் | கட்டணம் |
|---|---|---|
| I. | அனைத்து வகையான காகிதாதிகள் | 1500.00 |
| II. | அலுவலக உபகரணங்கள் | 2000.00 |
| III. | தளபாடங்கள் மற்றும் இரும்பு உபகரணங்கள் | 2000.00 |
| IV. | அனைத்து வகையான மின் உபரணங்கள் | 1500.00 |
| V. | சுகாதார உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள் | 1000.00 |
| VI. | அச்சிடும் நடவடிக்கைள் மற்றும் புகைப்பட நடவடிக்கைாள் | 2000.00 |
| VII. | வாகன மற்றும் மிருக அனுமதிப்பத்திர இலக்க தகடு | 500.00 |
| VIII. | கட்டிட பொருட்கள் (கருங்கல், மணல், சுண்ணாம்பு) | 2000.00 |
| IX. | வாகன உதிரிப்பாகங்கள் | 2000.00 |
| X. | நீர் குழாய்கள் மற்றும் உபகரைணங்கள் | 2000.00 |
| X. | கொங்கீறீட் தொடர்புடைய பொருட்கள் விநியோகம் | 1000.00 |
| XII. | டயர், டியுப், மற்றும் பெட்டறி | 2000.00 |
| XIII. | ஆடைகள் மற்றும் சீருடை விநியோகித்தல் | 2000.00 |
| XIV. | தட்டச்சுபொறி நகல் இயந்திர போட்டோ பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திர உபகரணம் விநியோகித்தல் | 2000.00 |
| XV. | மழை ஆவரணம் (ரெயின்கோட்) / பூட்ஸ், / சப்பாத்து மேஸ் | 1500.00 |
| XVI. | பலகை விநியோகித்தல் (பலகை/ பராலை/ ரிப்பை மரக்கன்றுகள், உரவகைகள், எண்ணை மற்றும் தோட்ட அலங்காரத்திற்கு தேவையான பொருட்களை விநியோகித்தல்) | 1500.00 |
| XVII. | இறப்பர் முத்திரை மற்றும் பிளாஸ்டிக் உபகரணங்களை விநியோகித்தல் | 1000.00 |
| XVIII. | அலுவலக அடையாள அட்டை விநியோகித்தல் | 1000.00 |
| XIX. | முன்பள்ளி பாடசாலை உபகரணங்கள் மற்றும் விளையாட்டு மைதான உபகரணங்களை விநியோகித்தல் | 1000.00 |
| **02.** | **சேவைகள் விநியோகம்** | **கட்டணம்** |
| I. | உணவு பானங்கள் விநியோகித்தல் | 1500.00 |
| II. | போக்குவரத்து கட்டணம் | 1500.00 |
| III. | வாகனம் மற்றும் உதிரிப்பாகங்கள் புதுப்பித்தல் | 3000.00 |
| IV. | வாகன பராமரிப்பு | 3000.00 |
| V. | அலுவலக உபகரங்கள் புதுப்பித்தல் | 1500.00 |
| VI. | அளவீட்டு நடவடிக்கைகள் | 3000.00 |
| VII. | நிறைவு செய்தல் வேலைகள் | 2000.00 |
| VIII. | வாகன இருக்கை ஆவரணங்கள் செய்தல் மற்றும் குஷன் செய்தல் | 1500.00 |

மேலதிக தகவல்களுக்கு அலுவலக நேரங்களில் 054-4922922 அல்லது 054-4929024 தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

**03. ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்**

ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்வதற்கு இந்த அலுவலகத்தில் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி உங்களின் வருமான சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தக்காரராக பதிவு செய்தல் கட்டணம் - ரூ. 2000.00

**04. வடிவமைப்பாளர்களாக பதிவு செய்தல்**

பதிவு செய்யும் கட்டணம் ரூ. 2000.00 விண்ணப்பப்பத்திர கட்டணம் - ரூ. 200.00

**05. விதிமுறைகள்**

I. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விநியோகத்திற்கும், சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பப் படிவங்களை முன்வைக்க வேண்டும்.

II. பதிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் சாதாரணமாக விலைமனு கோரப்படும். ஒவ்வொருவரும் முன்வைக்கப்படும் விலை மனுக்களின் குறைந்தது 03 மாதங்களுக்கு மாற்றமில்லாமல் நிலையான தன்மையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

III. தேவைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் வேறு விநியோகத்தர்களிடம் பொருட்களை பெற்றுக்கொள்ளும் உரிமை சபைக்கு உண்டு. கோரிக்கை விடுத்தவுடன் பொருட்களின் விலைகளை முன்வைக்காவிட்டாலும், குறிப்பிட்ட தரத்திற்கு இணங்காமல் இருந்தாலும் விநியோகத்தர்களின் பதிவு ரத்து செய்யப்படும்.

IV. விலைமனு கோரல் சபையின் விருப்பப்படி நடைபெறும். கட்டணங்களை செலுத்துதல் காசோலை மூலம் 45 தினங்களுக்கு இடையில் செலுத்தப்படும்.

**ஓ. ஜீ. ரோகண பண்டார**
**தலைவர்,**
**பஸ்பாகே கோறளை பிரதேச சபை**
**ரம்புக்பிட்டி**

2020/11/18
**பஸ்பாகே கோறளை பிரதேச சபை**
**ரம்புக்பிட்டி.**

# ஐ.சி.டி உபகரணங்கள் கொள்முதல்

**சுகாதார அமைச்சகம் (MOH)**
**மலேரியா தடுப்பு இயக்கம் (AMC)**

## ஏலதாரர்களின் தேர்வு

எம்.சி.யில் உள்ள மடிக்கணினிகள் டெஸ்க்டாப் கணினிகள், டாப்லெட் கணினிகள் காப்புப்பிரதி சேவையகம் மற்றும் சேவையக அறை ஆகிய ஐ.சி.டி வசதிகளை மேம்படுத்த சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு விரும்புகிறது.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் மலேரியா தடுப்பு இயக்கம், 555/5, பொது சுகாதார வளாகம் 5வது மாடி, எல்விடிகல மாவத்தை, கொழும்பு-05 நிதிக் கிளையிலிருந்து ஏல ஆவணங்களைப் பெறலாம்.

ஏலமிடும் ஆவணங்களைப் பெறுவதற்கு முன், மறு நிதியளிக்கப்படாத டெண்டர் கட்டணம் ரூ 3500.00 கணக்காளரிடம் வைப்பு செய்யப்பட வேண்டும்

அனைத்து ஏலங்களும் 1.5% பெறுமதியான ஏல பத்திரங்களுடன் (Bid Bonds) இருக்க வேண்டும்

ஏல ஆவணங்களின் அசல் நகல் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேலேயுள்ள முகவரிக்கு 06.01.2021 பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாகவோ வழங்கப்பட வேண்டும்.

# கொழும்பு மாநகர சபை

**மாநகர பொறியியல் திணைக்களம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## கேள்விகள் திறக்கப்படும் திகதியை நீடித்தல்

01. கொழும்பு-06, குரே விளையாட்டரங்கில் உத்தேச பார்வையாளர் அரங்கை நிர்மாணித்தல்

2020-12-18ஆம் திகதி திறக்கப்படுவதற்கிருந்த மேற்குறிப்பிடப்பட்ட கேள்வி 2020-12-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் கேள்வி ஆவணங்கள் 2020-12-23ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை வழங்கப்படும்.

- ❖ கேள்வி கோரலின் செல்லுபடியாகும் காலம்: 2021-06-21
- ❖ கேள்விப் பிணை முறியின் செல்லுபடியாகும் காலம்: 2021-07-21

**சட்டத்தரணி**
**ரோஷினி திசாநாயக்க,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை,**
**நகரமண்டபம்,**
**கொழும்பு-07.**

# விலைமனுக்கோரும் அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு**

## ஒருகொடவத்தையிலுள்ள இல. 04 மசகு எண்ணெய் களஞ்சிய தாங்கியை பழுதுபார்த்தல் மற்றும் நிறப்பூச்சிடல்

**விலைமனு எண் - REF-PL/103/2020**

ஒருகொடவத்தையிலுள்ள இல. 04 மசகு எண்ணெய் களஞ்சியசாலை தாங்கியை பழுதுபார்த்து மற்றும் நிறப்பூச்சிடுவதற்காக, திணைக்கள பெறுகைக் குழு (DPC) இத்தால் விலைமனுக்களை அழைக்கின்றது.

பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரம் விலைமனுக்கோருவதற்கு தகைமை பெறுவதுடன் பின்வரும் தகைமைகளை நிரூபிப்பதற்கு ஆவணச் சான்றுகளை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்களுக்கு மாத்திரம் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

- கடந்த 5 வருட காலப் பகுதியில் API தரம் 650/653 (அண்மைய பதிப்பு) இற்கு அமைவாக இரும்பு தாங்கி நிர்மாணிப்பு/ பராமரிப்பை மேற்கொள்வதில் உள்ளூர் விலைமனுதாரர்கள் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டியதுடன் EMI தரத்திற்காக இலங்கை நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (சீடா) பதிவையும் கொண்டிருக்க வேண்டும்.

  அல்லது

  குறித்த உள்ளூர் விலைமனுதாரர்கள், CPC/CPSTL இல் அல்லது எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் கடந்த 5 வருட காலப்பகுதியில், API தரம் 650/653 (அண்மைய பதிப்பு) அமைவாக, 50 மில்லியன் ரூபாவிற்கும் குறையாத பெறுமதியையுடைய இரும்பு தாங்கி நிர்மாணிப்பு/ பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- வெளிநாட்டுக் கம்பனியொன்றுடன் பதிவு செய்யப்பட்ட ஒரு உள்ளூர் கம்பனி கூட்டு முயற்சியொன்றை மேற்கொண்டிருப்பின் வெளிநாட்டு கம்பனியானது, கடந்த 5 வருட காலப்பகுதியில் 250,000.00 ஐக்கிய அமெரிக்க டொலரிற்கும் மேற்பட்ட பெறுமதியையுடைய பொறிமுறை பொறியியல் நிர்மாணிப்பு/ பராமரிப்பு வேலையை மேற்கொண்டிருக்கும் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் அதில் ஏதாவதொரு தரப்பினர், API தரம் 650/ 653 (அண்மைய பதிப்பு) அமைவாக இரும்பு தாங்கி நிர்மாணிப்பு/ பராமரிப்பு அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கோரும் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படும் போது சுத்திகரிப்புப் பிரிவின் நிதியியல் பிரிவிற்கு ஒரு மீளளிக்கப்படாத விலைமனு வைப்பான ரூ. 20,000/- (பெசேவ உள்ளிட்டது) செலுத்தப்படல் வேண்டும். மதிப்பீடு தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படுவதற்கு இந்த பற்றுச்சீட்டின் பிரதியொன்று விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும். இருந்தபோதிலும், www.ceypetco.gov.lk மற்றும் www.news.lk என்ற இணையத்தளங்களிலும், இந்த விலைமனுக்கோரும் ஆவணங்களை விலைமனுதாரர்களுக்கு பரீட்சித்துப் பார்க்கலாம்.

அனைத்து விலைமனுதாரர்கள் அல்லது உரிய முறையில் அதிகாரம் வழங்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள், களனி, சப்புகஸ்கந்த, CPC சுத்திகரிப்பு பயிற்சி நிலைய விரிவுரை மண்டபத்தில், 2020 டிசம்பர் 30ஆம் திகதி, 10.00 மணிக்கு இடம்பெறும் 'முன்னோடி விலைமனுக்கூட்டம் மற்றும் தள விஜயத்தில் தாமாகவே சமுகமளிக்க வேண்டும்.

விலைமனுக் கோரும் ஆவணங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி மற்றும் நேரம் 2020 டிசம்பர் 30ஆம் திகதி, 15.00 மணிக்கு என்பதுடன் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படும். முடிவுத் திகதி மற்றும் நேரம் மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படுவது 2021 ஜனவரி 12ஆம் திகதி 14.30 மணிக்காகும்.

விலைமனுக்கோரும் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்கள், இலங்கை, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, திட்டமிடல் பிரிவு, பிரதி சுத்திகரிப்பு முகாமையாளரிடமிருந்து (பராமரிப்பு மற்றும் செயற்திட்டங்கள்) பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

பெக்ஸ் - 94112400436

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (உயர்மட்டத்திலானது)**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சப்புகஸ்கந்த,**
**இலங்கை.**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 301 -1XXX | NISSAN | CEFIRO A32 | 1996 |
| **கெப்** | | | |
| DAB -0XXX | TATA | XENON LIGHT TRUCK | 2015 |
| **லொறி** | | | |
| JJ -2XXX | TOYOTA | DYNA BU107 | 1999 |
| PR -1XXX | TATA | ACE | 2011 |
| PT -6XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PY -7XXX | TATA | ACE EX 2 | 2014 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| QC -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QM -7XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QQ -8XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| AAX-0XXX | BAJAJ | RE | 2015 |
| **டிராக்டர்** | | | |
| RD -6XXX | JOHN DEERE | 5047 D | 2013 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112088505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2020 டிசம்பர் 17ஆம், 18ஆம், 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2020 டிசம்பர் 22ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

**தலைமை அலுவலகம்**
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

Mercantile Investments and Finance PLC

www.skillsads.com

தொடர்பு:
**ஜானக்க - 0711624559 / குமார - 070 1599025**


To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT



Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!




- Auto Focus



- Vehicle Rent / Wanted

Sunday Observer adz Magazine Issued with Sunday Observer



- Photo Classifieds

Hot Line - 011 2 429 369/ 011 2 429 368
E-mail - adzsuo@gmail.com



Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

321

### வெற்றிடங்கள்

தோட்டத்துறை

கேகாலை தெஹிஓவிட்ட பிரதேசத்தில் 40 ஏக்கர் தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறித்தல், ரப்பர் பால் வெட்டுதல் பற்றிய வேலை செய்யக்கூடிய கு டும்பங்கள் தேவை. தோட்ட வீடு இலவசம் / அரசு அனுமதித்த சம்பளம் EPF/ ETF உட்பட மேலதிக வேலைக்கு வேறு கொடுப்பன வுகள். தொடர்பு 077 7779406. 076957



## afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.07.2019 / 30.08.2019 / 30.09.2019 / 31.10.2019 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 30.12.2020 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி மற்றும் வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதிஇராஜகிரிய

30.12.2020

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

1956 இல் இருந்து எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி

அடகுச் சேவைத் தலைவர்

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ

722, கோட்டை வீதிஇராஜகிரிய

தொலை : 0115 573600


### பொது மக்களுக்கான அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பொது மக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல் கம்பனியின் பழைய பெயர்: **லக்கி லெஷர் (பீவீடீ) எல்டீடி**

பதிவு இலக்கம் - PV 00217958

பதிவு அலுவலகம் - **இல. 227, வைத்தியசாலை வீதி, களுபோவில, தெஹிவளை**

புதிய பெயர்: **லக்கீ இனொவேஷன்ஸ் குளோபல் (பீவீடீ) எல்டீடி**

### பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம், பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:

**சிறிகத்த இன்டஸ்ட்ரீஸ் (பிவீடி) எல்டிடீ**

பதிவிலக்கம்: **பிவீ 00229331**

கூட்டிணைப்புத் திகதி:

**2020.10.20**

பதிவு முகவரி:

**எல்ஹேன, யட்டடோலவத்த, மத்துகம.**

**கம்பனி செயலாளர்**

## அக்கரைப்பற்று மாநகர சபை

## பெறுகை அறிவித்தல்

### வறிய மக்களுக்கான வாழ்வாதார செயற்றிட்டம் - 2020 பாதீடு

மேற்படி செயற்றிட்ட த்தின் கீழ், கீழ்வரும் பொருட்களை பெற்றுக்கொளவதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

தகவுடைய, அக்கறையுடைய திறத்தவர்கள் 16.12.2020 ம் திகதி முதல் 28.12.2020 ம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப 3.00 மணி வரை மீளளிக்க முடியாத ரூபா 1500 இனைச் செலுத்தி அல்லது Akpmcfincma@Gmail.Com எனும் மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொண்டு விலைக்கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்களை 28.12.2020 ம் திகதி பி.ப 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் ஊடாக அல்லது நேரடியாக விலை மனுக் கேள்விப் பெட்டியில் இடலாம்.

உரிய தினத்தில் பி.ப 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் மனுதாரர் அல்லது மனுதாரர் சார்பில் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம். பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

பொருட்களின் விபரம்: வீட்டுப்பாவனை தையல் இயந்திரம் (தையல் இயந்திர மேசை, மோட்டர் உட்பட), அரிசி மாவு அரைக்கும் இயந்திரம், மிளகாய்த்தூள் அரைக்கும் இயந்திரம், தேங்காய் துருவும் இயந்திரம்.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**மாநகர சபை**
**அக்கரைப்பற்று.**
**16.12.2020**

### 1964ம் ஆண்டு 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்த) சட்டத்தின் திருத்தின் படி காணி சுவீகரித்தல் சட்டம் (460வது அத்தியாயம்) 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்

**குறிப்பு இலக்கம் தொ/இ/1/அத்/53/சுனாமி**

இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 1504/8 கொண்ட 2007.07.03ஆந் திகதியிடப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : களுத்துறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : தொடனகடை |
| ஊர் பெயர்கள் | : பிபிலியாவத்த |
| காணிக்ளின் பெயர்கள் | : பயாகல அழுதகேன கொடச |
| திட்டவரை இலக்கம் | : மு.பி.க. 3779 |
| துண்டு இலக்கம் | : 01 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார் 9.249 |

**பிரதேச செயலாளர்**
**தொடனகடை**

**முகவரி: பிரதேச செயலாளர்**
**தொடனகடை**
**திகதி: 2020.11.11ஆந் திகதி**


The Housewives' companion
Classifieds on
Daily News


## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி
## பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடுபட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்த தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

| திகதி | ஏலம் விடும் இடம் |
|---|---|
| 2021 ஜனவரி மாதம் 06 | இல. 28 மற்றும் 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.<br>இல. 63C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.<br>விக்டரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ<br>இல. 179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.<br>இல. 103, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.<br>இல. 86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.<br>இல. 140பி, கொழும்பு வீதி, குருணாகல்.<br>இல. 311J, ரங்வல சந்தி, கேகாலை. |
| 2021 ஜனவரி மாதம் 07 | இல. 579, காலி வீதி, வெள்ளவத்த.<br>இல. 14, மங்கல வீதி, கம்பஹா.<br>இல. 348, காலி வீதி, பாணந்துறை.<br>இல. 837E, தலங்கம வடக்கு, மாலபே.<br>இல. 173, இரத்தினபுரி வீதி, ஹொரணை.<br>இல. 18பி, பிலியன்தல வீதி, மஹரகம.<br>இல. 546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.<br>இல. 498, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை, கொழும்பு 03<br>இல. 64, மாகொல வீதி, கிரிபத்கொடை |
| 2021 ஜனவரி மாதம் 08 | இல. 01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.<br>இல. 131, நுவரெலியா வீதி, கம்பளை.<br>இல. 115/1, நவனகர வீதி, அம்பிலிபிட்டிய.<br>முதுகுமாரன கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராமை.<br>இல. 46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.<br>இல. 80, கண்டி வீதி, நுவரெலியா. |

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் முகாமையாளர் வசமானதாகும்.

**சிரேஷ்ட தங்கக் கடன் முகாமையாளர்**
**சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி**
**இல. 498, ஆர் ஏ டி மெல் மாவத்தை, கொழும்பு 03.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை
(University of Ruhuna, Wellamadama, Matara)

1. கீழே வழங்கப்பட்டுள்ள தரம் மற்றும் விஷேடத்துவம் ஆகியவற்றிற்காக இலங்கை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை றுஹுணு பல்கலைக்கழக துணை வேந்தரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| இல. | வேலைகள் | CIDA தரம் (கட்டிடங்கள்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) | மீளளிக்கப் படும் கேள்விக் கட்டணம்/ விலை மனுப் பிணை (ரூபாவில்) | பொறியியலாளரின் மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | ஒப்பந்தக் காலப் பகுதி (நாட்களில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | காலி, ஹப்புகல, றுஹுணு பல்கலைக்கழக பொறியியல் பீடத்தை ஒருங்கிணைக்கப்பட்ட கற்கைநெறிகள் ஆய்வுகளுக்கான திணைக்களத்திற்கான கணனி நிலையமாக பாவிப்பதற்காக பழைய நூலக கட்டிடத்தை புதுப்பித்தற்கான உத்தேசித்தல். (RUH/REHAB/ENG/2020/01) | சி-6 அல்லது சி-5 | 4000.00 | 110,000.00 | 11.39 | 75 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒவ்வொரு விலைமனுவிற்கும் மேலே குறிப்பிட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கொடுப்பனவை 2021 சனவரி 06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைமனுக்கள் 2021 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. அனைத்து விலைமனுக்களும் மேலே சுட்டிக்காட்டியவாறான விலைமனுப்பிணையொன்றுடனும் பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தின் நிழற்படப் பிரதியொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. விலைமனுப்பிணையானது, மாத்தறை, வெல்லமடம, றுஹுணு பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில் நிபந்தனையற்ற வகையில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2021 மே 06 ஆம் திகதிவரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்களை சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதியானது 2021 சனவரி 07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகும்.
8. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் மேலேயுள்ள மூடப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பெற்றுக் கொள்ளும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாத்தறை, வெல்லமடம, றுஹுணு பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 01 ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் மேலேயுள்ள முகவரியில் அவைகளை மூடியவுடனேயே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
10. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை மாத்தறை, வெல்லமடம, றுஹுணு பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான உதவிப் பதிவாளரிடமிருந்து (041-2227000 நீடிப்பு – 2131) பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக அலுவலக நேரங்களில் மேலேயுள்ள முகவரியில் பரீட்சிக்கலாம்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை.**
**17th December 2020.**

## இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை (SLPA)

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் கு ழு வி ன் தலைவர் அழைக்கின்றார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபா) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/19/PT/11/057 | 15 Nos. Motor Tyres 18.00x25 Tubeless 40 PLY for Mitsui Paceco RTGCS | 90,000.00 | 1,000.00 | 2020.12.24 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/PT/04/056 | Motor Tyres 1000x20 16PLY (Cross PLY) – 100 Nos. | 35,000.00 | 1,000.00 | 2020.12.24 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தத்தின் முழுமையான காலப்பகுதியிலும் கூறப்பட்ட சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளருக்காக மற்றும் அவர் சார்பாக அல்லது வழங்குநரொருவருக்கு முகவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்பட விரும்பினால், அவர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவை மேற்கொண்டு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.
3. ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்களில் மேலே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பிரதான முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்) பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 04 ஆம் நிரலில் வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2020 டிசம்பர் 20 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் இறுதித் திகதிக்கு முன்னைய நாள் வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு இறுதி நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இறுதி நேரத்தில் கீழேயுள்ள முகவரியில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்)**
**வழங்கல்கள் பிரிவு**
**இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409,2482652, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443.**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
### நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### CONSTRUCTION OF MINI REST AREA AT 8+000 (E01-LHS) OF SOUTHERN EXPRESSWAY

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இப்பணியானது தென்பகுதி அதிவேக பாதையில் 8+000 (E 01 – LHS) என்ற இடத்தில் சிறிய இளைப்பாறும் நிலையமொன்றை நிர்மாணிப்பதாகும்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | அவசர நேர்வுகள் நீங்கலாக பொறியியலாளரின் மதிப்பீடு – மில்லியன் ரூபாவில் | ICTAD தரம் | விலைமனுப் பிணை - ரூபாவில் |
|---|---|---|---|---|
| RDA/EOM&M/GOSL/ STDP/Mini Rest/ 2020/30 | Construction of Mini Rest Area on 9th KM (E01 – LHS) of Southern Expressway | 106.6 | C-4 | 1,600,000.00 |

2. ஒப்பந்தத்திற்கான நிர்மாணக் காலப்பகுதியானது 181 நாட்காட்டி நாட்களாகும்.
3. விலைமனுக்கோரலில் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை பின்பற்றப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக வெற்றிகரமான விலைமனுதாரர் தற்போது நெடுஞ்சாலைக்கான குறிப்பிட்டுள்ள தரம் அல்லது மேற்பட்டதில் நிர்மாணம் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பின்வரும் அலுவலகத்திலிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை அலுவலக நேரங்களில் பரீட்சிக்கலாம்.
   அ. பதில் கடமையாற்றும் பணிப்பாளர் (EOM&MD), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம.
   தொலைபேசி: 0113 047817, 0113 047806. தொலைநகல்: 0382289560
6. 2020.12.17 ஆம் திகதியிலிருந்து 2021.01.13 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.45 மணி வரையும் பெசேவ 1,600 ரூபா + 20,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பண்டாரகம, வலகம, கஹட்டஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை EOM&M பிரிவிற்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும். 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம்,கேள்வியின் முகவர் மற்றும் வெற்றிகரமான விலைமனுதாரர்கள் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
7. 2021.01.14 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 'மகனெகும மஹாமெதுர' 1 ஆம் மாடி, பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைமனுவின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 2021.04.15 ஆம் திகதி வரையும் இருத்தல் வேண்டும்.
9. 2021.05.13 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையானது விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. பண்டாரகம, வல்கம, கஹட்டஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை EOM&M பிரிவிற்கான பணிப்பாளரின் அலுவலகத்தில் 2021.01.05 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**1 ஆம் மாடி, 'மகனெகும மஹாமெதுர',**
**இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**

# இந்தியா - அவுஸ்திரேலியா மோதும் முதல் டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்



இந்தியா – அவுஸ்திரேலியா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி பகல் இரவு போட்டியாக அடிலெய்டில் இன்று (வியாழக்கிழமை) ஆரம்பம்.

விராட் கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 போட்டிக் கொண்ட ஒரு நாள் தொடரை அவுஸ்ரேலியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்திய அணி 20 இருபது தொடரை 2-1 என்ற கணக்கில் வென்றது.

அடுத்து இரு அணிகள் இடையே 4 டெஸ்ட் கொண்ட தொடர் நடைபெறவுள்ளது. இந்திய அணி அவுஸ்திரேலியாவில் முதல் முறையாக பிங்க் பந்து (இளம் சிவப்பு) போட்டியில் விளையாடவுள்ளது. அதாவது முதல் முறையாக பகல் இரவு டெஸ்டில் விளையாடுகிறது.

ஒட்டு மொத்தத்தில் இந்திய அணி விளையாடும் 2வது பகல் இரவு டெஸ்ட் ஆகும். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சொந்த மண்ணில் பங்களாதேஷ் அணிக்கெதிராக எதிராக பிங்க் நிற பந்தில் விளையாடிருந்தது.

இந்திய அணி அவுஸ்திரேலிய மண்ணில் ஒரே ஒரு முறைதான் டெஸ்ட் தொடரை கைப்பற்றியுள்ளது. 201819 ஆண்டில் விராட் கோலி தலைமையிலான அணி 4 டெஸ்ட் கொண்ட தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதனால் தற்போதைய இந்திய அணி மீது அதிக எதிர்பார்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில் விராட் கோலி முதல் டெஸ்ட் போட்டி முடிந்த பிறகு நாடு திரும்புகிறார். இது அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

**இந்திய அணி அறிவிப்பு**

அவுஸ்திரேலிய அணியுடன் இன்று முதல் டெஸ்ட்டில் விளையாடும் 11 வீரர்கள் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியுடன் இன்று முதல் டெஸ்ட்டில் விளையாடும் 11 வீரர்கள் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

கோலி தலைமையில் மயங்க் அகர்வால், பிரித்வி ஷா, புஜாரா, ரஹானே, ஹனுமா விஹாரி, அஸ்வின் , ஊமேஷ் யாதவ், முகமது ஷமி, பும்ரா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

ரீஷப் பந்துக்கு பதிலாக விருதிமான் சாஹா விக்கெட் காப்பாளராக விளையாட உள்ளார். ரசிகர்கள் பெரிதும் எதிர் பார்க்கப்பட்ட சுப்மன் கில், கேஎல்ராகுல் ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை.



## காயம் காரணமாக கூடுதல் நேரம் கிடைக்கும் – ரோஜர் பெடரர்

மெல்போர்னில் கடந்த ஜனவரி மாதம் நடந்த அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டியின் அரை இறுதியில் செர்பியா வீரர் ஜோகோவிச்சிடம் தோல்வி கண்ட பிறகு சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் காயம் காரணமாக எந்தவொரு போட்டியிலும் ஆடவில்லை.

இடது முழங்கால் காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்து இருக்கும் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரும், முன்னாள் முதனிலை வீரருமான பெடரர் இன்னும் முழு உடல் தகுதியை எட்டவில்லை. சுவிட்சர்லாந்தின் சிறந்த வீரர் விருதை பெற்ற பெடரர் அளித்த ஒரு பேட்டியில், 'கடந்த ஒக்டோபர் மாதத்துக்குள் முழு உடல் தகுதியை எட்டிவிடலாம் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நான் இன்னும் முழு உடல் தகுதியை பெறவில்லை. அவுஸ்திரேலிய பகிரங்க போட்டி கடினமானதாகவே இருக்கும். கடந்த 6 மாதங்களாக எனது உடல் தகுதியில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

உடல் தகுதிக்கான பணிகளை மேற்கொண்டு வருகிறேன். அடுத்த 2 மாதம் எப்படி அமையும், டென்னிஸ் களத்தில் எப்படி செயல்பட போகிறேன் என்பதை பார்க்கலாம்.

ஒருவேளை அவுஸ்திரேலிய பகிரங்க போட்டி ஜனவரி மாதத்தில் இருந்து பெப்ரவரி மாதத்துக்கு தள்ளிப்போகுமா? என்பதை ஆவலுடன் பார்க்கிறேன். அப்படி தள்ளிப்போனால் நிச்சயமாக இந்த போட்டிக்கு தயாராக கூடுதல் நேரம் கிடைக்கும்' என்று தெரிவித்தார்.



## லா லிகா கால்பந்து: மெஸ்சி கோலால் பார்சிலோனா அணி வெற்றி

பார்சிலோனாவில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் லயோனல் மெஸ்சி தலைமையிலான பார்சிலோனா கழக அணி, லெவாண்டே அணியை எதிர்கொண்டது.

20 அணிகள் இடையிலான லா லிகா கால்பந்து போட்டி தொடர் ஸ்பெயினில் நடந்து வருகிறது. இதில் பார்சிலோனாவில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் லயோனல் மெஸ்சி தலைமையிலான பார்சிலோனா கழக அணி, லெவாண்டே அணியை எதிர்கொண்டது.

பந்து அதிக நேரம் பார்சிலோனா அணியினரின் கட்டுப்பாட்டில் வலம் வந்தாலும் எதிரணியின் தடுப்பு அரணை தகர்த்து கோல் அடிக்க முடியாமல் தடுமாறினார்கள். இதனால் இந்த ஆட்டம் சமனிலையில் முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 76வது நிமிடத்தில் பார்சிலோனா அணி கோல் அடித்தது. அந்த அணி வீரர் பிரெங்கி டி ஜோங் கடத்தி கொடுத்த பந்தை தலைவர் மெஸ்சி கோல் வளையத்துக்குள் திணித்தார். அதன் பிறகு இரு அணியினரும் கோல் அடிக்க எடுத்த முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை.

முடிவில் பார்சிலோனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெலாண்டே அணியை தோற்கடித்தது. 11வது ஆட்டத்தில் ஆடிய பார்சிலோனா அணி 5 வெற்றி, 2 டிரா, 4 தோல்வியுடன் 17 புள்ளிகள் பெற்று 8வது இடத்தில் உள்ளது. ரியல் சோசிடாட் அணி 26 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறது.





## நியூஸிலாந்தில் மகளிர் உலகக் கிண்ணம்; போட்டி அட்டவணை வெளியீடு

நியூஸிலாந்தில் 2022இல் நடைபெறவுள்ள மகளிர் உலகக் கிண்ண (50 ஓவர்) கிரிக்கெட் போட்டிக்குரிய முழுமையான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ளது.

ஐசிசி மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி டௌரங்கா பே ஓவல் விளையாட்டரங்கில் 2022 மார்ச் 4ஆம் திகதி ஆரம்பமாகும்.

இறுதிப் போட்டி ஹேக்லி ஓவல் விளையாட்டரங்கில் 2022 ஏப்ரல் 3ஆம் திகதி பகல் இரவு போட்டியாக நடைபெறும்.

உலகின் அதிசிறந்த எட்டு மகளிர் அணிகள் பங்குபற்றும் மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி நியூஸிலாந்தின் ஆக்லண்ட், டௌரங்கா, ஹெமில்டன், வெலிங்டன், கிறைஸ்ட்சேர்ச், டனேடின் ஆகிய ஆறு விளையாட்டரங்குகளில் நடைபெறவுள்ளன. மொத்தமாக 31 போட்டிகள் நடைபெறவுள்ளன.

டௌரங்காவில் 2022 மார்ச் 4ஆம் திகதி நடைபெறவுள்ள ஆரம்பப் போட்டியில் வரவேற்பு நாடான நியூஸிலாந்தும் தகுதிகாண் அணி ஒன்றும் மோதும்.

இங்கிலாந்தின் லோர்ட்ஸ் விளையாட்டரங்கில் 2017இல் நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் மோதிய இங்கிலாந்தும் இந்தியாவும் டௌரங்காவில் 2022 மார்ச் 16ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டியில் ஒன்றை ஒன்று எதிர்த்தாடும்.

நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, இந்தியா ஆகிய ஐந்து அணிகள் 2022 மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாட ஏற்கனவே தகுதிபெற்றுவிட்டன.

எஞ்சிய மூன்று இடங்களைத் தீர்மானிக்கும் ஐசிசி மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்று இலங்கையில் 2021 ஜூன் 26ஆம் திகதியிலிருந்து ஜூலை 10ஆம் திகதிவரை நடைபெறும்.

இந்தத் தகுதிகாண் சுற்றில் இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான், பங்களாதேஷ், ஸிம்பாப்வே, அயர்லாந்து, தெர்லாந்து, தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, பப்புவா நியூ கினி ஆகிய பத்து நாடுகள் பங்குபற்றும்.மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் எட்டு அணிகளும் லீக் சுற்றில் ஒன்றை ஒன்று எதிர்த்தாடும்.

லீக் சுற்று முடிவில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் அரை இறுதிப் போட்டிகளில் விளையாட தகுதிபெறும்.

மகளிர் உலகக் கிணண கிரக்கெட் சுற்றுப் போட்டி நியூஸிலாந்தில் 2021 பெப்ரவரி 6ஆம் திகதியிலிருந்து மார்ச் 7ஆம் திகதிவரை நடைபெறவிருந்தது.

ஆனால், கொரோனா தொற்று நோய் காரணமாக பிற்போடப்பட்ட இந்த சுற்றுப் போட்டியை 2022இல் நடத்துவதாக ஐசிசி கடந்த ஆகஸ்ட் மாதம் அறிவித்திருந்தது.



## 19 வயதின் கீழ் ஆண்கள் உலகக் கிண்ணம்; தகுதிகாண் சுற்று மீள் அட்டவணை அறிவிப்பு

மேற்கிந்தியத் தீவுகளில் 2022இல் நடைபெறவுள்ள ஐசிசி 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் உலகக் கிண்ணத்துக்கான தகுதிகாண் சுற்று அடுத்த வருடம் நடைபெறும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

இவ் வருட முற்பகுதியில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் முதல் 11 இடங்களுக்குள் இடம்பெற்ற ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, நடப்பு உலக சம்பியன் பங்களாதேஷ், இங்கிலாந்து, இந்தியா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென் ஆபிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், ஸிம்பாப்வே ஆகிய அணிகள் நேரடியாக 2022 உலகக் கிண்ண அத்தியாயத்தில் பங்குபற்ற தகுதிபெற்றுள்ளன.

எஞ்சிய ஐந்து இடங்களைத் தீர்மானிக்கும் ஐந்து வலயங்களுக்கான தகுதிகாண் போட்டிகள் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது.

ஆசியா, அமெரிக்கா, கிழக்கு ஆசியா பசுபிக், ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய ஐந்து வலயங்களில் தகுதிகாண் போட்டிகள் நடைபெறும்.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை அதிகளவில் இருப்பதால் இந்த இரண்டு பிராந்தியங்களிலும் தகுதிகாண் சுற்று இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும் என ஐசிசி அறிவித்துள்ளது.

இதற்கு அமைய 34 அணிகள் மொத்தமாக தத்தமது வலயங்களில் தகுதிகாண் சுற்றில் பங்குபற்றவுள்ளன. அடுத்த வருடம் நடத்தப்படவிருந்த 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி கொரோனா தொற்றுநோய் காரணமாக ஒரு வருடத்தால் பிற்போடப்பட்டு 2022இல் நடத்தப்படவுள்ளது.

ஆசிய வலயத்துக்கான தகுதிகாண் சுற்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும். இதற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

ஐரோப்பிய வலய தகுதிகாண் சுற்று 2021 ஜூலை ஆகஸ்ட் மாதங்களிலும் அமெரிக்க வலய தகுதிகாண் 2021 ஆகஸ்ட் மாதத்திலும் ஆபிரிக்க வலய தகுதிகாண் சுற்று 2021 செப்டெம்பர் மாதத்திலும் கிழக்கு ஆசியா, பசுபிக் வலய தகுதிகாண் சுற்று 2021 அக்டோபர் மாதத்திலும் நடைபெறும்.

தென் ஆபிரிக்காவில் இந்த வருட முற்பகுதியில் நடைபெற்ற பத்தாவது 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கையின் முன்னாள் வீரர் நவீத் நவாஸின் பயிற்றுவிப்பிலான பங்களாதேஷ் சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொச்சேவ்ஸ்ட்ரோமில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியாவை அக்பர் அலி தலைமையிலான பங்களதோஷ் 3 விக்கெட்களால் வெற்றிகொண்டு சம்பியனாகியிருந்தது.

## பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட்: கொலின் டி கிராண்ட்ஹோம் விலகல்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் இருந்து சகலதுறை வீரரான கொலின் டி கிராண்ட்ஹோம் விலகியுள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. வலது பாதத்தில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக இத்தொடரிலிருந்து அவர் விலகியுள்ளதாக தலைமை பயிற்சியாளர் கேரி ஸ்டீட் விளக்கம் அளித்துள்ளார். ஜனவரி நடுப்பகுதியில் அவர் குணமடைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அணித்தலைவரான கேன் வில்லியம்சன் ரி20 தொடருக்கான காத்திருப்பு பட்டியலில் உள்ளார். ஏனெனில் அவரது முதலாவது குழந்தை பிறக்கவுள்ளதால், அவர் இத்தொடரில் விளையாடுவது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது. எனினும் அவர் இரண்டாவது ரி20 போட்டியில் அணியுடன் இணைவார் என தெரிகிறது. இதுதவிர சுழற்பந்து வீச்சாளரான அஜாஸ் படேல் காயத்திலிருந்து மீண்டுள்ள நிலையில், தனது உடற்தகுதியை நிரூபிக்க நியூசிலாந்து 'ஏ' அணியுடன் இணைவார்.

முன்னதாக நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ரி20 தொடருக்கு பிறகு முதுகுவலியால் அவதிப்பட்டுவரும் வேகப்பந்து வீச்சாளர் லொக்கி பெர்குசன் மீதான ஸ்கேன் முடிவுகள் வரவிருக்கின்றன. இதைப் பொறுத்து அவர் விளையாடுவது தீர்மானிக்கப்படும்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடர் மற்றும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக நியூஸிலாந்துக்கு விரைந்துள்ளது. இதில் முதலாவதாக ரி20 தொடர் நடைபெறுகின்றது. இதன் முதல் ரி20 போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி ஒக்லாந்து ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 டிசம்பர் மாதம் 17ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.